# 6th ANNUAL RESEARCH SESSION
# 2024

# ABSTRACTS



ஒன்றிணைந்த சமூகப்பபொறுப்பு: சிறந்த தேசத்தை உருவாக்குதல்

## Integrated Social Responsibility: Creating a Better Nation

**FACULTY OF ARTS & CULTURE**

**EASTERN UNIVERSITY, SRI LANKA.**

# ஒன்றிணைந்த சமூகப் பொறுப்பு: சிறந்த தேசத்தை உருவாக்குதல்

# Integrated Social Responsibility: Creating a Better Nation

## 6th Annual Research Session-2024

Faculty of Arts & Culture
Eastern University, Sri Lanka.

**Title** : Integrated Social Responsibility: Creating a Better Nation


**Editorial Board**

**Chief Editor** : Prof. J. Kennedy

**Co-editors** : Mr. A. Jaufer Hussain
Mrs. V. Selvanayagam
Mr. S.L. M. Nashmal
Mrs. S. Mekala
Mr. V. Sasikaran
Mr. M.L. Mohamed Helfan
Dr. M. Somathasan
Mr. P. Suman
Mrs. Vithukshana Dilaxshan



**Edition** : 2024

**Published by**: Faculty of Arts & Culture, Eastern University, Sri Lanka.

**ISBN** : 978-624-5731-42-8

# 6th Annual Research Session-2024

**(ARS – 2024)**

## Organizing committee

**Chairman** : Dr.V.Gunapalasingam

**Coordinator** : Dr. S. Jeganathan

**Secretary** : Mrs. Vijitha Thivakaran

**Treasurer** : Dr. M. B. Fowzul

**Advisory Board** : Prof.V.Gunaretnam
Prof.T.Krishnamohan
Prof.V.Inpamohan
Prof.S.Santhirasegaram
Prof. J. Kennedy
Prof.K. Rajendram
Prof.S.Jeysankar
Prof.K.Suresh
Prof. (Mrs.). S. Kesavan

## Message from the Vice Chancellor, Eastern University, Sri Lanka



**Prof. Vallipuram Kanagasingam**
**Vice-Chancellor**
**Eastern University, Sri Lanka**

---

It is with great pleasure that I welcome you all to this significant conference - of the 06th Annual Research Session - 2024 centered on the theme of "Integrated Social Responsibility: Creating a Better Nation" hosted by the Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka. As we gather to deliberate on this vital subject, I am reminded of the profound impact that socially responsible actions can have in shaping the fabric of our society.

"Purify yourself, and the world will undoubtedly undergo purification. The world will change if we change; if we are pure, the world will become pure" quoted by Swami Vivekananda. This quote emphasizes the importance of personal growth and self-improvement in order to create a better society. By focusing on our actions and behaviors, we can inspire positive change and contribute to the overall betterment of the world. I believe that our discussions will explore the theoretical underpinnings of social responsibility and highlight practical approaches that can be implemented to foster a more inclusive and equitable nation.

Social responsibility is about recognizing the interdependence between individuals, organizations, and communities, calling for ethical practices, sustainable development, and the well-being of all citizens. As we face an increasingly complex global landscape, the need for integrated social responsibility becomes even more pronounced. This conference provides a platform to exchange ideas and strategies on how to integrate these principles into every aspect of national life.

The theme, "Creating a Better Nation," calls for contributing to a society where every individual has the opportunity to thrive, addressing issues such as poverty, inequality, and environmental degradation. The conference's insights will inspire bold steps towards achieving this vision. I believe that the insights gained from this conference will inspire us all to take bold steps towards achieving this vision.

The conference's coordinator, organizers, committee members, Keynote Speaker, presenters, and participants are commended for their dedication and expertise in advancing the discourse on social responsibility and its role in nation building. As we engage in these discussions, I encourage you all to think critically, share your experiences, and collaborate on innovative solutions that can drive meaningful change.

In conclusion, let us remember that the responsibility to create a better nation rests with each one of us. By working together and embracing the principles of social responsibility, we can build a future that is equitable, inclusive, and sustainable for generations to come.

I wish you all a successful and enriching conference.

## பீடாதிபதியின் செய்தி, கலை கலாசார பீடம்



**கலாநிதி வ.குணபாலசிங்கம்**
**பீடாதிபதி, கலை கலாசார பீடம்,**
**கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.**

கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசார பீடத்தின் ஆய்வு நடவடிக்கைகளில் ''வருடாந்த ஆய்வு அமர்வு'' எனும் தலைப்பில் ஒவ்வொரு வருடமும் நடத்தப்படும் ஆய்வு மாநாடு தற்கால சமூகத்தின் நடைமுறைசார் தேவைப்பாடுகளை மையப்படுத்திய தொனிப்பொருளில் அமைவது வழமையானது. இந்தவகையில் 2024 ஆம் ஆண்டு நடைபெறும் ஆறாவது வருடாந்த ஆய்வு அமர்வானது ''ஒன்றிணைந்த சமூகப்பொறுப்பு: சிறந்த தேசத்தை உருவாக்குதல்'' எனும் தொனிப்பொருளில் அமைகின்றது. இத்தகைய நடைமுறைசார் தொனிப்பொருளில் அமையும் இவ் வருட மாநாட்டிற்கு உங்கள் அனைவரையும் நான் மிகவும் பெருமையுடனும் ஆர்வத்துடனும் வரவேற்றுக் கொள்கின்றேன்.

வழமைபோல் இம்மாநாடும் அதன் தொனிப்பொருளோடு தொடர்புடைய பல உள்நாட்டு, வெளிநாட்டு ஆய்வாளர்களின் பல்துறைசார்ந்த, பன்முகநோக்குடைய ஆய்வுக்கட்டுரைகளைத் தாங்கிய மாநாட்டு ஆய்வு மலர் ஒன்றினை வெளியிடுகின்றது. இம்மாநாட்டு ஆய்வு மலருக்கு கலை கலாசார பீடத்தின் பீடாதிபதி என்ற வகையில் வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் நான் பெருமகிழ்வடைகின்றேன்.

பொதுவாக, பல்கலைக்கழகங்களின் கல்விசார் நடவடிக்கைகள் வெறுமனே கற்றல் - கற்பித்தல் என்ற முறையில் மட்டும் அமையாது, ஆய்வு, ஆராய்ச்சி, கண்டுபிடிப்புகள், புத்தாக்கம் எனப் பல்நோக்குடையனவாக விளங்குகின்றன. பல்கலைக்கழகங்களின் கற்றல் - கற்பித்தல் முறைமையானது ஆய்வுசார் செயற்பாடுகளை முன்னெடுக்கும் வகையில் அதற்குரிய அடித்தளத்தில் நின்று வகுப்பறைக்கற்றல், சுயகற்றல், உள்ளகப்பயிற்சிநெறி, ஆய்வு நடவடிக்கைகள் என மாணவர்களை ஊக்குவிக்கின்றது. கோட்பாடுகள், கொள்கைகள் மூலம் கற்ற விடயங்களை மாணவர்கள் களப்பயணம், நடைமுறைசார்ந்த பிரயோகம், படைப்பாக்கம், தர்க்கியல் மற்றும் பகுப்பாய்வு முறைகள் மூலம் ஆய்வுச் செயற்பாடுகளாக வெளிப்படுத்துகின்றனர். இவ்வாறான ஆய்வுசார் செயற்பாடுகளை எமது பீடத்தின் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள் தொடர்ந்தும் முன்னெடுத்து வருவது வரவேற்கத்தக்கதாகும்.

''ஒன்றிணைந்த சமூகப் பொறுப்பு: சிறந்த தேசத்தை உருவாக்குதல்'' என்ற இம்மாநாட்டின் தொனிப்பொருளானது சமூக மாற்றத்திற்கான ஒரு சக்திவாய்ந்த ஊக்கியாக உள்ளது. ஒருங்கிணைவு, சமூகப் பொறுப்பு ஆகியவற்றின் மூலம், மாற்றத்தை உருவாக்கவும், ஊக்குவிக்கவும், சமூகத்தின் தற்போதைய நிலைமையை எதிர்கொள்ளவும், எமது தேசத்தின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் பகிரப்பட்ட பொறுப்புசார் உணர்வை வளர்க்கவும் நமக்கு தனித்துவமான வாய்ப்பு உள்ளது. இத்தகைய தொனிப்பொருளில் ஆராய்வதற்கும், விவாதிப்பதற்கும், கலந்துரையாடுவதற்கும் நாம் இவ்வாறான மாநாடுகளில் ஒன்றுகூடும்போது, கூட்டுப்பொறுப்புப் பற்றிய உணர்வு, தனிநபர், சமூகம் மற்றும் ஒட்டுமொத்த தேசத்தின் நல்வாழ்வில் ஏற்படுத்தக்கூடிய ஆழமான புரிதல்களையும் நாம் உணர்ந்து கொள்கின்றோம். இந்த மாநாடு பல்வேறு துறைகளைச் சேர்ந்த புலமையாளர்கள், கல்வியாளர்கள், ஆய்வாளர்கள், பயிற்சியாளர்கள் ஆகியோருக்கு எமது சமூகத்தின் எதிர்காலத்தை வடிவமைக்கக்கூடிய அர்த்தமுள்ள உரையாடலில் ஈடுபடுவதற்குரிய ஒரு தனித்துவமான தளத்தை வழங்கும் என்பது எனது எதிர்பார்ப்பாகும்.

‘ஒன்றிணைந்த சமூகப் பொறுப்பு’ என்ற தொடர் ஒரு கொள்கைசார் கட்டமைப்பு என்பதைக் காட்டிலும் அது பிரயோகரீதியிலான செயற்பாட்டிற்குரிய அழைப்போடு தொடர்புடையதாகும். சமூகத்தில் நிலவும் சிக்கல்கள் மற்றும் சவால்களைத் தீர்ப்பதில் தனிநபர்களாக நின்று அவற்றை எவ்வாறு அணுகுகின்றோம், நிறுவனங்களின் செயற்பாடு எவ்வாறான அணுகுமுறைகளைக் கொண்டுள்ளன என்பதை மறுபரிசீலனை செய்வதற்கு இந்தத் தொனிப்பொருளானது எம்மைச் சவாலாக்குகின்றது. சமூகப் பொறுப்பை எமது செயற்பாடுகளின் மையமாக ஒருங்கிணைப்பதன் மூலம், நாம் வாழும் சூழலை மேம்படுத்துவதற்கு பங்களிப்பதோடு, நிலையான மற்றும் சமமான எதிர்காலத்திற்கான முன்னுதாரணத்தையும் அமைக்கின்றோம். இந்த முழுமையான அணுகுமுறையானது பல்வேறு துறையினரின் ஒத்துழைப்பைக் கோருகின்றது, இது மரபுரீதியான எல்லைகளைத் தாண்டி அதற்கு அப்பால் நின்று பகிரப்பட்ட பொறுப்புணர்வுசார் கலாசார சூழலை உருவாக்குகின்றது.

இந்த மாநாட்டின் போது முன்வைக்கப்படும் முன்னளிக்கைகள், விவாதங்கள், கலந்துரையாடல்கள் மற்றும் விளக்கக்காட்சிகள் மூலம் நாம் ஒவ்வொருவரும் எம்மோடு தொடர்புடைய துறைகளில் சமூகப் பொறுப்பை எவ்வாறு ஒருங்கிணைப்பது என்பது பற்றி விமர்சனரீதியாகவும் ஆக்கப்பூர்வமாகவும் சிந்திப்போம் என்பதில் எதுவிதமான ஐயமுமில்லை. புதுமையான உத்திகளை ஆராய்வதற்கும், சிறந்த நடைமுறைகளைப் பகிர்ந்துகொள்ளவும், ஒத்துழைப்பிற்கான புதிய வாய்ப்புகளை அடையாளம் காணவும் இம்மாநாடானது இளம் ஆய்வாளர்களுக்கு வழிசமைக்கும் என்பது எனது நம்பிக்கையாகும். இங்குள்ள எமது கூட்டு முயற்சிகள், எமது சமூகங்களுக்குள் மட்டுமன்றி, நாடு முழுவதும் நீடித்த மாற்றத்தை உருவாக்கும் ஆற்றலைக் கொண்டுள்ளன. இந்த மாநாட்டில் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் அறிவுசார் பகிர்வுகள் மற்றும் அனுபவங்களின் பன்முகத்தன்மை எமது மிகப் பெரிய பலங்களில் ஒன்றாகும். மேலும் இம்மாநாட்டின் பங்குபற்றுகை, பகிர்வு என்பன நம் ஒவ்வொருவரிடமும் நேர்மறையான மாற்றத்தை ஏற்படுத்துவதோடு, புதிய யோசனைகளையும் கூட்டாண்மைகளையும் ஊக்குவிக்கும் என்றும் நான் நம்புகிறேன்.

இறுதியாக, இந்த மாநாட்டை சாத்தியமாக்கிய ஒருங்கிணைப்பாளர், மாநாட்டுக்குழுவினர், முதன்மைப் பேச்சாளர், முன்னளிக்கை செய்தோர் மற்றும் பங்கேற்பாளர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அத்துடன், கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர், பதிவாளர், நிதியாளர், பராமரிப்புப் பிரிவினர், கல்விசார், கல்விசாரா உத்தியோகத்தர்களுக்கும் எனது நன்றிகள். அதுமட்டுமன்றி, பல்வேறு துறைசார் ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்து இம்மாநாட்டை அர்த்தமுள்ளதாக்கிய உள்நாட்டு, வெளிநாட்டு ஆய்வாளர்கள் அனைவருக்கும் எனது நன்றியினை உரித்தாக்குகின்றேன். அவ்வாறே, மதிப்பீட்டாளர்கள் மிகத் திறமையாகச் சரியான நேரத்திற்குள் தங்கள் பணிகளைச் செவ்வனே செய்துமுடித்தமைக்காவும் எனது நன்றிகள். அத்துடன் அனைத்து வழிகளிலும் உதவிய கலை கலாசார பீடத்தின் கல்விசார் உத்தியோகத்தர்கள், சிரேஷ்ட உதவிப் பதிவாளர், கல்விசாரா உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சமூகப் பொறுப்புணர்வை முன்னெடுத்துச் செல்வதற்கான உங்கள் அனைவரினதும் அர்ப்பணிப்பு என்றும் பாராட்டுக்குரியது, மேலும் உங்கள் பங்களிப்புகள் எமது தேசத்தின் பிரகாசமான எதிர்காலத்திற்கு வழி வகுக்கும் என்பதில் நான் உறுதியாக உள்ளேன். ஒரு சிறந்த தேசத்தின் உருவாக்கத்திற்காக ஒத்துழைக்கவும், புதுமைகளை உருவாக்கவும், அர்த்தமுள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் நாம் அனைவரும் இந்த வாய்ப்பைப் பயன்படுத்துவோம்.

ஆறாவது வருடாந்த ஆய்வு அமர்வு சிறப்புற நடைபெறுவதற்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் பாராட்டுக்களும் நன்றிகளும் உரித்தாகட்டும்!

# ஆய்வு மாநாட்டு இணைப்பாளரின் செய்தி



**கலாநிதி. சோ.ஜெகநாதன்**
**இணைப்பாளர், ஆறாவது ஆய்வு மாநாடு**
**கலை கலாசார பீடம்,**
**கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.**

---

கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசார பீடம் வருடம் தோறும் நடாத்தும் வருடாந்த ஆய்வு மாநாடு இம்முறை ‘‘ஒன்றிணைந்த சமூகப் பொறுப்பு : சிறந்த தேசத்தை உருவாக்குதல்’’ என்ற பொருண்மையில் இடம்பெறுவது சமூக அக்கறை பற்றிய எமது பீடத்தின் மேன்நோக்கிய பாய்ச்சலைக் காட்டுகிறது. புத்தாக்க எண்ணம் கொண்ட புதிய தலைமுறையினை உருவாக்கும் நோக்கில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞானம் சார் ஆய்வுகளால் பல புதிய கட்டளைப்படிமங்கள் ஆய்வாளர்களின் எண்ணக் கருவறையில் சூல் கொண்டிருப்பதை காணமுடிகின்றது.

புத்தாக்க தொழில் முயற்சி, சர்வதேச உறவுகள், ஆக்க பூர்வமான சமூக ஈடுபாடு, தரமான கற்றல் கற்பித்தல் முதலிய உயர்கல்வியின் இலக்குகளை அடையும் நோக்கோடு தேசிய, சர்வதேச ஆய்வாளர்களால் மீத்திறனான ஆய்வுகள் இந்த மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இந்த ஆய்வுகள் கல்விப்புலம் சார்ந்தோரின் ஆய்வுச் செயற்பாடுகளை மேலும் மேம்படுத்தவும் அவர்கள் பெற்றுக்கொண்ட அறிவை சமூகத்திற்கு கொண்டு சேர்ப்பதற்குமான ஒரு வாய்ப்பினையும் வழங்கியிருப்பது இந்த ஆய்வு மாநாட்டின் வெற்றியாக நான் கருதுகின்றேன். ஆராய்ச்சியின் அடிநாதம் மெய்ப்பொருள் காண்பது என்ற நேர்நிலைச் சிந்தனையோடு சமர்ப்பிக்கப்பட்ட 63 ஆய்வுக்கட்டுரைகளுள் 43 கட்டுரைகளே மதிப்பீட்டாளர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தன. இளம் ஆய்வாளர்களுக்கு களம் அமைத்துக்கொடுக்கும் சிறப்பு நோக்கோடு இம்மாநாடு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. சமகால பூகோள நவீன தொழில்நுட்ப மாற்றங்களால் மனித சமுதாயம் எதிர்நோக்கும் சவால்களை வெற்றிகொண்டு நீண்ட காலம் நிலைத்திருக்கும் ஒன்றிணைந்த சமூகப் பொறுப்புடன் கூடிய சிறந்த தேசத்தை உருவாக்கி ஆரோக்கியமான அபிவிருத்திகளுக்கு வலுச்சேர்ப்பதை இந்த ஆய்வு மாநாட்டின் உள்ளடக்கம் உறுதிப்படுத்தியுள்ளது.

இந்த ஆய்வு மாநாடு சிறப்புற நடைபெறுவதற்கு அனுமதியையும் ஆதரவையும் வழங்கிய உபவேந்தர் பேராசிரியர் வ. கனகசிங்கம் அவர்களுக்கு எனது இதயம் கனிந்த நன்றியை உரித்தாக்குகிறேன். அத்துடன் இந்த மாநாடு அதன் இலக்கை அடைவதற்கு வினைத்திறனாகச் செயற்பட்டு ஆக்கமும் ஊக்கமும் அளித்த கலை கலாசாரபீட பீடாதிபதி கலாநிதி வ. குணபாலசிங்கம் அவர்களுக்கு மனமார்ந்த நன்றிகள். மேலும் ஆய்வு ஒழுங்கமைப்புகளுக்கு பக்கபலமாக இருந்து செயற்பட்டு ஆலோசனைகளை வழங்கிய ஆலோசனை சபையினருக்கும் கட்டுரைகளை உரிய வேளைக்கு மதிப்பீடு செய்து தந்த மதிப்பீட்டாளர்களுக்கும் எனது அகம் கனிந்த நன்றிகள். இம்மாநாட்டிற்குக் காத்திரமான பங்களிப்பை வழங்கிய மாநாட்டின் செயலாளர் திருமதி விஜிதா திவாகரன் அவர்களுக்கும் பதிப்பாசிரியர் பேராசிரியர் ஜீ. கென்னடி அவர்களுக்கும் பதிப்பாசிரியர் குழுவினருக்கும் பொருளாளர் கலாநிதி எம். பீ. பௌசூல் அவர்களுக்கும் உளம் கனிந்த நன்றிகளை உரித்தாக்குகிறேன்.

இம்மாநாடு இடம்பெறுவதற்கு பங்களித்த எமது பல்கலைக்கழக பதிவாளர் அ. பகீரதன், நிதியாளர் எம். ஏம். பாரிஸ், எமது பீட சிரேஷ்ட உதவிப் பதிவாளர் வி. பிரகாஷ், உதவி நிதியாளர் எஸ் பிரமாகரன் அவர்களுக்கும் கட்டுரை ஆசிரியர்கள், கலை கலாசாரபீட விரிவுரையாளர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்கள் அனைவருக்கும் நன்றியை தெரிவிப்பதோடு இம்மாநாடு சிறப்புற நடைபெறுவதற்கு நிதி அனுசரணை வழங்கிய மட்டக்களப்பு மக்கள் வங்கி மற்றும் இலங்கை வங்கி பிராந்திய முகாமையாளர்களுக்கும் ஊழியர்களுக்கும் காகிதாதிகளை வழங்கிய மட்டக்களப்பு யுனைட்டட் புத்தகசாலையினரும் எனது மனம் கனிந்த நன்றிகள். இந்த ஆய்வு மாநாட்டுக்கு சகல வழிகளிலும் உதவிகளையும் ஒத்தாசைகளையும் நல்கிய அனைத்து நல்லுள்ளங்களுக்கும் எனது அகம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

# ஆதாரசுருதிரை

**Prof. Srivaratharajan Pirashanthan,**
**Ph.D.(Annamalai), M.Phil.in Tamil (Peradeniya),**
**BA Hons in Tamil (Peradeniya),**
**Professor in Tamil,**
**Head,**
**Department of Tamil,**
**Faculty of Arts,**
**University of Peradeniya.**



---

## தமிழ்ச் சூழலில் மூன்றாம் பால்

- இலக்கண நூல்கள் வழி ஒரு நோக்கு -

ஆண், பெண் என்னும் பாலினங்கள் இரண்டுக்கும் புறம்பாக, மூன்றாம் பாலினம் பற்றிய அக்கறையையும் ஏற்பையும் இன்றைய சமுதாயம் கொண்டிருக்கின்றது. ஒருகாலகட்டத்தில் கேலிக்கும் பரிகாசத்துக்கும் உரியவர்களாக ஒதுக்கப்பட்டவர்களை, இன்று சமுதாயம் - அதன் பெரும்பான்மைப் பிரதிநிதிகளின் கருத்து இன்னும் மாறிவிடவில்லை எனினும் - ஓரளவாவது அனுதாபத்தோடு மனிதர்களாகவே நோக்கத் தலைப்படுகின்றது. இது வரவேற்புக்குரிய ஒரு மாற்றமாகும்.

பேடி என்றும் அலி என்றும் நபுஞ்சகர் என்றும் முன்பு சொல்லப்பட்டவர்களும், திருநங்கை என்று இன்று சொல்லப்படுபவர்களுமாகிய மாற்றுப் பாலினராய இவர்கள், இயற்கையின் வஞ்சனையால் இவ்வாறு ஆனவர்கள் என்பதை அனைவரும் அறிவர். அகம் - புறம் என்ற இருமைகள் ஒருமித்த தெரிவை நாடாமல், முரண்படுவதே இவர்களின் பாலின அந்தரிப்பின் அடிநாதமாகும். புறத்தோற்றத்தில் ஆணாக உடல்தாங்கி மனதில் தம்மைப் பெண்ணாக உணர்பவர்களும் பெண்ணுடல் தாங்கிப் பிறந்து தம்மை மனதில் ஆணாக உணர்பவர்களும் இவ்வாறு மூன்றாம் பாலினர் அல்லது மாற்றுப் பாலினர் எனப்படுகின்றனர். அவர்களுடைய உளச்சிக்கல்களைக் குறித்து மருத்துவர்களும், உளவியலாளர்களும் ஒருபுறம் ஆராய்ந்துகொள்ள, மொழி ஆய்வாளர்களது கவலையோ வேறாக இருந்தது. அவர்கள், இம்மூன்றாம் பாலினத்தாரை மொழியில் எப்படிச் சுட்டுவது - ஆண் என்று சுட்டுவதா, இல்லை பெண் என்று சுட்டுவதா - என்ற நியாயமான மொழி குறித்த ஆராய்ச்சியில் ஈடுபட்டார்கள். தமிழைப் பொறுத்தவரை இவ்வாராய்ச்சி, இன்று கிடைக்கும் மிகத் தொன்மையான இலக்கண நூலாகிய தொல்காப்பியத்திலேயே தொடங்கிவிட்டது எனலாம்.

ஆண் உண்டனன் என்பதாக னகர மெய்யீறு முதலிய ஈறுகள் ஆண்களை உணர்த்தும் என்றும், பெண் உண்டனள் என்பதாக ளகர மெய்யீறு முதலிய ஈறுகள் பெண்களை உணர்த்தும் என்றும் சொல்லதிகார கிளவியாக்கத்தில் ஆண், பெண் பால்களுக்குரிய இறுதிநிலைகளைப் பற்றிப் பேசுகிறார், தொல்காப்பியர். அக்கிளவியாக்கப் பகுதியிலே இவை என்று தம் பொருளைத் தனியே உணர்த்தும் இறுதியைக் கொள்ளாத இரு கூட்டத்தினரைப் பற்றிச் சிந்திக்கின்றார்.

> ‘‘பெண்மை சுட்டிய உயர்திணை மருங்கின்
> ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவியும்
> தெய்வம் சுட்டிய பெயர்நிலைக் கிளவியும்
> இவ்வென அறியும் அந்தம் தமக்கிலவே
> உயர்திணை மருங்கின் பால் பிரிந்து இசைக்கும்’’ (சொல். 04)

என்பது தொல்காப்பியச் சூத்திரம்.

இதன்படி, பெண்மைத் தன்மையை விரும்பி நிற்கும் ஆண்மை திரிந்தவர்களையும், தெய்வங்களையும் சுட்டுகின்ற பொருளை உணர்த்தும் ஈறுகள் இவைதாம் என உறுதிபட வரையறுக்கமுடியாது என்பது புலனாகின்றது. தொல்காப்பியர் வார்த்தையில் சொல்வதானால் இவையிரண்டும் 'இவ்வென அறியும் அந்தம் தமக்கு இலவே'. அப்படியாயின் ஆண்மை திரிந்தவர்களை எவ்வாறு வினைகொடுத்து முடிப்பது எனக் கிளம்பும் ஐயத்துக்கான பதிலை, சில சூத்திரங்கள் கழித்து, தொல்காப்பியர் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

''ஆண்மைதிரிந்த பெயர்நிலைக் கிளவி
ஆண்மை அறிசொற்கு ஆகுஇடன் இன்றே'' (தொல்.12)

என்பது அவர் வார்த்தை. இதன்வழி உடலால் ஆணாய்ப் பிறந்து, உளத்தில் பெண்மையை உணர்ந்து, தம் ஆண்மை திரிந்தவர்களை ஆண் விகுதியிட்டு அழைப்பது பொருத்தமுடையது அன்று என்பது சுட்டப்பெறுகின்றது. எனவே, தொல்காப்பியர் நெறிப்படி பேடி வந்தான் எனச் சுட்டுவது தவறானதாகும். பேடி வந்தாள் என்பதே பொருத்தமுடையதாகும்.

கிட்டத்தட்ட அவர் காலத்திலிருந்து பல நூற்றாண்டுகள் கழித்து இலக்கண நூல் படைத்த பவணந்தியாரும், இம்மூன்றாம் பாலினத்தாரை எப்படி மொழிவது என்பது குறித்து தமது நன்னூலின் சொல்லதிகாரத்தில் சிந்திக்கிறார். பெயரியலில் இருதிணை, ஐம்பால்களைப் பற்றிப் பேசிய நன்னூலார் தொடர்ந்து திணை, பால்களுக்குப் புறனடைச் சூத்திரமாகப் பின்வரும் நூற்பாவைப் படைத்துள்ளார்:

''பெண்மைவிட்டு ஆண் அவாவுவ பேடு ஆண்பால்
ஆண்மைவிட்டு அல்லது அவாவுவ பெண்பால்
இருமையும் அஃறிணை அன்னவும் ஆகும்'' (நன்.264)

இதன்படி, ''பெண் தன்மையை விட்டு ஆண் தன்மையை அவாவுகிறவர்களை உயர்திணை ஆண் பாலாகக் கருதுதல் வேண்டும். ஆண் தன்மையை விட்டு பெண்தன்மையை அவாவுகிறவர்களை உயர்திணை பெண்பாலாகக் கருத வேண்டும். இவ்விருவகைகளும் அஃறிணையை ஒத்தும் நடப்பன'' எனும் கருத்து தெரிவிக்கப்படுகின்றது.

பெண்மையை விட்டு ஆண் தன்மையை விரும்புகின்ற ஒருவரை, அலி வந்தான் என்றும் ஆண் தன்மை விட்டுப் பெண்தன்மையை விரும்புகிற ஒருவரை பேடி வந்தாள் என்றும் சுட்ட வேண்டும். இதேவேளை அலி வந்தது, பேடி வந்தது என்று சுட்டுவதும் தவறாகாது என்பது பவணந்தியாரின் கருத்தாகும்.

பெண் தன்மையை விட்டு ஆண் தன்மையை அவாவுகிறவர்களைப் பற்றி நன்னூல் பேசியுள்ளதைப் போலவே இலக்கண விளக்க நூலும் குறிப்பிட்டுள்ளது. பெண்மை திரிந்ததற்கு உதாரணமாகப் பேடன் வந்தான், பேடர் வந்தார், பேடன்மார் வந்தார் என உதாரணங் காட்டுவார், இலக்கண விளக்க நூலாசிரியர். ஆயினும், பேடன் முதலிய இவ்வுதாரணங்களை இளம்பூரணர் முதலியோர் எடுத்தாளாமையின் அவ்வழக்குப் பொருந்தாதென சிவஞானமுனிவர் மறுக்கிறார். அவர், பெண்மை திரிந்தது அலியெனக் கருதுகிறார். எப்பெயரிட்டாயினும், பெண்மையை விட்டு ஆண் தன்மையை அவாவும் மாற்றுப் பாலினத்தாரை எவ்வாறு சுட்டுவது என்பது குறித்து, பின்னை இலக்கண நூல்கள் சில அக்கறை கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

முதன்மைத் தமிழ் இலக்கணங்களாய தொல்காப்பியம் மற்றும் நன்னூல் ஆகியவற்றில் காணப்படும் இம் மூன்றாம் பாலினத்தாரைப் பற்றிய நூற்பாக்களின் வழி, அவ்வக்கால சமுதாயம் அவர்களை எவ்வாறு நோக்கியுள்ளது என்பதை அறிய முடியும்.

மிகப் பழைய இலக்கண நூலான தொல்காப்பியத்தில் உடல் அளவில் ஆணாகப் பிறந்து உள்ளத்தில் பெண்ணாக உணரும் மாற்றுப்பாலினர் பேசப்படுகின்றனர். ஆனால், உடல்

அளவில் பெண்ணாகப் பிறந்து ஆண் தன்மையை அவாவும் மாற்றுப்பாலினர் பேசப்படவில்லை. இதற்கான காரணம் ஆராயப்படவேண்டியது. பெண்மை திரிந்து ஆண்மையை அவாவியோர் தொகை சிறுபான்மையாதலால் அவர்களைத் தொல்காப்பியர் சுட்டவில்லை எனும் காரணத்தை அறிஞர் சிலர் குறிப்பிட்டுள்ளனர். ''பெண்மை திரிந்த முண்டேனும் ஆண்மை திரிந்த பெரும்பான்மையாகலான் 'ஆண்மை திரிந்த' என்றார்; எனவே, பெண்மை திரிதல் சிறுபான்மை யாகலின் அதனை ஆசிரியர் எடுத்துக் கூறாராயினார் என்றபடி. கூறாராயினும் அதுவும் கொள்ளப்படுமென்பது சேனாவரையர் கருத்து''. எனினும், இக்கருத்து எத்துணை தூரம் உண்மையானது என்பது மேலதிக ஆராய்வுக்குரியது.

எனினும், இதற்கான காரணத்தை அக்கால தமிழகச் சமூக நிலையின் அடிப்படையில் கண்டடைவது பொருத்தமானதாகும். அக்காலச் சமுதாயத்தில், பெண்மையை அவாவுகிற விருப்பை ஆணாகப் பிறந்தவர்கள் வெளிப்படுத்தியது போல, ஆண்மையை அவாவிய விருப்பைப் பெண்ணாகப் பிறந்தவர்கள் வெளிப்படுத்தவில்லை. ஆண் தன்மையை அவாவுகின்ற விருப்பை, பெண்ணாகப் பிறந்தவர்கள் பிறரறிய வெளிப்படுத்துவதில் மனத்தடை கொண்டிருந்துள்ளனர் என்பது புலனாகின்றது. இது அக்காலத்தில் பெண்களுக்கு இருந்த சுயமறுப்பையே எடுத்துக் காட்டுகின்றது. தாம் உளத்தில் பால்மாற்றத்தை அவாவியபோதும், பெண்ணாகவே வாழ்ந்து முடிக்கவேண்டிய நிலையிலேயே பெண்கள் சங்ககாலத்தை ஒட்டிய காலத்தில் வாழ்ந்துள்ளனர் என்பது இதன்வழி புலனாகிறது. இதனாலேயே பெண்மையை விரும்பும் ஆண்களாய மாற்றுப்பாலினரை எவ்வாறு சுட்டுவது எனப் பேசிய தொல்காப்பியம், ஆண் தன்மையை விரும்பும் பெண்களாய மாற்றுப்பாலினரைப் பற்றிப் பேசவில்லை.

இவர்கள் ஒரு சிறுதொகையினராகக் கூட மேற்கிளம்பியிருந்தால் இவர்களை எவ்வாறு சுட்டுவது எனும் கேள்வி, தமிழ் மொழிக்கு ஏற்பட்டிருக்கும். இதற்குச் சரியான தீர்வை வழங்கவேண்டிய கடப்பாடு இலக்கண நூலாசிரியருக்கு இருந்திருக்கும். ஆனால், அத்தகைய ஒரு நிலைப்பாடு தொல்காப்பியத்தில் காணப்படாமைக்குக் காரணம், தாம் மனதளவில் ஆணாக உணருவதை எந்தப் பெண்ணும் தம் சமுதாயத்தில் வெளிப்படுத்த இயலவில்லை என்பதேயாகும். அந்தளவு பெண் மீதான கட்டுப்பாடு அக்காலச் சமுதாயத்தில் இருந்திருக்கிறது.

மூன்றாம் பாலினத்தினர் எனச் சுட்டப்பெறும் இரு பகுதியினருள், ஒருபகுதியினரை மட்டும் - அதாவது பெண்மையை விரும்பும் ஆண்களை மட்டும் - சுட்டும் தொல்காப்பியர், அவர்களைச் சுட்டும்போது, ஆண்பால் விகுதி கொடுக்கவேண்டாம் எனக் கூறுகின்றார். இதற்கு உரையாசிரியர்கள் பலரும், "பேடிவந்தான் எனற் போல வருவது இல்லை. பேடிவந்தாள் எனவே வரும்" என்றே எடுத்துக்காட்டுக் கூறியுள்ளனர். இதனை ஆழமாக நோக்குகையில், உயர்திணை ஆண்பால் பெண்பால் பலர்பால் விகுதிகளையும் அஃறிணை விகுதிகளையும் கூறியபின்பு, "ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவி ஆண்மை அறிசொற்கு ஆகு இடன் இன்றே" எனக் கூறுவதன் மூலமாக, பேடி என்பது அஃறிணை முடிவையும் பெறும் என்ற கருத்துக்கு வருதல் முடியும். அதாவது பேடிக்கு பெண்பால் விகுதி கொடுக்கப்பட வேண்டும் எனத் தொல்காப்பியம் சுட்டவில்லை. ஆண்பால் முடிவுகொடுக்க வேண்டாம் என்பதே தொல்காப்பிய நூற்பாவின் கருத்தாக உள்ளது. இதன் உள்ளர்த்தம் பேடிக்கு பெண்பால் முடிவோ அஃறிணை முடிவோ கொடுக்கலாம் என்பதுதான்.

ஆண்மை திரிந்தவரை பெண்பால் விகுதி கொண்டும், பெண்மை திரிந்தவரை ஆண்பால் விகுதிகொண்டும் சுட்டவேண்டும் என்னும் நன்னூலாசிரியர், இவ்விரு திறத்தாரையும் அஃறிணை முடிவுகொண்டும் சுட்டலாம் என்கிறார். இது அவதானத்துக்குரியது. எனவே, தொல்காப்பியமும், நன்னூலும் மூன்றாம் பாலினத்தைச் சுட்ட அஃறிணை முடிவைக் கொள்ளலாம் என்றுரைப்பது அக்காலகட்டத்துத் தமிழ்ச் சமுதாயம் மாற்றுப் பாலினரை எந்த அளவுக்குக் கீழ்மையுற நோக்கியுள்ளது என்பதையே காட்டுகிறது.

இவ்விடத்தில் அஃறிணையாக மானுடர் சுட்டப்பெறும் மொழியின் நிலைப்பாட்டிற்கும், சமுதாயக் கண்ணோட்டத்திற்குமான தொடர்பை பின்வருமோர் உதாரணம் மூலம் உணர்த்தலாம். பழைய காலத்தில் தெலுங்குமொழி குறித்து, மொழி அறிஞர் சுட்டும் தனித்த இயல்பொன்றை இங்கே குறிப்பிடல் பொருத்தமானதாகும். ஆண்பால், பெண்பால்களைத் தனித்தனியாக மேற்கொள்வதிலும், தனித்தனியே வந்த இருபாற் பன்மைகளையும், அவ்விருபாலும் கலந்து வந்த பன்மைகளையும் பலர் பாலென மேற்கொள்வதிலும் திராவிட இனத்தின் ஏனைய மொழிகளோடு ஒத்துப் போகின்ற தெலுங்கு, பெண்பால் ஒருமைப் பொருளுணர்த்துவதற்கு ஆற்றலை அறவே இழந்து, அதற்குப் பதிலாக, அஃறிணை ஒன்றன்பால் ஒருமை விகுதியையே ஆள்கிறது. இவ்வியல்பைக் கண்ணுற்ற மொழி அறிஞர் கால்டுவெல் இதன்வழி கண்டடையும் சமுதாய மதிப்புசார் பின்வரும் கருத்துகள் முக்கியமானவை:

"பெண்ணறிவென்பது பெரும் பேதமைத்தே என்பதை உண்மையென கொள்வதினாலோ, அல்லது குழந்தைகளின் ஆய்வுரைகளைப் போன்றே பெண்களின் ஆய்வுரைகளும் கொள்ளத்தக்கன அல்லவென எண்ணியதாலோ, தெலுங்கு மொழி, ஒவ்வொரு பெண்ணையும், உயிரற்ற பொருள்களையும், சிறு குழந்தைகளையும் வழக்கமாக வழங்குவதுபோல் 'இது' என்றே வழங்குகிறது."

இவ்வாறே, 'உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே' எனக் கூறியதன் பின்பு, மனிதராயப் பிறந்து இயற்கையால் வஞ்சிக்கப்பட்ட மாற்றுப் பாலினரை - அஃறிணையாகவும் சுட்டலாம் எனத் தமிழிலக்கண நூல்கள் விதிப்பதானது, தமிழ்ச் சமூகம் அவர்களை - மதிப்பார்ந்த நிலையிலிருந்து ஒதுக்கி வந்திருப்பதையே காட்டுகின்றது.

இவற்றைத் தொகுத்து நோக்குகின்றபோது, பின்வரும் முடிவுகளைக் கண்டறிய முடிகின்றது: ஆணாகப் பிறந்து பெண்மையை விரும்பியோர் தம்மை வெளிப்படுத்திக் கொண்டதுபோல, பெண்ணாகப் பிறந்து ஆண்மையை அவாவியோர் தம்மை வெளிப்படுத்த சங்ககாலச் சமுதாயம் இடந்தரவில்லை. எனவே, அவர்களை எவ்வாறு சுட்டுவது என்பது குறித்த தேவைப்பாடு மொழிக்கு ஏற்படவில்லை. நன்னூல் தோன்றிய காலப் பகுதியில், பெண்களும் மாற்றுப்பாலாகத் தம்மை வெளிப்படுத்தக்கூடிய நிலை ஏற்பட்டுவிட்டது. எனவே, மொழிக்கு, அவர்களை எவ்வாறு சுட்ட வேண்டும் எனும் தேவை வந்துவிட்டது என்பதை நன்னூல் பிரதிபலிக்கின்றது. சங்ககாலமோ அன்றி சோழர்காலமோ தமிழ்ச் சமுதாயத்தில் மூன்றாம் பாலினத்தாரை இழிவாகக் கருதும் நிலைமட்டும் மாறவில்லை. அவர்கள் எந்தப் பாலினத்தைத் தம் மனதளவில் விரும்புகிறார்களோ, அந்தப் பாலினத்தைச் சுட்டும் விகுதி கொண்டு அவர்களை அழைக்கலாம் என்று கூறிய இலக்கண நூல்கள், அவர்களுக்கு அஃறிணை முடிவும் வழங்கலாம் எனச் சுட்டியிருப்பது இந்நோக்குகளையே காட்டுகிறது.

உசாத்துணை:

கணேசையர், சி. (ப.ஆ.) (2007) தொல்காப்பியம் - சொல்லதிகாரம் மூலமும் சேனாவரையருரையும், சென்னை : உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

கால்டுவெல் (1992) திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம், கோவிந்தன், கா. (மொழிபெயர்ப்பு), சென்னை : திருமகள் நிலையம்.

கோபாலையர், தி. வே. (2005) தமிழ் இலக்கணப் பேரகராதி, சென்னை : தமிழ்மண் பதிப்பகம்.

ஃ

## பிரதம பதிப்பாசிரியரின் செய்தி



**பேராசிரியர் ஜீ. கென்னடி,**
**பதிப்பாசிரியர், ஆறாவது ஆய்வு மாநாடு**
**கலை கலாசார பீடம்,**
**கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.**

---

"ஒருங்கிணைந்த சமூகப் பொறுப்பு: ஒரு சிறந்த தேசத்தை உருவாக்குதல்" என்ற தொனிப்பொருளில் அமையும் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை கலாசார பீடத்தின் வருடாந்த ஆய்வு மாநாட்டிற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆய்வுக் கட்டுரைகளையும், அவற்றின் ஆய்வுச் சுருக்கங்களையும் தொகுத்து ஒரு மாநாட்டு ஆய்வு மலராக உங்களுக்கு வழங்குவதில் மாநாட்டின் பிரதம பதிப்பாசிரியர் என்றவகையில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்த மாநாட்டின் கருப்பொருள் நமது தனிப்பட்ட, தொழில்முறை மற்றும் நிறுவன நடைமுறைகளின் ஒருங்கிணைந்த பகுதியாக சமூகப் பொறுப்பை ஏற்றுக்கொள்வதற்கான முக்கியமான தேவைப்பாட்டினைப் பிரதிபலிக்கின்றது. இன்று நமது சமூகம் எதிர்கொள்ளும் சிக்கலான சவால்களை எதிர்கொள்ள புலமையாளர்கள், கல்வியாளர்கள், நிபுணர்கள் மற்றும் தலைவர்கள் மேற்கொள்ளும் வேறுபட்ட மற்றும் புதுமையான அணுகுமுறைகளுக்கு இந்த ஆய்வுக்கட்டுரைகளில் உள்ள கருத்துக்கள் மற்றும் நுண்ணறிவுகள் ஆதாரங்களாக அமையும் என்பது எனது நம்பிக்கையாகும்.

இந்தத் தொகுப்பில் இடம்பெறும் ஆய்வுக்கட்டுரைகள் பல்வேறு துறைசார்ந்த ஆய்வாளர்களினால் பன்முகப் பார்வையில் எழுதப்பட்டுள்ளன. நவீன ஆய்வு முறையியல்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த வருட மாநாட்டிற்காக எமக்கு மொத்தமாக 65 ஆய்வுக்கட்டுரைகள் கிடைக்கப் பெற்றன. அவற்றில் 43 கட்டுரைகளே மதிப்பீட்டாளர்களினால் ஆய்வு மாநாட்டின் முன்னளிக்கைகளுக்காக ஏற்றுக்கொள்ளப்பட்டு இத்தொகுப்பில் இடம்பெறுகின்றன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இவ் ஆய்வுச்சுருக்கங்கள் மற்றும் கட்டுரைகள் நிலையான வளர்ச்சி, நெறிமுறை நிர்வாகம் முதல் சமூக ஈடுபாடு மற்றும் ஒருங்கிணைந்த பொறுப்புக்கூறல் வரை பரந்த அளவிலான தலைப்புகளை ஆராய்கின்றன. ஒவ்வொரு பங்களிப்பும் மிகவும் நியாயமான, நிலையான மற்றும் சமத்துவமான தேசத்தை உருவாக்குவதற்கு நாம் எவ்வாறு கூட்டாக இணைந்து பணியாற்றலாம் என்பதற்கான தனித்துவமான கண்ணோட்டத்தை வழங்குகின்றது.

இந்த மாநாட்டின் பெறுமதியானது பகிர்ந்து கொள்ளப்பட்ட அறிவில் மட்டுமன்றி, அது பிரதிபலிப்பு, உரையாடல் மற்றும் ஒத்துழைப்புக்கான வாய்ப்புகளிலும் உள்ளது. இங்கு வழங்கப்பட்டுள்ள கருத்துக்களோடு ஒன்றிணைவதன் மூலம், நமது தேசிய மற்றும் உலகளாவிய முயற்சிகளில் சமூகப் பொறுப்பை எவ்வாறு சிறந்த முறையில் ஒருங்கிணைப்பது என்பது பற்றிய தற்போதைய உரையாடலுக்கு நாம் அனைவரும் பங்களிக்க முடியும்.

நிறைவாக, இந்தக் கட்டுரைகளின் தொகுப்பைக் கொண்டுவர அயராது உழைத்த கலை கலாசார பீடாதிபதி, மாநாட்டின் பதிப்பாசிரியர் குழு, மாநாட்டு ஏற்பாட்டுக் குழுவினர், ஆய்வாளர்கள், ஆய்வுக்கட்டுரை மதிப்பீட்டாளர்கள் ஆகியோருக்கு எனது ஆழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். சமூகப் பொறுப்புணர்வு குறித்த சொற்பொழிவை முன்னெடுப்பதில் ஒவ்வொரு ஆய்வாளரின் அர்ப்பணிப்பைப் பாராட்டுவதோடு, அவற்றின் அவசியத்தை இதன் வாயிலாக உணரவைக்கும் இந்தத் தொகுப்பிலுள்ள உள்ள கருத்துக்கள் மற்றும் புதிய ஆய்வு முயற்சிகளை மேற்கொண்டமைக்காக எனது நன்றிகள். அத்துடன் இக்கட்டுரைகளை மிகவும் தரமான முறையில் உரிய நேரத்திற்குள் மதிப்பீடு செய்து தந்த மதிப்பீட்டாளர்கள் அனைவருக்கும் எனது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த மாநாட்டின் வெற்றிக்காக உழைத்த அனைத்து உள்ளங்களுக்கும் எனது நன்றிகள்!

# Content

Message from the Vice Chancellor, Eastern University, Sri Lanka v

பீடாதிபதியின் செய்தி, கலை கலாசாரப்பீடம் vi

ஆய்வு மாநாட்டு இணைப்பாளரின் செய்தி viii

ஆதாரசுருதியுரை ix

பிரதம பதிப்பாசிரியரின் செய்தி xiii

ABSTRACTS xix

## Humanities and Social Sciences (Environment and Geography)

கோறளைப்பற்று பிரதேச செயலகப்பிரிவின் தெரிவு செய்யப்பட்ட கிராமசேவகர் பிரிவுகளில் குடிநீரின் தரம் பற்றிய இடரீதியான பகுப்பாய்வு 1

Mr. Srimogan Srilaxan

வாகரை பிரதேசத்தின் கரையோர வளங்களும் அபிவிருத்திக்கான வாய்ப்புகளும் 2

Mr. Kannappan Sutharshan, Mrs. Thavapraba Sachithanantham

சத்துருக்கொண்டான் பிரதேசத்தின் இயற்கை வளங்கள் மீதான அச்சுறுத்தலும் அபிவிருத்திக்கான உபாயங்களும் 3

Ms. Niklas Akaliya, Mrs. Thavapraba Sachithanantham

சுற்றுலாத்துறைக்கு உள்ளார்த்தமான அமைவிடங்களும் அவற்றின் முக்கியத்துவங்களும்: கேகாலை மாவட்டத்தினை மையமாகக் கொண்ட ஆய்வு 4

Ms. Mohamed Ismail Fathima Rihma, Mrs. Thavapraba Sachithanantham

மட்டக்களப்பு மாவட்டத்தின் கொம்மாதுறை தொடக்கம் ஆறுமுகத்தான் குடியிருப்பு வரையான பிரதேசத்தின் நகர விரிவாக்கல் பாங்குகள் 5

Ms. Pavatharani Suntharalingam, Mrs. Thavapraba Sachithanantham.

கோறளைப்பற்று பிரதேச செயலகப் பிரிவில் மீனவர்கள் எதிர்நோக்கும் சவால்கள் 6

Mr. Srimogan Srilaxan, Ms.Tharunithaa Ragunathan

## Humanities and Social Sciences (Political Science & Governance)

அமெரிக்காவிற்கும் ரஸ்யாவிற்குமிடையிலான அதிகாரச் சமநிலைக்கான யுத்தம்: சிரியாவின் உள்நாட்டு யுத்தத்தினை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு 7

Ms. Thampiraja Laxsayini, Dr. N. Pushparajah

இலங்கையில் மாற்றுத்திறனாளிகள் வாக்குரிமையினைப் பிரயோகிப்பதற்கான வசதிகளை வலுப்படுத்தலும், ஊக்குவித்தலும் 8

Ms. Selvaratnam Tharunitha, Prof. V. Gunaretnam

தாலிபான்களின் மீளெழுச்சியும் ஆப்கானிஸ்தானில் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறை மற்றும் பாகுபாடுகள் - இஸ்லாமிய நோக்கில் பெண்களின் உரிமைகள் ஓர் ஆய்வு 9

Ms. S. F. Ayman Sihara, Prof. V. Gunaretnam

விகிதாசார தேர்தல் முறையில் கேகாலை மாவட்ட தமிழ் மக்களின் அரசியல் பிரதிநிதித்துவம்: கடந்த ஐந்து பாராளுமன்ற தேர்தல்களை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு (2001 - 2020) 10

Ms. Rajah Ramya, Mr. Chelliah Sivanayagam

இலங்கையில் மலையகத் தமிழ் மக்களும் அவர்களுடைய தனித்துவமான இன அடையாளங்களும் 11

Mr. S. Manogaran, Mr. Chelliah Sivanayagam

ரஷ்ய - உக்ரைன் போர் இலங்கையில் ஏற்படுத்தும் அரசியல் மற்றும் பொருளாதாரத் தாக்கங்கள் - ஓர் ஆய்வு 12

Ms. Ravi Abirami, Prof. V. Gunaretnam

## Language and Literature

IMPACT OF HYPERMEDIA-BASED POETRY LEARNING ON WRITING SKILL: AN EXPERIMENTAL STUDY BASED ON ‘HIGHER NATIONAL DIPLOMA IN ENGLISH SYLLABUS’ 13

Mr. Mohideen Bawa Nowzath, Dr. Singanayagam Umashankar

பார்த்திபனின் புனைகதைகளில் பெண்கள் - ஓர் ஆய்வு 14

Ms. Sivanayagam Sisitha

ஆரையூர் மூ.அருளம்பலத்தின் இலக்கிய ஆக்கங்கள் - ஓர் ஆய்வு 15

Ms. Ulagagesparam Digatharani

2000 ஆம் ஆண்டுக்குப் பின்னரான ஐ.சாந்தனின் சிறுகதைகள் - ஓர் ஆய்வு 16

Ms. Hussain Bawa Nasrin Banu, Mrs. Ruby Valentina Francis

வாகரைப் பிரதேசச் சிற்றிதழ்கள் - ஓர் ஆய்வு 17

Ms. Punitharasa Kisoniya, Mrs. Ruby Valentina Francis

## Classical Literature & Modern Literary Works

'பூவரசு' சஞ்சிகையின் இலக்கியப் பங்களிப்பு - ஒரு மதிப்பீட்டாய்வு 18

Ms. Hamsa Lebbe Rinosa, Dr. Nadira Mariyasandanam

ஆற்றுப்படை இலக்கியங்களில் விருந்தோம்பல் 19

Ms. Shamshiga Jeevakaran

தெளிவத்தை ஜோசப்பின் சிறுகதைகளில் மலையக மக்களின் ஒடுக்கப்பட்ட வாழ்வியல் சித்திரிப்புகள் - ஓர் ஆய்வு 20

Ms. Balarathnam Saranya

புலம்பெயர் எழுத்தாளர் விக்னா பாக்கியநாதனின் சிறுகதைகள் - ஓர் ஆய்வு 21

Ms. Indran Tharshana, Dr. Nadira Mariyasandanam

சிறுபஞ்சமூலம் கூறும் வாழ்வியல் நெறிகள் 22

Mrs. Gnanasekaram Dilosini

## Educational Ethics & Psychology


சிரேஷ்ட இடைநிலைப்பிரிவு மாணவர்களிடம் காணப்படுகின்ற ஒழுக்கரீதியான பிரச்சினைகள் கற்றலில் ஏற்படுத்தும் தாக்கம் 23

Ms. Navareththinam Kethini

மெல்லக் கற்கும் மாணவர்களின் கற்றலில் ஆசிரியரின் வகிபாகம் 24

Mr. Nadarasa Koventhan

இடைநிலைப் பிரிவு மாணவர்களின் மொழித்திறன் விருத்தியில் மீளவலியுறுத்தலின் செல்வாக்கு 25

Ms. Pulenthiran Hindujah

பாடசாலையில் கல்வி கற்கும் பெண் மாணவிகளுக்கு ஏற்படும் மன அழுத்தமும் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளும் - ஓர் ஆய்வு (பட்டிருப்புக் கல்வி வலயத்தில் க.பொ. த. சாதாரணதரம் கற்கும் மாணவிகளை அடிப்படையாகக் கொண்டது) 26

Mrs. Pranaha Thineswaran, Dr. Kanthasami Kajavinthan

இருமொழிக் கல்வி முறையில் விஞ்ஞான பாடக் கற்றலில் மாணவர்களின் ஈடுபாடு 27

Mr. R. Senthamilselvan, Mrs.Thakshaayini Rajandran


## Innovation and Education


AN INVESTIGATION OF TRAINED SCHOOL TEACHERS' SELF-EFFICACY BELIEFS AND THEIR IMPACT ON THE TEACHING-LEARNING PROCESS 28

Mr. Krishnapillai Punniyamoorthy, Prof. Fareed Mohamed Nawastheen

வகுப்பறைக் கற்றல்-கற்பித்தல் முறைகளில் புதுமைகளைத் துரிதப்படுத்துவதில் ஆசிரியரின் வகிபங்கு

Mr. Kanthasamy Abilash 29

பாடசாலை நூலகங்களின் செயற்பாடுகள் சிரேஷ்ட இடைநிலை மாணவர்களின் சுயகற்றலில் ஏற்படுத்தும் தாக்கம் (மண்முனை தென் மேற்கு கோட்ட பாடசாலைகளில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் சிரேஷ்ட இடைநிலை மாணவர்களை அடிப்படையாகக் கொண்ட ஓர் அளவை நிலை ஆய்வு) 30

Mrs. Shiyani Thevaruban, Mrs.Thakshaayini Rajandran

OPTIMIZING PREVENTIVE MAINTENANCE SCHEDULES FOR BIOMEDICAL EQUIPMENT BY USING THE DATA-DRIVEN APPROACH 31

Mr. Ragupathyraja Suhashan, Mr. Rishogar Nirmalakumar, Mr. Kirushnalini Maguran

கற்றல் கற்பித்தல் செயன்முறையில் பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டத்தின் பங்களிப்பு 32

Mr. Shivanantham Sritharan, Dr. Sabaretnam Athirathan

## Religion & Social Harmony

சமூகநல்லுறவினை மேம்படுத்துவதில் சமய விழுமியங்களின் வகிபாகம் - இந்து பௌத்த சமயங்களை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஒப்பீட்டாய்வு 33

Ms. Arumukam Jeyaruby, Mr. R. Sahaayaseelan

இஸ்லாம் பௌத்த சமயங்கள் கூறும் கன்மம் மற்றும் மறுபிறப்புக் கோட்பாடு - அல்குர்ஆனையும் திரிபீடகத்தையும் அடிப்படையாகக் கொண்ட ஓர் ஒப்பீட்டாய்வு 34

Mr. Kamaraj Pradeevan, Mr. Kanesan Mathiseelan

## Philosophy,Values and History


தென்னிந்தியத் திரைப்படங்கள் சிறுவர்கள் மத்தியில் ஏற்படுத்தும் தாக்கங்கள் பதுளை மாவட்டம் ஊவா பரணகம பிரதேச செயலகப் பிரிவிற்குற்பட்ட ஹியூகோலண்ட் தோட்டம் கிராம சேவகர் பிரிவை அடிப்படையாகக் கொண்ட ஒரு மெய்யியல் ஆய்வு – 2023 35

Ms. Pushparaj Dhanadharshani, Dr. Ratnasabpathy Premkumar

இந்து அறிவியலில் சித்தர்களும் இரசவாதமும் : ஒரு மெய்யியல் பார்வை 36

Mr. Uthayathevan Jeevatharsan, Mr. Tharaneenthan Kamalachandran

பட்டினத்தாரின் தத்துவச் சிந்தனைகள்: ஒரு மெய்யியல் பகுப்பாய்வு 37

Ms. Rasu Ashaniya, Mr. Vellappody Alagaratnam

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் வளர்ச்சியில் தலைமைத்துவத்தின் பங்களிப்பு - ஒரு வரலாற்று ஆய்வு 38

Ms. Vinayagam Vijayashanthi, Mr.S. K. Shivahaneshan


## Gender & Human Behaviour


நவீன சமூக ஊடகங்களின் பாவனை கல்வியியற் கல்லூரி மாணவர்களின் நடத்தையில் ஏற்படுத்தும் தாக்கம் (மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரியினை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு) 39

Mr. Vijayaretnam Vijayaruban

க.பொ.த உயர்தர மாணவர்களின் சுயமதிப்பீடும் கல்வி அடைவு மட்டமும் : யாழ்ப்பாணக் கல்விக் கோட்ட 1AB பாடசாலைகளை மையப்படுத்திய ஓர் உளவியல் ஆய்வு 40

Ms. Saththiyalingam Vaishnavi, Dr. Kanthasami Kajavinthan

MOTHER TONGUE INFLUENCE ON LEARNING ENGLISH AS A SECOND LANGUAGE AMONG SRI LANKAN UNIVERSITY STUDENTS 41

Mr. Mohamed Musthafa Abdul Rahuman, Dr. Singanayagam Umashankar

GENDER TRIBULATIONS IN MAHESH DATTANI'S ON A MUGGY NIGHT IN MUMBAI 42

Dr. V. Francis

யுத்த மௌனிப்புக்குப் பின்னரான இலங்கையில் சமயங்களின் இயங்கியல் 43

Dr. Thiruchelvam Selvamanoharan

# ABSTRACTS

**Humanities and Social Sciences (Environment and Geography)**

# கோறளைப்பற்று பிரதேச செயலகப்பிரிவின் தெரிவு செய்யப்பட்ட கிராமசேவகர் பிரிவுகளில் குடிநீரின் தரம் பற்றிய இடரீதியான பகுப்பாய்வு

Mr. Srimogan Srilaxan
Department of Geography,
Faculty of Arts & Culture,
Eastern University, Sri Lanka.
srilakshan8@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்:**

மட்டக்களப்பு மாவட்டத்தின் கோறளைப்பற்று பிரதேசத்தில் குடிநீரின் தரம் தொடர்பிலான பல்வேறுபட்ட சமூக, பொருளாதார பிரச்சினைகளை மக்கள் எதிர்நோக்கி வருகின்றனர். இப்பிரச்சினையை மையமாகக் கொண்டு முன்னெடுக்கப்பட்ட இவ் ஆய்வின் பிரதான நோக்கம் கோறளைப்பற்று பிரதேச செயலகப்பிரிவின் தெரிவு செய்யப்பட்ட கிராமசேவகர் பிரிவுகளில் குடிநீரின் தரம் பற்றிய இடரீதியான பகுப்பாய்வினை மேற்கொள்ளல் ஆகும். உப நோக்கங்களாக ஆய்வுப் பிரதேசத்தில் குடிநீரின் தரம் தொடர்பான பரமானங்களைப் பரிசீலித்து படமாக்கல், ஆய்வுப் பிரதேசத்தில் குடிநீரின் தரமாறுபாட்டுக்கு பொறுப்பான காரணிகளை இனங்காணுதல், ஆய்வுப் பிரதேசத்தில் குடிநீரின் தரமாறுபாடு காரணமாக மக்கள் எதிர்நோக்கும் சவால்களைக் கண்டறிதல், குடிநீர்ப் பிரச்சினை சார்ந்து எதிர்நோக்கப்படும் சவால்களுக்கான தீர்வுகளை முன்வைத்தல் ஆகியன அமையப் பெற்றுள்ளன. ஆய்வில் அளவைசார் மற்றும் பண்புசார் ரீதியாக இரு முறையியல்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆய்வுக்குத் தேவையான முதலாம்நிலைத் தரவுகள் நேரடி அவதானிப்பு, நேர்காணல், பரிசோதனை ஆகிய முறைகளின் ஊடாகவும் இரண்டாம்நிலைத் தரவு மூலங்களில் இருந்தும் பெறப்பட்டுள்ளன. ஆய்வுப் பிரதேசம் முழுக்குடியாக தெரிவுசெய்யப்பட்டு அங்குள்ள கிணறுகளில் 3% எனும் அடிப்படையில் 52 மாதிரிகள் பெறப்பட்டு அவற்றின; pH, EC, TDS, Turbidity, Salinity ஆகிய பரமானங்கள் ஆய்வுகூடப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு பெறுமானங்கள் பெறப்பட்டன. பரமானம் ஒவ்வொன்றினதும் பெறுமானங்களின் இடரீதியான வேறுபாடுகள் ArcGIS 10.4 மென்பொருள் மூலமாகப் படமாக்கப்பட்டு தரரீதியான நிலைமைகள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. நாசிவன்தீவு கிராமசேவகர் பிரிவில் காணப்படும் குடிநீர்க்கிணறுகளில் மிக உயர்வாக TDS மற்றும் உவராக்கம் ஆகியன அதிகரித்துக் காணப்படுகின்றன. pH ஆய்வுப்பிரதேசத்தின் அனைத்து இடங்களிலும் பருகுவதற்கு உகந்த வரையறைக்குள்ளும், மின்கடத்துதிறன், கலங்கற்தன்மை ஆகியவை ஆய்வுப் பிரதேசத்தின் எல்லாப் பகுதிகளிலும் கூடிக்குறைந்து காணப்படுகின்றது. குடிநீர்க் கிணறுகளின் இத்தகைய தரமாறுபாடுகளுக்கு பிரதேசத்தின் அமைவிடமும் தரைத்தோற்றமும், மண் அமைப்பு, இயற்கை அனர்த்தங்கள், போன்ற பௌதிக காரணிகளும் கண்டல் தாவர அழிப்புக்கள், மணல் அகழ்வு, குடிநீர்க்கிணறுகளின் ஒழுங்கற்ற பராமரிப்புகள், ஒழுங்கற்ற வடிகாலமைப்புகள், விவசாய நடவடிக்கைகள், தொழிற்சாலைகள் போன்ற மானிடக் காரணிகளும் செல்வாக்குச் செலுத்துகின்றமை கண்டறியப்பட்டுள்ளது.

***திறவுச்சொற்கள்:*** *உவர்த்தன்மை, கலங்கற்தன்மை, குடிநீரின்தரம், பரமானம், TDS*

# வாகரை பிரதேசத்தின் கரையோர வளங்களும் அபிவிருத்திக்கான வாய்ப்புகளும்

Mr. Kannappan Sutharshan
Department of Geography,
Faculty of Arts & Culture,
Eastern University, Sri Lanka.
sutharshan1019@gmail.com

Mrs. Thavapraba Sachithanantham
Department of Geography,
Faculty of Arts & Culture,
Eastern University, Sri Lanka.
thavaprabas@esn.ac.lk

**ஆய்வுச் சுருக்கம்:**

மட்டக்களப்பு மாவட்டத்தில் கரையோர வளம் என்பது மிகப் பெறுமதியான ஒன்றாக காணப்படுகின்றது. அந்தவகையில் கோறளைப் பற்று வடக்கு வாகரை பிரதேச செயலகப் பிரிவில் கரையோரமானது 40 Km தூரம் பரந்து காணப்படுகின்றது. இக்கரையோர பகுதியிலுள்ள வளங்கள் முறையாக அடையாளப்படுத்தி அபிவிருத்திக்குட்படுத்தாத நிலை காணப்படுகின்றது. அதன்படி ''வாகரைப் பிரதேசத்தின் கரையோர வளங்களும் அபிவிருத்திக்கான வாய்ப்புகளும்'' என்ற தலைப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள இவ் ஆய்வானது வாகரைப் பிரதேசத்தின் கரையோர வளங்களை அடையாளப்படுத்தி அவற்றின் மூலம் அபிவிருத்திக்கான வாய்ப்புகளைக் கண்டறிதல் எனும் பிரதான நோக்கத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்காக நேரடி அவதானிப்பு, நேர்காணல் ஆகிய முதலாம் நிலை தரவுகள் மூலமும் இரண்டாம் நிலை தரவுகள் மூலமும் தரவுகளும் தகவல்களும் சேகரிக்கப்பட்டுள்ளன. பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகள், தகவல்களை அடிப்படையாகக் கொண்டு கலப்பு அணுகுமுறையினூடாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்வுப் பிரதேசத்தில் அடையாளம் காணப்பட்ட வளங்களான கண்டல் தாவரங்கள், முருகைக் கற்பாறைகள், கடற்புற்கள், கடற்கரையோரங்கள், மீன்வளங்கள், கற்பாறைகள், கனியமணல் (இல்மனைட்), ஏனைய கரையோரத் தாவரங்கள் போன்றவை ArcGIS 10.3 மென்பொதியினைப் பயன்படுத்தி படமாக்கப்பட்டுள்ளன. SWOT பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டதன் மூலம் பிரதேச அபிவிருத்தியை மேற்கொள்வதற்கான பலம், பலவீனம், வாய்ப்பு மற்றும் தடை என்பன அறியப்பட்டு அபிவிருத்தியை எவ்வாறு மேற்கொள்ளலாம் என்பது தொடர்பாகவும் ஆய்வில் முன்மொழியப்பட்டுள்ளது. கரையோர வளங்களைச் சரியான முறையில் பேணி பொருளாதார ரீதியாக மாற்றியமைக்க கைத்தொழில், சுற்றுலா, மீன்பிடி மற்றும் விவசாயமும் கால்நடைவளர்ப்பும் ஆகிய அபிவிருத்திகளை மேற்கொண்டு சரியான முறையில் நடைமுறைப்படுத்தும் போது ஆய்வுப் பிரதேசத்தை தற்போதுள்ள நிலைமையில் இருந்து பொருளாதார மற்றும் சமூக ரீதியாக முன்னேற்றமடையச் செய்ய முடியும் எனும் பரிந்துரைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

***திறவுச் சொற்கள்*** *: அபிவிருத்தி, கரையோரம், கனியமணல், சுற்றுலா, பொருளாதாரம்*

# சத்துருக்கொண்டான் பிரதேசத்தின் இயற்கை வளங்கள் மீதான அச்சுறுத்தலும் அபிவிருத்திக்கான உபாயங்களும்

Ms. Niklas Akaliya
Department of Geography,
Faculty of Arts & Culture,
Eastern University, Sri Lanka.
*niklasakaliya@gmail.com*

Mrs. Thavapraba Sachithanantham
Department of Geography,
Faculty of Arts & Culture,
Eastern University, Sri Lanka.
*thavaprabas@esn.ac.lk*

**ஆய்வுச் சுருக்கம்**

இன்றைய காலத்தில் இலங்கையில் காணப்படுகின்ற இயற்கை வளங்களானது பல்வேறு சவால்களுக்குள்ளாகி வருவதனை அவதானிக்க முடிகின்றது. அவ்வகையில் சத்துருக்கொண்டான் பிரதேசத்தின் இயற்கை வளங்கள் தரமிழப்பின் காரணமாக மக்கள் பல்வேறு பௌதிக, பொருளாதார மற்றும் சமூக தாக்கத்திற்கு உட்பட்டுள்ளமை மிகப் பெரிய சவாலாக காணப்படுகின்றது. சத்துருக்கொண்டான் பிரதேசத்தில் வளங்களின் முகாமைத்துவச் செயற்பாட்டுகளுக்காகக் கொண்டுவரப்பட்ட செயற்திட்டங்கள் முறையாக நடைமுறைப்படுத்தப்படாமையினால் பிரதேசத்தின் வளங்கள் தொடர்ந்தும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகி வருகின்றன. அவ்வகையில் இவ் ஆய்வானது சத்துருக்கொண்டான் பிரதேசத்தின் இயற்கை வளங்கள் மற்றும் அவை தொடர்பான பிரச்சினைகளை எடுத்துக்காட்டுவதுடன், அபிவிருத்திக்கான செயற்பாடுகளையும் வெளிக்கொணர்வதாக அமைந்துள்ளது. ஆய்வுப் பிரதேசத்தில் காணப்படுகின்ற வளங்களை அடையாளப்படுத்தி படமாக்கல் செய்துள்ளதுடன், இங்கு காணப்படுகின்ற வளங்கள்சார் பிரச்சினைகளை எடுத்துக்காட்டுகின்ற வகையிலும் வளங்களை மையப்படுத்திய அபிவிருத்திக்கான உபாயங்கள் பற்றியும் வெளிக்கொணர்வதனை நோக்காகக் கொண்டு இவ் ஆய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்விற்காகத் தயாரிக்கப்பட்ட படங்கள் Google Earth செயலி மூலம் பெறப்பட்டு ஆய்வுப்பிரதேசத்தின் வளங்கள் பற்றிய படம் ArcMap 10.4.1 மென்பொருள் மூலம் Georeference. Digitize செய்யப்பட்டு தயாரிக்கப்பட்டுள்ளதுடன், சத்துருக்கொண்டான் பிரதேசத்தின் குடும்பங்களை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்பட்ட 66 வினாக்கொத்துக்கள் மூலம் பெறப்பட்ட தரவுகள் Microsoft Excel மென்பொருள் மூலமாகவும் கலப்பு முறைப்பகுப்பாய்வு செய்யப்பட்டு ஆய்வு நோக்கங்கள் அடையப்பட்டுள்ளன. மேலும் SWOT பகுப்பாய்வு மூலமாக ஆய்வுப்பிரதேசத்தின் பலம், பலவீனம், வாய்ப்பு, தடை என்பனவும் இனங்காணப்பட்டுள்ளன. சத்துருக்கொண்டான் பகுதியில் மானிடக்காரணிகளால் 82 சதவீதமான வளங்கள் தரமிழக்கச் செய்யப்படுவதும் அதில் முறையற்ற கழிவகற்றலால் 48 வீதமான தரமிழப்பு ஏற்படுவதும் அறியப்பட்டுள்ளது. இவ் ஆய்வின் ஊடாகச் சத்துருக்கொண்டான் பிரதேசத்தின் வளங்கள் சார்ந்த பிரச்சினைகள், அதனால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் என்பன விரிவாக ஆராயப்பட்டுள்ளதுடன், வளங்களைப் பாதுகாப்பதற்கான முகாமைத்துவ நடவடிக்கைகள் பற்றியும் அதனால் பிரதேசத்தினை எவ்வாறு அபிவிருத்தியடையச் செய்யலாம் என்பது பற்றியும் ஆய்வில் முன்வைக்கப்பட்டுள்ளது.

***திறவுச்சொற்கள்:*** *அபிவிருத்தி, இயற்கை வளங்கள், படமாக்கல், முறையற்ற கழிவகற்றல். வளப்பாதுகாப்பு*

# சுற்றுலாத்துறைக்கு உள்ளார்த்தமான அமைவிடங்களும் அவற்றின் முக்கியத்துவங்களும்: கேகாலை மாவட்டத்தினை மையமாகக் கொண்ட ஆய்வு

Ms. Mohamed Ismail Fathima Rihma
Department of Geography,
Faculty of Arts & Culture,
Eastern University, Sri Lanka.
*mmifrihma@gmail.com*

Mrs. Thavapraba Sachithanantham
Department of Geography,
Faculty of Arts & Culture,
Eastern University, Sri Lanka.
*thavaprabas@esn.ac.lk*

**ஆய்வுச் சுருக்கம்:**

இலங்கையில் அந்நியச் செலாவணியை ஈட்டித் தருகின்ற முக்கியமான துறையாகச் சுற்றுலாத்துறை விளங்குகின்றது. கேகாலை மாவட்டத்தில் சுற்றுலாவுக்கு வாய்ப்பான காரணிகளான காலநிலை, தரைத்தோற்றம், இயற்கை காட்சிகள், நீர்வீழ்ச்சி, காடுகள், மலைகள் வரலாற்று இடங்கள் போன்றன சுற்றுலாவுக்கு வாய்ப்புக்கான இடங்களாக காணப்படுகின்றன. இதன் அடிப்படையில் "சுற்றுலாத்துறைக்கு உள்ளார்த்தமான அமைவிடங்களும் அவற்றின் முக்கியத்துவங்களும்: கேகாலை மாவட்த்தினை மையமாக கொண்ட ஆய்வு" என்ற தலைப்பில் மாவனல்லை மற்றும் அரனாயக்க பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் சுற்றுலாத்துறை வாய்ப்பான இடங்களை அடையாளம் காண்பதை நோக்காகக் கொண்டு இவ் ஆய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது. நேரடி அவதானம், கலந்துரையாடல், நேர்காணல் போன்ற முதலாம் நிலைத் தரவு சேகரிப்பு முறையும் பிரசுரிக்கப்பட்ட பிரசுரிக்கப்படாத இரண்டாம் நிலை தரவுகளும் பெறப்பட்டுள்ளது. ArcMap 10.3.1, Google Earth Pro என்பவற்றின் ஊடாக இடரீதியான பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், சுற்றுலா மையங்கள் தொடர்பாக விளக்கங்கள் முன்வைக்க விபரணப் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், அடையாளப்படுத்தப்பட்ட சுற்றுலா மையங்கள் தொடர்பாக CapCut பயன்படுத்தி காணொளி பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இங்கு அரனாயக்க பிரதேச செயலாளர் பிரிவில் 8 சுற்றுலா மையங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளதுடன், மாவனல்லைப் பிரதேச செயலாளர் பிரிவில் 7 சுற்றுலா மையங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. இச்சுற்றுலா மையங்கள் வரலாற்றுடன் தொடர்புபட்ட மையங்களாகவும், இயற்கை சார்ந்த சுற்றுலா மையங்களாகவும் விளங்குகின்றன.

***திறவுச்சொற்கள்:*** *அந்நியச்செலாவணி, சுற்றுலாத்துறை, சுற்றுலா மையங்கள், வளவாய்ப்புகள், விபரணப் பகுப்பாய்வு*

# மட்டக்களப்பு மாவட்டத்தின் கொம்மாதுறை தொடக்கம் ஆறுமுகத்தான் குடியிருப்பு வரையான பிரதேசத்தின் நகர விரிவாக்கல் பாங்குகள்

Ms. Pavatharani Suntharalingam
Department of Geography,
Faculty of Arts & Culture,
Eastern University, Sri Lanka.
pavatharanisuntharalingam@gmail.com

Mrs. Thavapraba Sachithanantham
Department of Geography,
Faculty of Arts & Culture,
Eastern University, Sri Lanka.
thavaprabas@esn.ac.lk

**ஆய்வுச் சுருக்கம்:**

"மட்டக்களப்பு மாவட்டத்தின் கொம்மாதுறை தொடக்கம் ஆறுமுகத்தான் குடியிருப்பு வரையான பிரதேசத்தின் நகர விரிவாக்கல் பாங்குகள்" எனும் தலைப்பில் மேற்கொள்ளப்பட்ட இவ் ஆய்வானது ஆய்வுப் பிரதேசத்தின் இடரீதியான நகர விரிவாக்கல் பாங்குகளைக் கண்டறிதல் எனும் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்வுப்பிரதேசத்தில் திட்டமிடப்படாதவகையில் நகர விரிவாக்கமானது இடம்பெறுவதன் காரணமாக வேறுபட்ட பாங்குகளில் நகர விரிவாக்கம் காணப்படுவது ஆய்வின் பிரச்சினையாக உள்ளது. இவ் ஆய்வானது கலப்பு முறையிலான ஆய்வாக அமைவதோடு, இவ் ஆய்விற்காக முதலாம் நிலைத்தரவான நேரடி அவதானிப்பும் இரண்டாம் நிலைத்தரவுகளான OpenStreet map தரவுகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன. அந்தவகையில் இவ் ஆய்விற்காக Arc GIS 10.3, Mapsme,Google Earth pro, OpenStreet map போன்ற படமாக்கல் கருவிகள் பயன்படுத்தப்பட்டு படங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவ் ஆய்வின் பெறுபேறுகளாக ஆய்வுப்பிரதேசத்தில் நாடா வளர்ச்சி, சிதறல் வளர்ச்சி, குறைந்த அடர்த்தி வளர்ச்சி போன்ற நகர விரிவாக்கல் பாங்குகள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. சிதறல் வளர்ச்சியானது கொம்மாதுறை மேற்கு கிராம சேவகர் பிரிவிற்குற்பட்ட பிரதேசங்களில் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. சிதறல் வளர்ச்சி அடையாளப்படுத்தப்பட்டுள்ள பிரதேசத்தில் 2003 ஆம் ஆண்டுகாலத்தில் எந்தவொரு கட்டடங்களும் காணப்படவில்லை. ஆனால் பிற்பட்ட காலங்களிலேயே இங்கு கட்டிடங்கள் விருத்தி பெற்றுள்ளன. இவ்வாறான சிதறல் வளர்ச்சி விவசாய நிலங்களில் விருத்தி பெற்று வருவதன் காரணமாக எதிர்காலங்களில் விவசாய நிலத்தின் அளவு குறைவடைவதற்கான வாய்ப்பும் காணப்படுகின்றது. ஆறுமுகத்தான் குடியிருப்பு 1, ஆறுமுகத்தான் குடியிருப்பு 2, கொம்மாதுறை கிழக்கு, குமாரவேலியார் கிராமம், எல்லைநகர், செங்கலடி 1, செங்கலடி 2, ஏறாவூர் 4, ஏறாவூர் 5 ஆகிய பிரதேசங்களில் குறைந்த அடர்த்தி வளர்ச்சி இடம் பெற்றுள்ளமையை அவதானிக்க முடிந்தது. நாடா வளர்ச்சியினை திருகோணமலை பிரதான வீதியில் ஆறுமுகத்தான் குடியிருப்பு, ஏறாவூர், செங்கலடி, கொம்மாதுறை போன்ற பிரதேசங்களில் அமையப்பெற்றிருப்பதோடு பிரதான வீதியுடன் இணைந்தவகையில் பதுளை வீதி, புன்னைக்குடா வீதி, செங்கலடிச் சந்தை வீதி போன்றவற்றிலும் அமையப்பெற்றுள்ளது. அந்தவகையில் 100m எல்லையினுள் அமையப்பெற்றுள்ள பெரும்பாலான கட்டடங்கள் வணிக நிறுவனங்களாகவே அமைந்துள்ளன. அதிலும் குறிப்பாக அதிகளவான வணிக நிறுவனங்கள் வீதியில் இருந்து 50m தூரம் வரையான பிரதேசத்தினுள்ளே வரிசையாக அமைந்துள்ளமையையும் அவதானிக்க முடிந்தது. இந்த நாடா வளர்ச்சியானது காலரீதியாகவும் வளர்ச்சி பெற்று வருவதனைக் காணக்கூடியதாக உள்ளது.

***திறவுச்சொற்கள் :*** *காலரீதியான வளர்ச்சி, குறைந்த அடர்த்தி வளர்ச்சி, சிதறல் வளர்ச்சி, நகர விரிவாக்கம், நாடா வளர்ச்சி,*

# கோறளைப்பற்று பிரதேச செயலகப் பிரிவில் மீனவர்கள் எதிர்நோக்கும் சவால்கள்

Mr. Srimogan Srilaxan
Department of Geography,
Faculty of Arts & Culture,
Eastern University, Sri Lanka.
*srilakshan8@gmail.com*

Ms.Tharunithaa Ragunathan
Department of Geography,
Faculty of Arts & Culture,
Eastern University, Sri Lanka.
*tharunithaa.r@gmail.com*

**ஆய்வுச் சுருக்கம்:**

கோறளைப்பற்று பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட வாழைச்சேனை பிரதேசமானது கரையோரத்தைக் கொண்ட ஒரு பிரதேசமாகும். இதனால் இங்கு வாழும் கரையோர மக்களின் ஜீவனோபாயத் தொழிலாக மீன்பிடி காணப்படுகின்றது. இங்கு இயற்கையாக அமைந்த கடற்கரை, காலநிலை, கடல்சார் வளங்கள் என்பவை மீன்பிடியில் செல்வாக்குச் செலுத்துகின்றன. கோறளைப்பற்று பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மீனவர்கள் எதிர்நோக்கும் சவால்களைக் கண்டறிதல் இவ் ஆய்வின் நோக்கமாகும். இவ் ஆய்விற்காக முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகள் திரட்டப்பட்டுள்ளன. முதலாம்நிலைத் தரவுகளாக நேர்காணல், நேரடி அவதானிப்பு, கலந்துரையாடல் ஆகிய முறைகள் மூலம் தரவுகள் திரட்டப்பட்டு பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டன. இங்கு மீன்பிடியை மேற்கொள்கின்ற மீனவ சமூகத்தினரிடையே பல்வேறு விதமான பிரச்சினைகள் காணப்படுகின்றன. இவ் ஆய்வின்படி மீன்பிடி சார்ந்த பொதுவான பிரச்சினைகளாக காலநிலை மாற்றம், தொழிற்பயிற்சியின்மை, சந்தை வாய்ப்புகள் குறைவாகக் காணப்படுகின்றமை, அரசாங்கம் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவிகள் கிடைக்கப்பெறாமை, மீனவர் சங்கத்துடன் தொடர்புடைய பிரச்சினைகள், பிறபகுதி மீனவர்களின் ஆதிக்கம், ஆழ்கடல் மீன்பிடி சார்ந்த பிரச்சினைகள் கண்டறியப்பட்டுள்ளன. எனவே இப் பிரச்சினைகளை வெற்றிகொண்டு மீனவ சமூகத்தின் வாழ்க்கையை மேம்படுத்தல் ஆய்வுப்பிரதேசத்தில் வேண்டப்படும் ஒன்றாகும்.

***திறவுச்சொற்கள் :*** *கரையோர மக்கள், மீன்பிடி, மீனவ சமூகம், மீனவர் சங்கம், ஜீவனோபாயம்*

# Humanities and Social Sciences (Political Science & Governance)

# அமெரிக்காவிற்கும் ரஸ்யாவிற்குமிடையிலான அதிகாரச் சமநிலைக்கான யுத்தம்: சிரியாவின் உள்நாட்டு யுத்தத்தினை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

Ms. Thampiraja Laxsayini
Department of Social Sciences,
Faculty of Arts & Culture,
Eastern University, Sri Lanka.
*laxsayi@gmail.com*

Dr. N. Pushparajah
Department of Social Sciences,
Faculty of Arts & Culture,
Eastern University, Sri Lanka.
*pushparajahn@esn.ac.lk*

**ஆய்வுச் சுருக்கம்:**

சர்வதேச அரசியலில் அதிகாரத்திற்கான போராட்டம் என்பது தொடர் நிகழ்வாகக் காணப்படும் ஒன்றாகும். அந்தவகையில் இன்று பரவலாக உலக அரங்கில் பேசப்பட்டு வரும் விடயமாக சிரியாவின் உள்நாட்டுப் போர் காணப்படுகின்றது. எனவே, இவ் ஆய்வு அமெரிக்காவிற்கும் ரஸ்யாவிற்குமிடையிலான அதிகாரச் சமநிலைக்கான யுத்தத்தில் சிரிய விவகாரம் எவ்வாறு கையாளப்படுகின்றது என்பது தொடர்பானதாகவே அமைந்துள்ளது. மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் ஒரு வல்லரசாக மாறுவதில் அமெரிக்கா மற்றும் ரஸ்யா ஆகிய நாடுகள் சிரிய யுத்தத்தை தமது அதிகாரச் சமநிலைக்கான யுத்த களமாக மாற்றியுள்ளமையால் அந்த யுத்தம் தொடர்ச்சியாக இடம்பெற்றுக்கொண்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது. ரஸ்யா தமது நலன்களை சிரியாவில் பாதுகாப்பதற்கு அசாத் ஆட்சி அவசியம் என்பதை வலியுறுத்துகின்றது. அதேநேரம் அமெரிக்கா அசாத் ஆட்சியை வீழ்த்தி தமக்கு இசைவான ஆட்சியை ஏற்படுத்த போராடி வருகின்றது. இதனால் அமெரிக்கா மற்றும் ரஸ்யாவிற்கிடையிலான மோதல் வளர்வதுடன், பிராந்திய நாடுகளுக்கிடையிலான அதிகாரப் போராட்டத்தையும் தூண்டியுள்ளது. இதனால் சிரியாவின் உள்நாட்டு யுத்தமானது சர்வதேச போட்டிக் களமாக பரிணாமம் அடைந்து இன்றுவரை தொடர்வதாகக் காணப்படுகின்றது. சிரிய யுத்தத்திற்கான சமாதான முயற்சிகள் பின்னடைவைச் சந்திப்பதுடன் இந்த யுத்தமானது ஈரான் மற்றும் சவூதி அரேபியாவிற்குமிடையேயும் பிராந்திய அதிகாரப் போட்டியை மேலும் தூண்டியுள்ளதையும் இவ் ஆய்வு மூலம் கண்டுகொள்ளக்கூடியதாக உள்ளது. ஆகவே சிரியாவில் ஜனநாயகரீதியான வாக்கெடுப்பை நடத்துதல், மேற்குலகு இஸ்லாமிய நாடுகள் மீதான முரண்பாட்டுணர்வை நீக்குதல் போன்ற வழிமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம் சிரியாவின் உள்நாட்டு யுத்தத்தை ஒரு முடிவுநிலைக்குக் கொண்டு வரமுடியும் என்பது ஆய்வின் வெளிப்பாடாகும்.

***திறவுச்சொற்கள்:*** *அசாத் ஆட்சி, அதிகாரச் சமனிலை, இஸ்லாமிய நாடுகள், சர்வதேச அரசியல், சிரிய விவகாரம்*

# இலங்கையில் மாற்றுத்திறனாளிகள் வாக்குரிமையினைப் பிரயோகிப்பதற்கான வசதிகளை வலுப்படுத்தலும், ஊக்குவித்தலும்

Ms. Selvaratnam Tharunitha
Department of Social Sciences,
Faculty of Arts & Culture,
Eastern University, Sri Lanka.
*tharunitha878@gmail.com*

Prof. V. Gunaretnam
Department of Social Sciences,
Faculty of Arts & Culture,
Eastern University, Sri Lanka.
*gunaretnamv@esn.ac.lk*

**ஆய்வுச் சுருக்கம்:**

ஓர் ஜனநாயக நாட்டில் உள்ள சகல மக்களுக்கும் சமமான வகையில் அரசியலில் பங்குபற்றுவதற்கான உரிமை வழங்கப்பட்டுள்ளது. இருப்பினும் சர்வதேசரீதியிலும், இலங்கையிலும் உடல்ரீதியாகவோ அல்லது மனரீதியாகவோ பாதிப்பிற்குட்பட்ட மாற்றுத்திறனாளிகள் அரசியலில் பங்குபற்றுதல் என்பது மிகவும் அரிதானதாகவே காணப்படுகின்றது. இதற்கான முக்கிய காரணமாக மாற்றுத்திறனாளிகளும் வாக்காளர்களே என்ற ரீதியில் சமத்துவமாக பேணப்படாமை, வாக்கினை முறையான வகையில் வழங்குவதற்கு வழிகாட்டுகின்ற அரசாங்கம் மாற்றுத்திறனாளிகளுக்கான வாக்களிப்பு வசதிகள் தொடர்பில் சரியான சட்டதிட்டங்களை நடைமுறைப்படுத்தாமை, வாக்காளர் இடாப்பில் முறையாக அவர்களது பெயர்களைப் பதிவுசெய்வதற்கு ஊக்குவிக்கப்படாமை போன்றவை அடையாளப்படுத்தப்படுகின்றன. எனவே இப்பிரச்சினைகளைக் கருத்திற் கொண்டு பதுளை மாவட்ட பதுளைப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட 29 கிராமசேவகர் பிரிவுகளில் இம்மாற்றுத்திறனாளிகளின் வாக்குரிமை வசதிகளை மேம்படுத்தும் வகையில் இவ் ஆய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்படி ஆய்வுப்பிரதேசத்தில் மாற்றுத்திறனாளிகள் வாக்களிப்பதற்குத் தடையாக உள்ள காரணிகள், மாற்றுத்திறனாளிகள் தொடர்பாக உள்ள கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதில் உள்ள சிக்கல்கள், மாற்றுத்திறனாளிகளின் வாக்களிப்பினை அதிகரிக்க எவ்வாறான விடயங்கள் பின்பற்றப்பட வேண்டும் என்பவற்றைக் கண்டறிவதனையும் இவ் ஆய்வு தனது நோக்கங்களாகக் கொண்டுள்ளது. இந்நோக்கங்களை அடைந்து கொள்ளும் பொருட்டு முதலாம்நிலைத் தரவுகளைப் பெற்றுக்கொள்வதற்காக மாற்றுத்திறனாளிகள், தேர்தல் திணைக்கள அதிகாரிகள், தேர்தல் கடமைகளில் ஈடுபட்டோர், சமூக நிறுவனங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவன அதிகாரிகள், கிராம உத்தியோகத்தர்கள் போன்றோரிடம் வினாக்கொத்து, கள ஆய்வு, நேர்காணல் போன்றவற்றின் மூலமும், இரண்டாம்நிலைத் தரவுகள் நூல்கள், சஞ்சிகைகள், ஆய்வறிக்கைகள், இதழ்கள், அறிக்கைகள், இணையம் மற்றும் கையேடுகள் என்பவற்றின் மூலமும் பெற்றுக்கொள்ளப்பட்டன. மேலும், இவ் ஆய்வானது நிகழ்தகவு மாதிரிகளில் ஒன்றான எளிய எழுமாற்று மாதிரியெடுப்பினை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. பதுளைப் பிரதேச செயலகத்தினை முழு ஆய்வுப்பிரதேசமாகக் கொண்டு 29 கிராமசேவகர் பிரிவுகளை மையப்படுத்தி சிறப்பாக பதுளைப் பிரதேச செயலாளர் பிரிவில் 150 மாதிரி நபர்கள் உள்ளடக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகள் Excel விரிதாள் மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டு விபரிக்கப்பட்டுள்ளன. இதன்படி ஆய்வுப்பிரதேசத்தில் மாற்றுத்திறனாளிகளின் வாக்குரிமை வசதிகள் பற்றாக்குறையாக உள்ளமையை இனங்காணக்கூடியதாக இருந்தது. எனவே இவ்வாறான பிரச்சினைகளைக் களைந்து அவர்களுக்கான வாக்களிப்பு வசதிகளைச் செய்து கொடுப்பதனூடாக அவர்களது வாக்களிப்பு வீதத்தினை அதிகரிக்கலாம் என்ற ரீதியில் இவ் ஆய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

***திறவுச்சொற்கள்:*** *ஊக்கப்படுத்தல், மாற்றுத்திறனாளிகள், வலுப்படுத்தல், வாக்களிப்பு வசதிகள், வாக்குரிமை*

# தாலிபான்களின் மீளெழுச்சியும் ஆப்கானிஸ்தானில் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறை மற்றும் பாகுபாடுகள் - இஸ்லாமிய நோக்கில் பெண்களின் உரிமைகள் ஓர் ஆய்வு

Ms. S. F. Ayman Sihara
Department of Social Sciences,
Faculty of Arts & Culture,
Eastern University, Sri Lanka.
*aymansihara05@gmail.com*

Prof. V. Gunaretnam
Department of Social Sciences,
Faculty of Arts & Culture,
Eastern University, Sri Lanka.
*gunaretnamv@esn.ac.lk*

**ஆய்வுச் சுருக்கம்:**

தற்கால உலகில் பெண்களின் உரிமைகள் என்ற எண்ணக்கரு முக்கியத்துவம் பெறுகின்றது. உலகளாவியரீதியில் பெண்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக பல்வேறு ஏற்பாடுகள் காணப்படுகின்றன. அவை பெண்களின் உரிமைகளைப் பாதுகாப்பதாக அமைகின்றது. அது மட்டுமல்லாமல் தற்கால உலகில் பெண்கள், சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள், பாகுபாடுகள் ஆகியன அதிகம் இடம் பெற்றுக்கொண்டு வருகின்றன. சமயங்களில் கூட பெண்களுக்கான உரிமைகள் என்பது வலியுறுத்தப்பட்டு இருக்கின்றது. அந்தவகையில் இஸ்லாமிய மதத்தில் பெண்களுக்கான உரிமைகள் என்பது குறிப்பிடப்பட்டு இருக்கின்றது. இஸ்லாம் மதமானது பெண்களைக் கண்ணியமாக மதிக்கின்றது. பெண்களுக்கான அனைத்து வகையான உரிமைகளையும் இஸ்லாமிய மதம் வழங்குகின்றது. ஆப்கானிஸ்தான் நாட்டை ஆட்சி செய்யும் தாலிபான்கள் மூலமாக அங்கு பெண்களினுடைய உரிமைகள் என்பது மீறப்பட்டு வருகின்றது. ஆப்கானிஸ்தானில் பெண்கள் சிறுமிகளுக்கு எதிரான வன்முறைகளும், பாகுபாடுகளும் அதிகம் இடம் பெறுகின்றன. தாலிபான்கள் இஸ்லாமிய மதத்தினை பின்பற்றுவதனால் இஸ்லாமிய சட்ட முறையை ஆப்கானிஸ்தானில் அரசியலமைப்பாகக் காணப்படுகின்றது.

அந்தவகையில் இவ் ஆய்வானது ஆப்கானிஸ்தானில் தாலிபான் ஆட்சியின் மூலம் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான பாகுபாடுகள், வன்முறைகள் மற்றும் உரிமை மீறல்கள் இடம்பெற்று வருகின்றன. இதனை ஆய்வுப் பிரச்சினையாகக் கொண்டு இவ் ஆய்வு காணப்படுகின்றது. இவ் ஆய்வின் நோக்கமாக தாலிபான்கள் ஆட்சி முறையினால் ஆப்கானிஸ்தானில் ஏற்படும் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறைகள், பாகுபாடுகள் மற்றும் உரிமை மீறல்கள் எவை எனக் கண்டறிந்து, அதனை இஸ்லாமியப் பெண்கள் உரிமை நோக்கில் தாலிபான்களின் பின்பற்றும் சட்டமுறை தொடர்பாக பகுப்பாய்வு செய்வதே ஆய்வின் நோக்கமாக காணப்படுகின்றது. இவ் ஆய்வானது பண்புரீதியிலான ஓர் ஆய்வாகும். இதற்காக இரண்டாம் நிலைத்தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆப்கானிஸ்தானில் தாலிபான்களின் ஆட்சியால் பெண்கள், சிறுமிகளுக்கு எதிரான பாகுபாடுகள், வன்முறைகள், உரிமைமீறல்கள் இடம்பெறுவது வெளிப்படையான உண்மையாகவும், மற்றும் இவர்களின் சில சட்டமுறைகள் இஸ்லாமிய சட்டமுறைக்கு முரணானதாக காணப்படுகின்றது. இந்த ஆய்வில் ஆப்கானிஸ்தானில் நல்லாட்சி நிலவுவதற்கு சில பரிந்துரைகளும் குறிப்பிடப்பட்டுள்ளன.

***திறவுச்சொற்கள்:*** *ஆப்கானிஸ்தான், இஸ்லாம், தாலிபான், பெண்கள் உரிமைகள், வன்முறைகள்*

# விகிதாசார தேர்தல் முறையில் கேகாலை மாவட்ட தமிழ் மக்களின் அரசியல் பிரதிநிதிதுவம்: கடந்த ஐந்து பாராளுமன்ற தேர்தல்களை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு (2001 - 2020)

Ms. Rajah Ramya
Department of Social Sciences,
Faculty of Arts & Culturte,
Eastern University, Sri Lanka.
*rajaramya1119@gmail.com*

Mr. Chelliah Sivanayagam
Department of Social Sciences,
Faculty of Arts & Culturte,
Eastern University, Sri Lanka.
*sivanayagamc@esn.ac.lk*

**ஆய்வுச் சுருக்கம்:**

உலகில் உள்ள பெரும்பாலான நாடுகளில் இன்று பிரதிநிதித்துவ ஜனநாயக முறைமையே காணப்படுகின்றது. தாராள ஜனநாயக ஆட்சி முறையின் உயிர் நாடியாக விகிதாசார பிரதிநிதித்துவமுறை விளங்குகின்றது. இலங்கையில் தற்போதைய யாப்பில் இப்பிரதிநிதித்துவ முறைமையே பின்பற்றப்பட்டும் வருகின்றது. இதன் மூலமாக ஜனநாயக விழுமியங்களைப் பேணிக்காப்பதற்காகவும் சிறுபான்மை மக்களின் அரசியல் பங்குப்பற்றலை உறுதிப்படுத்துவதற்காகவும், எளிய பெரும்பான்மை முறையில் ஏற்பட்ட குறைப்பாடுகளை நிவர்த்திப்பதற்காகவும் உருவாக்கப்பட்ட தேர்தல் முறையாக விதாசார பிரதிநிதித்துவ முறை காணப்படுகின்றது. விகிதாசார பிரதிநிதித்துவ முறையைப் பின்பற்றினால் ஜனநாயகம் சிறப்பாக பேணப்படுவதுடன், சிறுபான்மையினருக்கான பிரதிநிதித்துவம் கிடைக்கும் என்ற கருத்தியல்கள் முன்வைக்கப்பட்டாலும் நடைமுறையில் அதன் பிரதிபலிப்பு எதிர்மறையான பல விளைவுகளை இலங்கையைப் பொறுத்தவரையில் ஏற்படுத்திவருகின்றன. இவ்விடயத்தினை அடிப்படையாகக் கொண்டு மலையகத்தின் ஒரு பகுதியாக காணப்படும் கேகாலை மாவட்டத்தில் தமிழ் மக்களுக்கான பிரதிநிதித்துவ பின்னடைவு குறித்த விடயங்களை ஆராயும் வகையில் கேகாலை மாவட்டத்தின் தற்போதைய பிரதிநிதித்துவ நிலைப்பாடு, பிரதிநிதித்துவ பின்னடைவிற்கான காரணம், அதற்கான தீர்வு முயற்சிகளை கண்டறியும் பொருட்டு பண்புசார் தகவல்களையும், அளவுசார் தகவல்களையும் அடிப்படையாகக் கொண்டு அவை இரண்டும் இணைந்த கலப்பு அணுகுமுறையினுடாக இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

***திறவுச்சொற்கள்:*** *அரசியல் பங்குபற்றுகை, சிறுபான்மையினர், பிரதிநிதித்துவ ஜனநாயகம், விகிதாசாரத் தேர்தல்முறை, ஜனநாயக விழுமியம்*

# இலங்கையில் மலையகத் தமிழ் மக்களும் அவர்களுடைய தனித்துவமான இன அடையாளங்களும்

Mr. S. Manogaran
Department of Social Sciences,
Faculty of Arts & Culturte,
Eastern University, Sri Lanka.
*midhanmidhu024@gmail.com*

Mr. Chelliah Sivanayagam
Department of Social Sciences,
Faculty of Arts & Culturte,
Eastern University, Sri Lanka.
*sivanayagamc@esn.ac.lk*

**ஆய்வுச் சுருக்கம்:**

இலங்கை பல்லின மக்கள் வாழும் நாடு என்பதனால் இலங்கையின் பொருளாதாரத்தில் பாரிய பங்களிப்பை வழங்கும் சமூகமாக மலையகத் தமிழ் மக்கள் விளங்குகின்றார்கள். இவர்கள் இலங்கையில் மத்திய மற்றும் அதனை சூழவுள்ள பகுதிகளில் வாழ்ந்து வருகின்றனர். 200 வருடங்களிற்கு முன்னர் இந்தியாவிலிருந்து பிரித்தானியர்களால் இவர்கள் இலங்கையிற்கு கூலித்தொழிலாளர்களாக அழைத்து வரப்பட்டனர். எனினும், இந்த மக்கள் தமது வாழ்க்கை முறையை இலங்கைக்கு ஏற்றாற் போல மாற்றிக்கொண்டு தமது இருப்பை நிலைநிறுத்திக் கொண்டனர். அந்தவகையில், இலங்கையில் மலையகத் தமிழர்கள் தமக்கான தனித்துவமான இனத்துவ அடையாளத்தை ஏற்படுத்திக் கொண்டனர். மலையகத் தமிழர்கள் தமது மொழி, சமய நம்பிக்கை, கலாசாரம், பாரம்பரியம், வாழ்வியல் போன்ற அம்சங்களை கொண்டு தமது இனத்துவ அடையாளத்தை கட்டியெழுப்பியுள்ள போதிலும், இவர்கள் இனத்துவ அடிப்படையில் பல சவால்களிற்கு முகம் கொடுக்கும் இனமாகும். மேலும், மலையகத் தமிழ் மக்கள் தமது இன அடையாளத்தின் காரணமாக பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு வகையான உரிமை மீறல்களையும் பாரபட்சமான கொள்கையையும் நாளுக்கு நாள் அனுபவித்து வருகின்றனர். தனித்துவமான பண்பினைக் கொண்ட மலையகத் தமிழ் மக்களின் இனத்துவ அடையாளத்தை அடிப்படையாகக் கொண்டே இந்த ஆய்வானது அமையப் பெற்றுள்ளது.

இதன்படி இவ் ஆய்விற்கு பண்புரீதியான ஆய்வு முறையியல் பயன்படுத்தப்பட்டுள்ளது. மேலும் இவ் ஆய்வுடன் தொடர்புடைய நூல்கள், சஞ்சிகைகள், ஆய்வு நூல்கள் போன்றவற்றைக் கற்று ஆய்விற்கான செயற்பாட்டுத் திட்டத்தினை உருவாக்கி மேற்கொள்ளப்படும் ஆய்வாகும். இதற்காக இரண்டு வழிகளில் தரவுகள் சேகரிக்கப்பட்டு பயன்படுத்தப்படுகின்றன. இதன்படி முதலாம் நிலைத்தரவுகள் இலங்கை - இந்திய ஒப்பந்தம் இந்திய அரசாங்கத்திற்கும் மலையக அரசியல் தலைவர்களிற்கும் இடையில் இடம் பெற்ற உடன்படிக்கை, மலையக தமிழர்கள் தொடர்பான பேச்சுவார்த்தைகள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டது. மேலும் இவ் ஆய்விற்கான இரண்டாம் நிலைத்தரவுகளாக புத்தகங்கள், பத்திரிகைகள், ஆய்வுக்கட்டுரைகள் மற்றும் சஞ்சிகைகள் போன்றன பயன்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன் இவ் ஆய்வானது விபரணப் பகுப்பாய்வு முறையை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

***திறவுச்சொற்கள்:*** *இன அடையாளம், இலங்கை - இந்திய ஒப்பந்தம், உரிமை மீறல்கள், மலையகத் தமிழர், விபரணப் பகுப்பாய்வு*

# ரஷ்ய - உக்ரைன் போர் இலங்கையில் ஏற்படுத்தும் அரசியல் மற்றும் பொருளாதாரத் தாக்கங்கள் - ஓர் ஆய்வு

Ms. Ravi Abirami
Department of Sical Sciences,
Faculty of Arts & Culturte,
Eastern University, Sri Lanka.
*raviabirami921@gmail.com*

Prof. V. Gunaretnam
Department of Social Sciences,
Faculty of Arts & Culture,
Eastern University, Sri Lanka.
*gunaretnamv@esn.ac.lk*

**ஆய்வுச் சுருக்கம்:**

ரஷ்யா - உக்ரைன் ஆகிய இருநாடுகளுக்கிடையே நிகழும் யுத்தம் சர்வதேச விவகாரங்களில் அரசுகளுக்கிடையில் தாக்கங்களை ஏற்படுத்தி வருகின்றது. இந்நிலைப்பாடானது உலகளாவிய சூழலில் அமைதியையும், ஒருமைப்பாட்டையும் நிலைநிறுத்துவதற்காக முயற்சிக்கின்றன. இப்போர் உலக நாடுகள் முழுவதும் சந்தித்து வரும் பாரிய சவாலாகும். பல நாடுகள் இன்று எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடிக்கு இவ்யுத்தம் காரணம் எனலாம். இவ்வாறு இலங்கை அரசியல் பொருளாதாரத்தில் எவ்வாறான தாக்கங்களை ஏற்படுத்தியது என்ற வகையில் அதன் உண்மைத் தன்மைகளை வெளிக்கொணர்வதை நோக்கமாகக் கொண்டவகையில் இவ் ஆய்வு அமைந்துள்ளது. இதற்காக முதலாம் நிலை மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகள் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன. கலப்பு முறையில் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. இந்தவகையில் ரஷ்யா - உக்ரைன் யுத்தமானது இலங்கையின் அரசியல் மற்றும் பொருளாதாரத்தில் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது. உலகப்பொருளாதார சந்தை நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளது. இலங்கை அரசியல் பொருளாதாரத்தை மேம்படுத்தக்கூடிய கொள்கைகளை அமுல்படுத்துவதுடன் சிறந்த தலைமைத்துவமுடைய ஆட்சியாளர்களை அதிகார அரசியலுக்குள் உள்வாங்க வேண்டும். இலங்கையின் பொருளாதார நிலைகளை மேம்படுத்தக்கூடிய திட்டங்களை உருவாக்க வேண்டும். அரசியல்ரீதியாக ஸ்திரத்தன்மையைப் பேணக்கூடிய ஊழலற்ற நிர்வாகச் செயற்பாடுகளையும், குழுக்களையும் கொண்டு வருவதன் மூலம் இலங்கையின் பொருளாதாரத்தை மேன்மையடையச் செய்யலாம்.

***திறவுச்சொற்கள்:*** *அதிகார அரசியல், இலங்கை அரசியல் பொருளாதாரம், உலகப் பொருளாதாரச் சந்தை, ரஷ்ய - உக்ரைன் போர், ஊழலற்ற நிர்வாகம்*

# Language and Literature

# IMPACT OF HYPERMEDIA-BASED POETRY LEARNING ON WRITING SKILL: AN EXPERIMENTAL STUDY BASED ON 'HIGHER NATIONAL DIPLOMA IN ENGLISH SYLLABUS'

Mr. Mohideen Bawa Nowzath
Department of English,
Sri Lanka Institute of Advanced Technological Education,
nowzathmnf@gmail.com

Dr. Singanayagam Umashankar,
Department of English Language Teaching,
Faculty of Arts and Culture,
Eastern University of Sri Lanka.
umashankars@esn.ac.lk

**Abstract:**

The application of hypermedia-based poetry learning, which basically refers to facilitating the learning process through the control of graphics, images, animation, sound, video, and other multimedia information with the assistance of hypertext aligned to selected learning strategies, plays a major role in the performance of the students. Since no prior research had been done in this area of the academic field, the purpose of this study was to determine the relationship between the performance in the writing skill in the HNDE course of ATI-Sammanthurai of SLIATE and the hypermedia-based learning of poetry under selected categories in the HNDE syllabus with proper learning strategies (operations and actions in word corner with photo method). Ninety students from HNDE, class A, first year, were taken as an experimental group, and ninety students from class B, first year, were taken as a controlled group. A pre-test was conducted for both groups to find out the previous knowledge of the students in the groups in order to compare them, and the mean differences were found to be negligible for both groups from the pre-test. Later, the experimental group was used in the classroom to pursue hypermedia-based poetry learning based on selected learning strategies for six months with sixty hours of learning, while the controlled group was generally taught without the use of hypermedia-based poetry learning. After six months, a post-test was conducted for both groups. When the post-test was conducted, the mean was slightly better for group B than the pre-test, and the mean was considerably better for group A in the post-test. Thus, it is found that there is a positive relationship between hyper-media-based poetry learning using selected learning strategies and performance in the writing skill. The research findings imply that hyper-media-based poetry learning improves the writing skills of the learners.

***Keywords:*** *Hypermedia, Poetry learning strategies, Photo method, Word corner, Writing skill*

# பார்த்திபனின் புனைகதைகளில் பெண்கள் - ஓர் ஆய்வு

Ms. Sivanayagam Sisitha
Department of Tamil Studies,
Faculty of Arts & Culture,
Eastern University, Sri Lanka.
*sisithasisitha2@gmail.com*

**ஆய்வுச் சுருக்கம்:**

புகலிட மூத்த எழுத்தாளர் என்றவகையில் பார்த்திபனுக்கு முதன்மையானதும் தனித்துவமானதுமான ஓர் இடமுண்டு. அந்தவகையில் ‘‘பார்த்திபனின் புனைகதைகளில் பெண்கள் - ஓர் ஆய்வு’’ என்னும் தலைப்பில் அமைந்த இவ் ஆய்வானது புகலிட எழுத்தாளர் என்ற வரிசையில் முதன்மை இடத்தினைப் பெறும் பார்த்திபனது புனைகதைகளில் வரும் பெண்கள் பற்றியதாக அமைந்துள்ளது. அந்தவகையில் பார்த்திபனின் சிறுகதைகள், நாவல்கள் மற்றும் தொடர்கதைகளில் பெண்களின் இருப்பும் அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் மற்றும் ஆசிரியரால் வழங்கப்படும் தீர்வுகள் என பல விடயங்களை விவரித்து அவற்றை விமர்சனப் பார்வையில் நோக்குதல் என்பது இவ் ஆய்வின் நோக்கமாகும். பார்த்திபனது குறிப்பிட்ட சிறுகதைகளும், நாவல்களும், தொடர்கதையும் ஆய்விற்காக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. பெண்களுக்கான சவால்கள், இன்னல்கள், இயல்புகள், தீர்வுகள் என்பவற்றை வெளிப்படுத்துவதில் புனைகதைகளுக்குரிய வகிபாகம் எத்தகையது என்பதை இவ் ஆய்வின் ஆய்வு பிரச்சினையாக அமைந்துள்ளதோடு, விமர்சன மற்றும் விவரண ஆய்வு அணுகுமுறை என்பவற்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ் ஆய்வுக்காக பார்த்திபனது நாவல்கள், தொடர்கதைகள், சிறுகதைத் தொகுப்புகள் சஞ்சிகைகளில் வெளிவந்த சிறுகதைகள் மற்றும் பார்த்திபனுடனான தொலைபேசி நேர்காணல்கள் என்பன முதல்நிலைத் தரவுகளாகவும், பார்த்திபன் மற்றும் அவரது எழுத்துக்கள் பற்றி நூல்கள், சஞ்சிகைகள், இணையதளங்களில் வெளிவந்த கட்டுரைகள் இரண்டாம் நிலைத்தரவுகளாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளன. எனவே, பார்த்திபனது புனைகதைகளில் பெண்களின் இருப்பு எத்தகையது என்பதை வெளிக்கொண்டு வருதல் என்ற அடிப்படையில் இவ் ஆய்வானது முக்கியத்துவம் பெற்றுள்ளது.

***திறவுச்சொற்கள்:*** *சீதனம், பார்த்திபன், பாலியல் சுரண்டல், புகலிட எழுத்தாளர்கள், புகலிடப் புனைகதைகள்*

# ஆரையூர் மூ.அருளம்பலத்தின் இலக்கிய ஆக்கங்கள் - ஓர் ஆய்வு

Ms. Ulagagesparam Digatharani
Department of Tamil Studies,
Faculty of Arts & Culture,
Eastern University, Sri Lanka.
*digaulages98@gmail.com*

**ஆய்வுச் சுருக்கம்:**

"ஆரையூர் மூ. அருளம்பலத்தின் இலக்கிய ஆக்கங்கள் - ஓர் ஆய்வு" எனும் தலைப்பில் மேற்கொள்ளப்படும் இவ் ஆய்வானது கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஆரையூர் மூ. அருளம்பலம் என்பவரின் படைப்பிலக்கியங்கள் மற்றும் அவரின் எழுத்துக்கள் அனைத்தையும் ஆய்விற்குரிய பொருளாக எடுத்துக்கொண்டுள்ளது. ஆரையூர் மூ. அருளம்பலத்தின் எழுத்துக்கள் கற்றோருக்கு மட்டுமன்றி, சாதாரண பாமர மக்களும் இலகுவில் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் அமைகின்றது. இவர் தனது படைப்புகளை பாடல்கள், கட்டுரைகள், சிறுகதைகள், கவிதைகள், வில்லுப்பாட்டுக்கள், நாட்டுக் கூத்துக்கள், நாடகங்கள் எனப் பல்வேறு வடிவங்களில் வெளியீடு செய்து ஒரு பல்துறைசார் கலைஞனாக இற்றைவரைக்கும் பரிணமித்துக் கொண்டிருக்கிறார். தமிழ் மொழியின் தனித்துவமும், எளிமையான நடையும், சம்பவங்களைக் கோர்த்து சுவாரஸ்யமாகக் கதை சொல்லும் பாணியும் தற்காலத்தைய கதை சொல்லியல் முறையிலிருந்து இருந்து அவரை தனித்துவமாகக் காட்டுகின்றன. இவரின் கவிதைகள், சிறுகதைகள், கட்டுரைகள் உள்ளிட்ட ஆக்க இலக்கியப் படைப்புகள் இலங்கையின் தமிழ்ப் பத்திரிகைகள், சஞ்சிகைகள் ஆகியவற்றில் இடம் பிடித்துள்ளன. இதேவேளையில் இவருடைய வில்லுப்பாட்டுக்களும் நாடகங்களும் திறந்த போட்டிப் பிரிவுகளில் மாகாண மட்டம், தேசிய மட்டம் வரை சென்று வெற்றிச் சாதனை புரிந்திருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும். பன்முக ஆற்றல் உடைய ஆக்க இலக்கியப் படைப்பாளராக, கலைஞராகத் திகழும் இவர், கல்வி மற்றும் கலைசார் அனுபவங்களை தன்னகத்தே கொண்டவர். அத்துடன், தனக்கே உரித்தான புலமை மரபைக் கொண்டு தமிழ்ச் சமூகத்தின் பல தளங்களிலும் தீவிரமாக செயற்பட்டவர். சுய தேடல், சுய கற்றல் மற்றும் ஆய்வுசார் புத்தாக்க சிந்தனையுடையவராகவும், புத்துணர்ச்சியாளராகவும் செயற்பட்டு வருகின்றார். இவ்வாறு கலைத்துறையில் தன்னலம் கருதாது பணியாற்றி வரும் இவரது ஆக்கங்களை ஒட்டுமொத்தமாக ஆய்வுக்கு உட்படுத்த வேண்டியது தமிழ் ஆய்வுலகில் அவசியமாகின்றது. ஏனெனில், இதுவரை காலமும் இவருடைய படைப்புக்கள் அனைத்தையும் முழுமையாக ஆய்வுக்குட்படுத்தவில்லை என்பதே இதற்குரிய காரணமாகும்.

***திறவுச்சொற்கள்:*** *ஆக்கவிலக்கியம், ஆரையம்பதி, ஆரையூர் மூ. அருளம்பலம், கிழக்கிலங்கை தமிழிலக்கியம், புத்தாக்கச் சிந்தனை*

# 2000 ஆம் ஆண்டுக்குப் பின்னரான ஐ.சாந்தனின் சிறுகதைகள் - ஓர் ஆய்வு

Ms. Hussain Bawa Nasrin Banu
Department of Tamil Studies,
Faculty of Arts & Culture,
Eastern University, Sri Lanka.
*hbnasrinbanu@gmail.com*

Mrs. Ruby Valentina Francis
Department of Tamil Studies,
Faculty of Arts & Culture,
Eastern University, Sri Lanka.
*jude_ruby@yahoo.com*

**ஆய்வுச் சுருக்கம்:**

ஐ.சாந்தன் ஈழத்து சிறுகதை ஆசிரியர்களில் முக்கியமான எழுத்தாளர் ஆவார். அந்தவகையில் "2000ஆம் ஆண்டுக்கு பின்னரான ஐ.சாந்தனின் சிறுகதைகள் - ஓர் ஆய்வு" எனும் தலைப்பில் அமைந்த இவ் ஆய்வானது ஐ.சாந்தனது சிறுகதைகளை உள்ளடக்கரீதியிலும் சிறுகதைகளில் கையாளப்பட்டுள்ள உத்தி முறைகளை அடிப்படையாகக் கொண்டும் விரிவாக ஆராய்கின்றது. ஈழத்துச் சிறுகதை வளர்ச்சியில் மக்களின் வாழ்வை யதார்த்தபூர்வமாக வெளிப்படுத்தும் சிறுகதைகளாக இவரின் சிறுகதைகள் எங்ஙனம் அமைகின்றன என்பது பற்றியும், ஈழத்துத் தமிழ்ச் சிறுகதை வளர்ச்சியில் ஐ.சாந்தனின் பங்களிப்பு மற்றும் அவரின் சிறுகதைகள் பெறும் முக்கியத்துவம், தனித்துவம் என்பது குறித்தும் மதிப்பிடுவதும் ஆய்வின் நோக்கமாகும். ஈழத்து இலக்கிய உலகில் இவரது இலக்கியங்கள் ஏற்படுத்திய தாக்கம் அவற்றின் கலைப்பெறுமதி போன்ற விடயங்கள் இதுவரை முழுமையாக வெளிக்கொணரப்படவில்லை. இவரின் எழுத்துக்களை பேசுபொருள் அடிப்படையில் ஆய்வு செய்ய வேண்டியது தேவைப்பாட்டினை முன்னிறுத்தி இவரின் ஆக்கங்கள் ஆய்வுக்குட்படுத்தப்படுகின்றன. ஐ.சாந்தனின் சிறுகதைகள் வெளிவந்த தொகுப்புக்களை முதல் நிலைத் தரவாகவும் அவர் தொடர்பாக சஞ்சிகைகள், பிற நூல்களில் வெளிவந்த கட்டுரைகள் இரண்டாம் நிலை தரவாகவும் கொண்டு இவ் ஆய்வு பகுப்பாய்வு அணுகுமுறை, விளக்க முறை ஆய்வு என்பவற்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஐ.சாந்தனின் சிறுகதைகளை விரிவாக ஆய்வுக்கு உட்படுத்தி அவரது சிறுகதைகளின் தனித்துவத்தையும் முக்கியத்துவத்தையும் வெளிக்கொணர்வதாக இந்த ஆய்வு அமைந்துள்ளது.

***திறவுச்சொற்கள்:*** *அந்நியமாதல், இடப்பெயர்வு, சுற்றிவளைப்பு, தொன்மம், வர்க்கவுணர்வு*

# வாகரைப் பிரதேசச் சிற்றிதழ்கள் - ஓர் ஆய்வு

Ms. Punitharasa Kisoniya
Department of Tamil Studies,
Faculty of Arts & Culture,
Eastern University, Sri Lanka.
*kisok2099@gmail.com*

Mrs. Ruby Valentina Francis
Department of Tamil Studies,
Faculty of Arts & Culture,
Eastern University, Sri Lanka.
*jude_ ruby@yahoo.com*

**ஆய்வுச் சுருக்கம்**

இலங்கையின் கிழக்கு மாகாணத்திலுள்ள மட்டக்களப்பு கல்குடா தேர்தல் தொகுதியின் கீழ் வாகரைப் பிரதேசம் அமையப்பெற்றுள்ளது. அந்தவகையில் வாகரைப் பிரதேசத்திலும் கலை இலக்கிய முயற்சிகள் இடம்பெற்றுள்ளன என்பதை பலரும் அறிந்திருக்கவில்லை. வாகரைப் பிரதேச இலக்கிய முயற்சிகளுள் பல சிற்றிதழ்களும் பல வெளிவந்த வண்ணமே உள்ளன. இச்சிற்றிதழ்கள் இலக்கிய வரலாற்றில் புகழ்மிக்க ஒரு தனித்துவமான இடத்தினைப் பெறாவிட்டாலும் அவை வாகரை மண்ணின் புகழ் பாடுவனவாகவும் வாகரைப் பிரதேசத்தின் கலை இலக்கியவாதிகளை வெளிக்கொணரும் களமாகவும் அமைகின்றன. அந்தவகையில் 2007 தொடக்கம் 2023 வரையான காலப்பகுதியில் வெளிவந்த 14 சிற்றிதழ்களே இவ் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. இச்சிற்றிதழ்களை கையெழுத்துப் பிரதிகள், அச்சுப் பிரதிகள் என வகைப்படுத்தி இவ் ஆய்வினை மேற்கொள்ள முடிகின்றது. இவற்றுள் கையெழுத்துப் பிரதி என்ற பிரிவினுள் வாகரைப் பிரதேசத்திலுள்ள பொது நூலகங்களான மாங்கேணி, வாகரை, கதிரவெளி, வம்மிவட்டவான் ஆகிய நூலகங்களில் தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு வருடாவருடம் மாணவர்களின் ஆக்கங்களைத் தாங்கி வெளிவருகின்ற சிற்றிதழ்கள் அமைகின்றன. அச்சுப்பிரதி என்ற வகையில் வாகரைப் பிரதேசப் பாடசாலைகளிலிருந்தும், அரச நிறுவனங்களிலிருந்தும் வெளிவருகின்ற சிற்றிதழ்கள் இந்த ஆய்வில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இச்சிற்றிதழ்கள் கவிதை, சிறுகதை, கட்டுரை போன்ற ஆக்கங்களைக் கொண்டு வெளிவந்துள்ளன. இவ்விதத்தில் கவிதை, சிறுகதை ஆகிய படைப்புக்களை அவற்றின் கருப்பொருளுக்கு ஏற்றவகையில் உள்ளடக்கரீதியாக வகைப்படுத்தியும் அப்படைப்புக்களில் கையாளப்பட்டுள்ள உத்திகளைக் கண்டறிந்தும் ஆராயப்பட்டுள்ளன. மற்றும் கட்டுரை உள்ளடக்கரீதியாக இவ்வாய்வில் எடுத்து நோக்கப்பட்டுள்ளது. இவ் ஆய்வானது விபரண முறை மற்றும் பகுப்பாய்வு முறைகளைப் பின்பற்றி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இச்சிற்றிதழ்கள் மூலம் வாகரைப் பிரதேச மக்களின் வாழ்வியல் முறைகள் எடுத்துக்காட்டும் விதம் பற்றி இவ் ஆய்வு வெளிப்படுத்தியுள்ளது.

***திறவுச்சொற்கள்:*** *கசாது, சிற்றிதழ்கள், தேசிய வாசிப்பு மாதம், புலிக்கூத்து, வாகரை*

# Classical Literature & Modern Literary Works

# ‘பூவரசு’ சஞ்சிகையின் இலக்கியப் பங்களிப்பு - ஒரு மதிப்பீட்டாய்வு

Ms. Hamsa Lebbe Rinosa
Department of Tamil Studies,
Faculty of Arts & Culture,
Eastern University, Sri Lanka.
hamsarinosa1@gmail.com

Dr. Nadira Mariyasandanam
Department of Tamil Studies,
Faculty of Arts & Culture,
Eastern University, Sri Lanka.
nadiraeusl@yahoo.co.in

**ஆய்வுச் சுருக்கம்:**

புலம்பெயர் ஆக்கங்களை வெளிக்கொண்டுவரும் சாதனங்களுள் சஞ்சிகைகளும் ஒன்றாகும். அவ்வகையில் ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சியில் புலம்பெயர் சஞ்சிகைகளின் இலக்கியப் பங்களிப்பு காத்திரமானதாகும். ‘பூவரசு சஞ்சிகையின் இலக்கியப் பங்களிப்பு - ஒரு மதிப்பீட்டாய்வு’ எனும் தலைப்பில் அமைந்த இவ் ஆய்வானது 1991 ஆம் ஆண்டு ஜேர்மனியிலிருந்து வெளிவந்த ‘பூவரசு’ எனும் சஞ்சிகையின் இலக்கியப் பங்களிப்பினை மதிப்பீடு செய்வதாக அமைந்ததுள்ளது. புலம்பெயர் சஞ்சிகைகளுள் ஒன்றான ‘பூவரசு’ சஞ்சிகையானது கலை, இலக்கிய இதழாக வெளிவரினும், இலக்கியம் சார்ந்த பல்வேறு விடயங்களையும் உள்ளடக்கமாகக் கொண்டு வெளிவந்துள்ளமை சிறப்பம்சமாகும். ஆய்வின் சுருக்கம் கருதி இச்சஞ்சிகையில் வெளிவந்த ஆக்கங்களில் கவிதைகள், சிறுகதைகள், கட்டுரைகள் பற்றி ஆராய்வதனூடாகப் ‘பூவரசு’ சஞ்சிகையின் இலக்கியப் பங்களிப்பினை மதிப்பீடு செய்வது இவ் ஆய்வின் நோக்கமாக அமைந்துள்ளது. ‘பூவரசு’ சஞ்சிகையின் இலக்கியப் பங்களிப்புப் பற்றிய முழுமையான ஆய்வுகள் எதுவும் இதுவரை வெளிவரவில்லை. 1991 தொடக்கம் 2004 ஆம் ஆண்டு வரை வெளிவந்த ‘பூவரசு’ சஞ்சிகையின் கிடைக்கப் பெற்ற முப்பத்தொன்பது இதழ்களும் இங்கு ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. இவ் ஆய்வானது விளக்கமுறை மற்றும் விமர்சன அணுகுமுறைகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ‘பூவரசு’ சஞ்சிகையில் வெளிவந்த கவிதைகள், சிறுகதைகள் ஆகியன உள்ளடக்கம் மற்றும் உணர்த்து முறையும் மொழிப் வெளிப்பாடும் என்ற அடிப்படையிலும், கட்டுரைகள் உள்ளடக்கரீதியாகவும் ஆய்வு செய்யப்பட்டு ‘பூவரசு’ சஞ்சிகையின் இலக்கியப் பங்களிப்புகள் மதிப்பிடப்பட்டுள்ளன. புலம்பெயர் சஞ்சிகை வரலாற்றில் ‘பூவரசு’ சஞ்சிகையின் இலக்கியப் பங்களிப்பு காத்திரமானது என்பதை வெளிப்படுத்துவதன் மூலம் இவ் ஆய்வானது முக்கியத்துவம் பெற்றுள்ளது.

***திறவுச்சொற்கள்*** *: உணர்த்துமுறை, புலம்பெயர் இலக்கியம், ‘பூவரசு’ சஞ்சிகை, மொழிவெளிப்பாடு, விமர்சன அணுகுமுறை*

# ஆற்றுப்படை இலக்கியங்களில் விருந்தோம்பல்

Ms. Shamshiga Jeevakaran
Department of Tamil Studies,
Faculty of Arts & Culture,
Eastern University, Sri Lanka.
*shamshamshi417@gmail.com*

**ஆய்வுச் சுருக்கம்:**

‘‘ஆற்றுப்படை இலக்கியங்களில் விருந்தோம்பல்’’ எனும் தலைப்பில் அமையும் இவ் ஆய்வுக் கட்டுரையானது சங்ககால இலக்கியங்களான எட்டுத்தொகை பத்துப்பாட்டு நூல்களில் பத்துப்பாட்டுக்குள் உள்ளடங்கும் ஆற்றுப்படை இலக்கியங்களிலே அக்கால மக்களது விருந்தோம்பல் பண்பானது எவ்வாறு எடுத்துரைக்கப்பட்டுள்ளது என்பதனை ஆராய்வதாக அமைந்துள்ளது. விருந்தோம்பல் என்பது தமிழரின் பண்பாட்டம்சங்களில் முதன்மையானதாகும். இத்தகைய விருந்தோம்பலின் சிறப்பினை தமிழிலே தோன்றிய பல இலக்கியங்கள் பேசுகின்றன. திருக்குறளில் விருந்தோம்பல் எனும் அதிகாரத்தை திருவள்ளுவர் படைத்துள்ளமையை காணமுடிகிறது. இவ்வாறு இலக்கியங்கள் பல விருந்தோம்பலை எடுத்துக்கூறிய போதிலும் பழந்தமிழ் இலக்கியங்கள் எனும் சிறப்புக்குரிய சங்ககால இலக்கியங்களிலே ஆற்றுப்படை இலக்கியங்கள் எவ்வாறு விருந்தோம்பலை சிறப்பித்துள்ளது என்பதை பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, கூத்தராற்றுப்படை (மலைபடுகடாம்) ஆகிய நான்கு ஆற்றுப்படை நூல்களை முதன்மை நிலைத் தரவாக கொண்டு இவ் ஆய்வுக் கட்டுரை எழுதப்பட்டுள்ளது. இவ் ஆய்வின் ஆய்வு முறையியலாக விவரண ஆய்வுமுறை மற்றும் பகுப்பாய்வு அணுகுமுறை என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆற்றுப்படை இலக்கியங்களுள் திருமுருகாற்றுப்படையும் ஒன்றாக காணப்பட்ட போதிலும் அந் நூல் முருகனிடம் ஆற்றுப்படுத்துவதாக அமைந்திருப்பதனால் அதில் விருந்தோம்பல் பற்றிய குறிப்புக்கள் காணப்படாததனால் அந்நூலினை இவ் ஆய்வுக் கட்டுரைக்குப் பயன்படுத்தவில்லை. ஆற்றுப்படை நூல்கள் தொடர்பாக பல்வேறு கோணங்களில் ஆய்வுகள் இடம்பெற்றிருந்தாலும், விருந்தோம்பல் குறித்த தனி ஆய்வுகள் இடம்பெறாமல் இருப்பதனை ஆய்வுப் பிரச்சினையாகக் கொண்டு ஆய்வு இடைவெளியை நிரப்புவதாக இவ் ஆய்வு அமைந்துள்ளது.

***திறவுச்சொற்கள்:*** *ஆற்றுப்படை, எட்டுத்தொகை பத்துப்பாட்டு, சங்ககாலம், பாணர், விருந்தோம்பல்*

# தெளிவத்தை ஜோசப்பின் சிறுகதைகளில் மலையக மக்களின் ஒடுக்கப்பட்ட வாழ்வியல் சித்திரிப்புகள் - ஓர் ஆய்வு

Ms. Balarathnam Saranya
Department Of Tamil Studies,
Faculty of Arts & Culture,
Eastern University, Sri Lanka.
balarathnamsaranya2@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்:**

தெளிவத்தை ஜோசப்பின் படைப்புகளில் சிறுகதைகளுக்கு தனியானதொரு இடமுண்டு. ‘தெளிவத்தை ஜோசப்பின் சிறுகதைகளில் மலையக மக்களின் ஒடுக்கப்பட்ட வாழ்வியல் சித்திரிப்புகள் - ஓர் ஆய்வு’ எனும் தலைப்பில் அமைந்த இவ் ஆய்வானது தெளிவத்தை ஜோசப்பின் சிறுகதைகளை அடிப்படையாகக் கொண்டு அவை பிரிதிபலிக்கும் ஒடுக்கப்பட்ட மலையக மக்களின் வாழ்வியலை ஆராய்ந்துள்ளது. ஈழத்து மலையக இலக்கிய வரலாற்றில் தெளிவத்தை ஜோசப்பும் குறிப்பிடத்தக்கவர். இவரது சிறுகதைகளை மையமாக வைத்து பல ஆய்வுகள் இடம்பெற்றுள்ளன. எனினும் அவை மலையக மக்களின் ஒடுக்கப்ட்ட வாழ்வியலை ஆழமாகச் சித்திரிக்கவில்லை. அந்த ஆய்வு இடைவெளியை மையப்படுத்தியதாக இவ் ஆய்வு அமைந்துள்ளது. இவ் ஆய்வானது விமர்சன மற்றும் விளக்கமுறை ஆய்வு அணுகுமுறை என்பவற்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ் ஆய்விற்காக இவருடைய இரண்டு சிறுகதை தொகுதிகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. இவருடைய சிறுகதைகள் முதலாம் நிலைத்தரவுகளாகவும் இவருடைய சிறுகதைகள் பற்றிய ஆய்வுக் கட்டுரைகள், நூல்கள், சஞ்சிகைகள், இணையதளங்களில் பிற ஆய்வாளர்களால் எழுதப்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் என்பன இரண்டாம் நிலைத் தரவுகளாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளன. எனவே அவருடைய சிறுகதைகள் வெளிப்படுத்தும் மலையக மக்களின் ஒடுக்கப்பட்ட வாழ்வியலை ஆராய்தல் என்ற அடிப்படையில் இவ் ஆய்வானது முக்கியத்துவம் பெற்றுள்ளது.

***திறவுச்சொற்கள்:*** *ஒடுக்கப்பட்ட வாழ்வியல், தெளிவத்தை ஜோசப், மலையக இலக்கியம், மலையகச் சிறுகதைகள், விமர்சன ஆய்வு அணுகுமுறை*

# புலம்பெயர் எழுத்தாளர் விக்னா பாக்கியநாதனின் சிறுகதைகள் - ஓர் ஆய்வு

Ms. Indran Tharshana
Department of Tamil Studies,
Faculty of Arts & Culture,
Eastern University, Sri Lanka.
tharshanatharshana646@gmail.com

Dr. Nadira Mariyasandanam
Department of Tamil Studies,
Faculty of Arts & Culture,
Eastern University, Sri Lanka.
nadiraeusl@yahoo.co.in

**ஆய்வுச் சுருக்கம்:**

“புலம்பெயர் எழுத்தாளர் விக்னா பாக்கியநாதனின் சிறுகதைகள்- ஓர் ஆய்வு” எனும் தலைப்பில் அமைந்த இவ் ஆய்வானது ஈழத்துப் புலம்பெயர் எழுத்தாளர்களுள் முக்கியமானவராகக் கருதப்படும் விக்னா பாக்கியநாதனின் சிறுகதைத் தொகுப்புகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டதாகும். 1980 களில் ஈழத்தில் இனமுரண்பாட்டினால் ஏற்பட்ட உள்நாட்டு யுத்தம் காரணமாக மக்கள் வேற்றுநாடுகளுக்குப் புலம்பெயர்ந்து சென்றனர். அவர்களுள் கணிசமானோர் தாங்கள் அனுபவித்த துன்பங்களையும், வாழ்வியல் அனுபவங்களையும் தமது எழுத்துக்களில் வெளிப்படுத்தியுள்ளனர். இவ் எழுத்தாளர் வரிசையில் குறிப்பிடத்தக்கவர் விக்னா பாக்கியநாதன் ஆவார். இவர் ஈழத்துப் புலம்பெயர் இலக்கிய வளர்ச்சிக்குப் பெரும் பங்களிப்பினை ஆற்றியுள்ளார். இவ் ஆய்வானது அவரது சிறுகதைத் தொகுப்புக்களான ‘உறவுக்குப் போராட்டம்’, ‘இதயச்சிறை’ ஆகியவற்றில் உள்ள சிறுகதைகளை ஆராய்வதாக அமைந்துள்ளது. விக்னா பாக்கியநாதனுடைய சிறுகதைகள் ஈழத்துப் புலம்பெயர் இலக்கிய வளர்ச்சியில் இன்றியமையாத பங்களிப்பை வழங்கியதோடு சிறப்பான இடத்தையும் பெற்றுள்ளது என்ற அடிப்படையில் இவ் ஆய்வு அமைந்துள்ளது. இவரது சிறுகதைகள் புலம்பெயர் மக்களின் வாழ்வியல் அம்சங்களையும், புலம்பெயர் சூழலையும், அவர்கள் எதிர்கொண்ட அவலங்களையும், பெண்கள் சார்ந்த பிரச்சினைகளையும் பிரதிபலிப்பனவாக அமைந்துள்ளன. இவரது சிறுகதைகளின் உள்ளடக்கம் மற்றும் உத்தி முறைகள் என்பன ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளன. இவ் ஆய்வு பகுப்பாய்வு, விளக்கமுறை முறை மற்றும் மதிப்பீட்டு முறை போன்ற ஆய்வு அணுகுமுறைகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஈழத்துப் புலம்பெயர் இலக்கிய வளர்ச்சியில் விக்னா பாக்கியநாதனின் புலம்பெயர் சிறுகதைகள் பெறும் முக்கியத்துவத்தை வெளிப்படுத்தும் வகையில் இவ் ஆய்வானது அமைந்துள்ளது.

***திறவுச்சொற்கள்:*** *இனமுரண்பாடு, கலாசாரப் பிறழ்வு, பண்பாட்டு மோதுகை புலம்பெயர் சிறுகதைகள், நிறவாதம்,*

# சிறுபஞ்சமூலம் கூறும் வாழ்வியல் நெறிகள்

Mrs. Gnanasekaram Dilosini
T/M/Kiliveddy Maha Vidyalayam,
Muthur,
Trincomalee.
gnadilog22@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்:**

மானிடப் பிறவியைப் பெற்ற மக்கள் அனைவரும் இப்பூவுலகில் வாழ்வாங்கு வாழ்வதற்கு நல்ல நெறிமுறைகளைப் பின்பற்றுதல் வேண்டும். 'எப்படியும் வாழலாம்' என்பதை விட 'இப்படித்தான் வாழ வேண்டும்' என சில நெறிமுறைகளை வகுத்து அதன்படி வாழ வேண்டும். நிலையில்லாத இவ்வுலகில் நிலைபெற்று மடிந்தவர்கள் சிறந்த செயற்பாடுகளுடன் வாழ்ந்து மடிந்தவர்களாவர். மனித வாழ்க்கை உயர்ந்த குறிக்கோளைக் கொண்டிருக்க வேண்டும். அப்போதுதான் நீதிநெறியான சேவையைச் சமூகத்திற்குச் செய்ய முடியும். வாழ்வியல் நெறிகளைச் செம்மையாக வைத்துக் கொண்டு வாழ வேண்டும். சிறந்த நெறிகளைக் கடைப்பிடித்து வாழாதவிடத்து சமூகத்தில் பல பிரச்சினைகள் ஏற்படும். வாழ்வில் சீரிய நெறிகள் சீர்குலையுமாயின் தேசத்தில் பல்வேறு விதமான பாதக விளைவுகள் ஏற்படும். மனிதர்கள் ஒவ்வொருவரும் விழுமியப் பண்புகளுடன் கூடிய நீதி நெறிகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதை பல இலக்கியங்கள் எடுத்தியம்புகின்றன. சிறந்த வாழ்வியல் நெறிகள் பண்டைத் தமிழ் நூல்களிலும் கூறப்பட்டுள்ளன. அந்தவகையில் மனித வாழ்க்கைக்குத் தேவையான சீரிய வாழ்வியல் நெறிகள் சிறுபஞ்சமூலத்திலும் வலியுறுத்தப்பட்டுள்ளதை அவதானிக்கலாம்.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றாகக் காணப்படும் 'சிறுபஞ்சமூலம்' எக்காலத்திற்கும் ஏற்ற அறநெறியுடன் கூடிய, வாழ்வியல் நெறிக் கருத்துக்களை உள்ளடக்கியுள்ளது. ஒவ்வொரு பாடலிலும் நான்கு அடிகளில் ஐந்து கருத்துக்களை ஆழமாகக் கூறும் இந்நூலில் வாழ்வியல் நெறிச்சிந்தனைகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இந்நூலில் அறம் செய்தல், பிறரைப் பழி கூறுதல், பிறர்மனை நாடாமை, பக்கச்சார்பின்மை, பகிர்ந்து உண்ணுதல், நல்ல நூல்களின் படி ஒழுகுதல், நடுநிலைமை, தவறைப் பொறுத்தல், கொல்லாமை, களவு செய்யாமை, புலால் உண்ணாமை, தீய நட்பு கூடாது, கல்வி கற்றல், ஈகை, கொல்லாமை, பொய் சொல்லாமை, மாணவனின் கடமை, தவத்தின் இனிமை, தேசத் தொண்டு முதலான வாழ்வில் அனைவரும் கடைப்பிடிக்க வேண்டிய உயரிய நெறிகள் சிறந்த பிரஜைகளை உருவாக்கி, சிறப்பான தேசத்தைக் கட்டியெழுப்பும் வகையில் இடம்பெற்றுள்ளதை அவதானிக்கலாம். இத்தகைய தகவல்களை அடிப்படையாகக் கொண்டு இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

***திறவுச் சொற்கள் :*** *அறம், ஈகை, சிறுபஞ்சமூலம், பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள், விழுமியம்*

# Educational Ethics & Psychology

# சிரேஷ்ட இடைநிலைப்பிரிவு மாணவர்களிடம் காணப்படுகின்ற ஒழுக்கரீதியான பிரச்சினைகள் கற்றலில் ஏற்படுத்தும் தாக்கம்

Ms. Navareththinam Kethini
Department of Education and Childcare,
Faculty of Arts and Culture,
Eastern University, Sri Lanka.
kethu4174@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்:**

எமது நாட்டைப் பொறுத்தவரையில் கற்றல் செயற்பாடுகள் வினைத்திறனாக அமைவதற்கு மாணவர்களிடம் காணப்படுகின்ற ஒழுக்கரீதியான நடத்தைகள் பெரும் பங்காற்றுகின்றன. இத்தகைய நடத்தைகள் அனைத்து மாணவர்களிடமும் சிறப்பாகக் காணப்படுகின்றனவா என நோக்கினால் அவை சிறப்பாகக் காணப்படவில்லை என்றுதான் கூற வேண்டியுள்ளது. மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் சிறப்பாக அமைய வேண்டுமாயின், ஒழுக்கம் என்பது இன்றியமையாத ஒன்றாகும். ஆனால் இன்றைய காலகட்டங்களில் இடைவிலகல் முரண்பாடுகள், தகாத நட்பு, போதைப்பொருள் பாவனை, பாடசாலைக்கான தொடரான வரவு ஒழுங்கீனம் எனப் பல ஒழுக்க சீர்கேடுகள் மாணவர்களிடையே காணப்படுகின்றன. அந்தவகையில் ''சிரேஷ்ட இடைநிலைப்பிரிவு மாணவர்களிடம் காணப்படுகின்ற ஒழுக்கரீதியான பிரச்சினைகள் கற்றலில் ஏற்படுத்தும் தாக்கம்'' என்ற தலைப்பிலான இவ் ஆய்வானது மண்முனை மேற்கு கல்வி வலயத்திலுள்ள ஏறாவூர் பற்று மேற்கு கல்விக்கோட்டத்திலுள்ள சிரேஷ்ட இடைநிலைப்பிரிவு பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஏறாவூர் பற்று மேற்கு கல்விக்கோட்டத்தில் க.பொ.த சாதாரண தரத்தைக் கொண்டுள்ள ஐந்து பாடசாலைகளும் ஆய்வாளரால் ஆய்விற்கு உட்படுத்தப்பட்டுள்ளது. அதில் 1C பாடசாலைகளின் அதிபர்கள் 02, வகை 2 பாடசாலைகளின் அதிபர்கள் 03, ஆசிரியர்கள் மற்றும் ஒழுக்காற்றுக்குழு ஆசிரியர்கள் 52, மாணவர்கள் 120, பெற்றோர்கள் 40, ஆகியோரை நோக்க, இலகு எழுமாற்று மாதிரி, வசதி மாதிரியினூடாகத் தெரிவு செய்து வினாக்கொத்து, நேர்காணல், ஆவணம் மூலமாக அவர்களிடமிருந்து அளவு மற்றும் பண்புரீதியானதுமான தரவுகள் பெறப்பட்டுள்ளன. ஆய்வு முடிவுகளின் பிரகாரம் மாணவர்களிடம் காணப்படுகின்ற முரண்படுதல், பணிவின்மை, போதைப்பொருள் பாவனை, வரவு ஒழுங்கீனம் எனப் பல ஒழுக்கரீதியான பிரச்சினைகள் காணப்படுகின்றன. இப்பிரச்சினைகளினால் கற்றலில் ஆர்வமின்மை, இடைவிலகல், பெறுபேற்று வீழ்ச்சி என்பன அவர்களின் கற்றல் செயற்பாடுகளின் எதிர்விளைவுகளாக அமைகின்றன. இந்நிலையினை மாற்றியமைக்க வேண்டுமாயின், பெற்றோர் பிள்ளைகள் மீதும் அவர்களின் நடத்தைகள், கற்றல் செயற்பாடுகள் மீதும் அதிக கவனம் செலுத்த வேண்டும். இவை தொடர்பாகப் பெற்றோர்களுக்கும், மாணவர்கள் சார்ந்த அனைவருக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்தி மாணவர்களிடையே காணப்படுகின்ற ஒழுக்கரீதியான பிரச்சினைகளை இல்லாதொழித்து அவர்களைக் கற்றலில் உயர்வடையச் செய்யும் நோக்கில் விதப்புரைகளும் முன்வைக்கப்பட்டு இவ் ஆய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

***திறவுச்சொற்கள்:*** *இடைவிலகல், ஒழுக்கம், கற்றல், சிரேஷ்ட இடைநிலைப்பிரிவு மாணவர்கள்,*

# மெல்லக் கற்கும் மாணவர்களின் கற்றலில் ஆசிரியரின் வகிபாகம்

Mr. Nadarasa Koventhan
BT/ BW/ Navatkadu Namagal Vidyalayam,
Batticaloa.
koventhannadarasa@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்:**

''மெல்லக் கற்கும் மாணவர்களின் வகுப்பறைக் கற்றலில் ஆசிரியரின் வகிபாகம்'' எனும் தலைப்பில் மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட இவ் அளவைநிலை ஆய்வானது, மெல்லக் கற்கும் மாணவர்கள், வகுப்பறைக் கற்றலில் எதிர்நோக்கும் பிரச்சினைகளை இனங்காண்பதுடன், அவர்களது கற்றலில் ஆசிரியரின் வகிபங்கினை ஆராய்தல் எனும் நோக்கத்தின் அடிப்படையிலும் இடம்பெற்றுள்ளது. இவ் ஆய்வினை மேற்கொள்வதற்காக மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயம் தெரிவுசெய்யப்பட்டது. இக்கல்வி வலயத்தில் மெல்லக் கற்கும் மாணவர்களைக் கொண்ட 10 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டன. இந்த 10 பாடசாலைகளிலுமிருந்து 10 அதிபர்கள் நோக்க மாதிரியின் அடிப்படையிலும், மெல்லக் கற்கும் மாணவர்களுக்கு கற்பிக்கும் 20 ஆசிரியர்களும், மெல்லக் கற்கும் 50 மாணவர்களும், இம்மாணவர்களின் பெற்றோர்கள் 50 பேரும் எளிய எழுமாற்று மாதிரியின் அடிப்படையிலும் குடித்தொகையில் இருந்து தெரிவு செய்யப்பட்டு இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு ஆய்வு நோக்கத்தின் அடிப்படையில் பண்புரீதியானதும், அளவுரீதியாகவுமான கலப்பு முறையில் பகுப்பாய்வு செய்யப்பட்டு, தரவுகள் MS EXCEL ஊடாக உருக்கள், அட்டவணைகளாக குறித்துக்காட்டப்பட்டுள்ளன. ஆய்வு முடிவின் பிரகாரம் இம்மாணவர்களின் கற்றலில் ஆசிரியரின் ஈடுபாடு குறைவதற்கான காரணங்களாக ஆசிரியர்களுக்கு இம்மாணவர்கள் பற்றிய தெளிவின்மை, பெற்றோர் ஆசிரியர்களுடன் பிள்ளையின் கற்றல் தொடர்பில் கலந்துரையாடலின்மை எதிரான மனப்பாங்கு, ஆசிரியர்களின் பொருத்தமற்ற கற்பித்தல் முறை ஆகிய காரணங்கள் இம்மாணவர்களின் கற்றலில் ஆசிரியரின் வகிபாகத்தை குறைக்கின்றது. இதனால் ஆசிரியரின் பங்களிப்பும் குறைகின்றது. இவற்றிற்கான தீர்வுகளாக அதிபர் ஆசிரியர்களுக்கு தகுந்த ஆலோசனைகள் வழங்குதல், பாடசாலையில் இம் மாணவர்கள் தொடர்பாக நடைபெறும் கூட்டங்களில் பெற்றோரைப் பங்குகொள்ளச் செய்தல், ஆசிரியர்கள் மாணவர்களின் வீட்டிற்குச் சென்று பெற்றோருடன் மாணவர்களின் கற்றல் தொடர்பில் கலந்துரையாடுதல், ஆசிரியர்கள் இம் இம்மாணவர்கள் தொடர்பான செயல்நிலை ஆய்வுகளில் ஈடுபடல் போன்ற செயற்பாடுகள் விதந்துரைக்கப்பட்டுள்ளன.

***திறவுச்சொற்கள்:*** *அளவைநிலை ஆய்வு, ஆசிரியர் வகிபங்கு, பெற்றோர், மெல்லக் கற்போர், வகுப்பறைக் கற்றல்,*

# இடைநிலைப் பிரிவு மாணவர்களின் மொழித்திறன் விருத்தியில் மீளவலியுறுத்தலின் செல்வாக்கு

Ms. Pulenthiran Hindujah
AK/ Al- Aqsa Vidyalayam,
Pothuvil.
phindujah1994@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்:**

மாணவர்களின் மொழித்திறன் விருத்திக்கும், மீளவலியுறுத்தலுக்கும் இடையிலான தொடர்பினை எடுத்துக்காட்டுவதற்காக ''இடைநிலைப் பிரிவு மாணவர்களின் மொழித்திறன் விருத்தியில் மீளவலியுறுத்தலின் செல்வாக்கு'' எனும் தலைப்பில் அளவைநிலை ஆய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தவகையில் மாணவர்களுடைய மொழித்திறன் விருத்திக்கும் மீளவலியுறுத்தலுக்கும் இடையிலுள்ள தொடர்புகளைக் கண்டறிதல், மீளவலியுறுத்தும் செயற்பாட்டினைப் பொருத்தமான முறையில் பிரயோகிப்பதில் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் சவால்களை இனங்காணல், மொழித்திறன் விருத்திக் குறைபாடுடைய மாணவர்களுக்கு மீளவலியுறுத்தல் நுட்பங்களை உரிய காலப்பகுதியில் பிரயோகிக்காமல் விடுவதால் ஏற்படும் விளைவுகளை ஆராய்தல் மற்றும் மீளவலியுறுத்தலினைப் பின்பற்றி மொழித்திறன் விருத்திக் குறைபாடுடைய மாணவர்களை மீட்டெடுப்பதற்கான ஆலோசனைகளை முன்வைத்தல் ஆகிய ஆய்வு நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ் ஆய்வானது ஆலையடிவேம்புக் கோட்டத்திற்குட்பட்ட மொழித்திறன் விருத்திக் குறைபாடுடைய மாணவர்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அந்தவகையில் நோக்க மாதிரியின் அடிப்படையில் 1AB பாடசாலை இரண்டும் 1C பாடசாலை மூன்றும் வகை II பாடசாலை ஐந்தும் என மொத்தமாக 10 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. அதிபர்கள் (10), தமிழ்ப் பாட ஆசிரியர்கள் (17) தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன், மொழித்திறன் விருத்திக் குறைபாடுடைய மாணவர்கள் ஆண், பெண் எனும் அடிப்படையிலும் (3:1 எனும் விகித அடிப்படையில் மொத்தமாக 79 பேர்) பெற்றோர்கள் மொழித்திறன் விருத்திக் குறைபாடுடைய ஆண் மற்றும் பெண் மாணவர்களின் பெற்றோர்கள் எனும் அடிப்படையிலும் படையாக்கப்பட்ட மற்றும் இலகு எழுமாற்று மாதிரியின் மூலம் (3:1 எனும் விகித அடிப்படையில் மொத்தமாக 79 பேர்) தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அத்துடன், தமிழ்ப்பாட உதவிக் கல்விப் பணிப்பாளரையும் உள்வாங்கி மாதிரித் தெரிவானது எடுக்கப்பட்டுள்ளது. இம்மாதிரிகளிடமிருந்து வினாக்கொத்து, நேர்காணல் மற்றும் அவதானம் ஆகிய ஆய்வுக்கருவிகளின் மூலம் பெறப்பட்ட தரவுகள் அளவு மற்றும் பண்புரீதியாகவும் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. இவ் ஆய்வில் நேர்மீளவலியுறுத்தல் நுட்பங்களைப் பிரயோகிப்பதன் வாயிலாக மாணவர்களின மொழித்திறன் செயற்பாட்டில் ஆர்வம் அதிகரிக்கும் என 58.82% வீதமான ஆசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர். மேலும், மாணவர்களின் பேச்சுத்திறனை விருத்தி செய்வதற்காக அவர்களின் கூச்ச சுபாவத்தைத் தணிக்க அவர்களுக்கு அங்கீகாரம் வழங்கல் வேண்டும் என 23.53 வீதமான ஆசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர். இவ்வாறு மேற்கூறப்பட்டுள்ள முடிவுகள் இவ் ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளதுடன், முடிவுகளுக்கேற்ப விதப்புரைகளும் வழங்கப்பட்டுள்ளன.

***திறவுச்சொற்கள்:*** *எழுத்துத்திறன், கிரகித்தல் திறன், பேச்சுத்திறன், மீளவலியுறுத்தல், வாசிப்புத்திறன்*

# பாடசாலையில் கல்வி கற்கும் பெண் மாணவிகளுக்கு ஏற்படும் மன அழுத்தமும் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளும் - ஓர் ஆய்வு

**(பட்டிருப்புக் கல்வி வலயத்தில் க.பொ. த. சாதாரணதரம் கற்கும் மாணவிகளை அடிப்படையாகக் கொண்டது)**

Mrs. Pranaha Thineswaran
Department of Philosophy,
University of Jaffna,
Jaffna.
*npranaha@gmail.com*

Dr. Kanthasami Kajavinthan
Department of Philosophy,
University of Jaffna,
Jaffna.
*kajavinthan@gmail.com*

**ஆய்வுச் சுருக்கம்:**

ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும் பாடசாலை நாட்கள் என்பது மிக முக்கியமானதொரு காலகட்டமாகவும் எமது வாழ்கைக்கான அடிப்படைகளை வழங்குகின்றனவாகவும் உள்ளன. ஆனால், இந்நாட்களை எத்தனைபேர் மிகவும் மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியமாகவும் அனுபவித்தார்கள் என்பது வினாவாகும். அதிலும் குறிப்பாக நாம் பதின்மூன்று வயது முதல் பத்தொன்பது வயது வரையுள்ள பருவங்களைக் கடக்கின்ற வேளையில் எமக்கு ஏற்படுகின்ற குழப்பங்கள் எமது கற்றலில் தாக்கத்தை ஏற்படுத்தி விடுகின்றன. கட்டிளமைப் பருவத்துப் பிள்ளைகளின் உடலிலும் மனதிலும் இனம்புரியாத மாற்றங்கள் தோன்றுகையில் எதுவும் தெளிவாகப் புரியாமல் தடுமாற்றத்திற்கு உள்ளாகித் தத்தளித்துக் கொண்டிருப்பார்கள். இவர்களின் தத்தளிப்புகளுக்கும் குழப்பங்களுக்கும் விடை காணப்படாதவிடத்து இவர்கள் உளரீதியாக பாதிக்கப்படுகின்றார்கள். இதனால்தான் இப்பருவப் பிள்ளைகள் அதிகம் தற்கொலை செய்ய முயற்சிக்கின்றார்கள். கடந்த 2008 ஆம் ஆண்டிலிருந்து மட்டக்களப்புப் பிரதேசமானது அதிகம் இளவயது தற்கொலை மரணங்களைச் சந்தித்திருக்கின்றது. இதன் பின்புலத்தினை ஆராயும் போது இவர்களுக்கு ஏற்பட்ட அதீத மன அழுத்தத்தங்களும் ஒரு காரணமாக அமைகின்றது. மனிதன் அல்லது விலங்கு அல்லது உயிரினத்தில் உண்மையாகவோ அல்லது கற்பனையாகவோ உடல்ரீதியாக அல்லது மனரீதியாக ஏற்படும் தாக்கங்களுக்கு சரியான முறையில் எதிர்ச்செயலை செய்ய முடியாத நிலை தோன்றுவதன் மூலமான தொடர்விளைவு அல்லது பின்விளைவு மன அழுத்தம் எனப்படும். இந்தவகையில் பாடசாலை மாணவர்களிடம் காணப்படும் மன அழுத்தமானது கல்வியில் மட்டுமல்லாது உடல் உளரீதியாகவும் அவர்களைப் பாதித்து அவர்களுடைய செயற்திறனையும் சிந்திக்கும் திறனையும் குறைப்பது மட்டுமல்லாது, செயற்றிறனில் ஆர்வமின்மையையும் அவர்களுக்கு ஏற்படுத்துகின்றது. மன அழுத்தத்தினால் ஆண்பிள்ளைகளைவிடப் பெண்பிள்ளைகளே அதிகம் துன்பப்படுகின்றனர். ஏனெனில், பூப்படைவதால் ஏற்படும் உடலியல் மாற்றங்கள், அவர்களுக்குச் சிறிது அதிர்ச்சியையும், சந்தேகத்தையும், பயத்தையும் ஏற்படுத்துகின்றன. மேலும் இப்பருவத்தில் இரண்டாம்நிலைப் பால்நிலைப் பண்புகளின் வளர்ச்சி குறிப்பிடத்தக்கதாகும். இதன் விளைவால் ஏற்படுகின்ற மனவெழுச்சிப் பிரச்சினைகள், பாலியல் துஷ்பிரயோகங்கள், என பல மாற்றங்களும் அதிகம் பெண் பிள்ளைகளுக்கு அழுத்தங்களை கொடுக்கின்றன. மேலும் இவர்கள் தங்களது உணர்வுகளுக்கு மாறாக எது நடந்தாலும் கோபமும், சலிப்பும் வெறுப்பும் விரக்தியும் அடைகின்றனர். இதன் விளைவாக ஏற்படுகின்ற மன அழுத்தம், மனச்சோர்வு, பதற்றக் கோளாறுகள் போன்ற உளப்பாதிப்புகள் தற்கொலை எண்ணத்தை தூண்டுகின்றன. எனவே, இந்நிலையில் இப்பாடசாலை மாணவர்களை இவ் மன அழுத்ததின் தீவிரத்தன்மைக்குச் செல்லாமல் அவர்களின் மன அழுத்ததிற்கான காரணங்களை இனங்கண்டு அவர்களை மீட்டு கல்வியினைத் தொடர்வதற்கு உதவவேண்டியது எமது பொறுப்பாகும். அந்தவகையில் இவ் ஆய்வானது பாடசாலை மாணவிகள் மன அழுத்ததிற்கு உட்படுகின்றார்கள் எனவும் இந்த மன அழுத்தத்திற்கு உள சமூக பொருளாதார காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன எனும் கருதுகோளினை முன்வைத்து மேற்கொள்ளப்பட்டதுடன், இவ் ஆய்விற்காக பத்து பின்தங்கிய கஷ்டப் பிரதேசப் பாடசாலைகளிலிருந்து எழுமாற்றாக சாதாரணதரம் கற்கும் 100 பெண் மாணவிகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். இவ் ஆய்வு ஒரு பண்பியல் சார்ந்த விபரண ஆய்வாகவும் அமைகின்றது. தொடர்ந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகள் அனைத்தும் Statistical Packages for Social Science package (SPSS) version 21 பகுப்பாய்வு செய்யப்பட்டு முடிவுகள் பெறப்பட்டுள்ளன.

***திறவுச்சொற்கள்:*** *கட்டிளமைப் பருவம், செயல்திறன், தற்கொலை, மன அழுத்தம், மனவெழுச்சி*

# இருமொழிக் கல்வி முறையில் விஞ்ஞான பாடக் கற்றலில் மாணவர்களின் ஈடுபாடு

Mr. R. Senthamil Selvan
Department of Education & Child Care,
Faculty of Arts & Culture,
Eastern University, Sri Lanka.
thamil.dines@gmail.com

Mrs.Thakshaayini Rajandran
Department of Education & Child Care,
Faculty of Arts & Culture,
Eastern University, Sri Lanka.
thakshaayinir@esn.ac.lk

**ஆய்வுச் சுருக்கம்:**

இருமொழிக் கல்வி முறையானது பரவலாகப் பாடசாலைகளில் கற்பிக்கப்படுகின்றது. இதனைத் தெரிவுசெய்து கற்கின்ற மாணவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றது. எனினும், இருமொழிக் கல்வியை மேற்கொள்ளும் போது ஆசிரியர்களும் மாணவர்களும் பல சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது. இவ் ஆய்வின் முக்கியமான நோக்கம் இருமொழிக் கல்வியூடாக விஞ்ஞானப் பாடத்தைக் கற்கின்ற கனிஷ்ட இடைநிலை மாணவர்களின் கற்றலின் ஈடுபாட்டுத் தன்மையைக் கண்டறிதல் என்பதாக உள்ளது. இதற்காக மண்முனை வடக்குக் கோட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட இருமொழியில் விஞ்ஞானக் கல்வியை வழங்கக்கூடிய 6 பாடசாலைகளிலுள்ள கனிஷ்ட இடைநிலைப்பிரிவு மாணவர்களில் ஆண், பெண் என படையாக்கப்பட்டு இலகு எழுமாற்று மாதிரியைக் கொண்டு 2:1 என்ற அடிப்படையில் 65 மாணவர்களும், நோக்க மாதிரியின் அடிப்படையில் 6 விஞ்ஞானப் பாட ஆசிரியர்களும், மற்றும் 6 அதிபர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன், ஆய்வு வினாக்கள் தயாரிக்கப்பட்டு வினாக்கொத்து, நேரடி அவதானம் மற்றும் நேர்காணல் மூலமாக தரவுகள் சேகரிக்கப்பட்டன. அத்தரவுகள் யாவும் சிறப்பு நோக்கங்களுக்கு அமைவாக மாதிரிகளிடம் இருந்து பெறப்பட்ட அளவு மற்றும் பண்பு ரீதியான தரவுகளை Microsoft Excel மூலம் பகுப்பாய்வுக்குட்படுத்தப்பட்டு வியாக்கியானம், கலந்துரையாடல் போன்ற செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு இறுதியாக முடிவுகளும் கண்டறியப்பட்டுள்ளன. முடிவுகளிலிருந்து நியமன ரீதியாக இருமொழி மூலமாக விஞ்ஞானத்தைக் கற்பிக்கக்கூடிய ஆசிரியர்கள் குறைவாக உள்ளனர். அனுபவபூர்வமாக நவீன சாதனங்களைக் கொண்டு கற்பிக்கின்ற விதமும் குறைவாக இருப்பதுடன், இருமொழி மாணவர்களுக்கான வள ஒதுக்கீட்டிலும் சமத்துவமின்மையும் காணப்படுகின்றது. முகாமைத்துவ மட்டத்திலான ஒத்துழைப்பும் இருமொழிக் கல்விக்கு குறைவாகவே வழங்கப்படுகின்ற தன்மையும் கண்டறியப்பட்டுள்ளது. இவ்விடயங்கள் இருமொழியில் விஞ்ஞானப் பாடத்தைக் கற்கும் மாணவனின் பாட ஈடுபாட்டிலும் தாக்கமேற்படுத்துகின்றது. இதனடிப்படையில் இச்சவால்களைக் குறைத்துக் கொள்ளக்கூடிய வகையில் விதப்புரைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

***திறவுச்சொற்கள்:*** *இருமொழிக் கல்வி, கற்றல் ஈடுபாடு, கனிஷ்ட இடைப்பிரிவு, மண்முனை வடக்கு கோட்டம், விஞ்ஞான பாடம்*

# Innovation and Education

# AN INVESTIGATION OF TRAINED SCHOOL TEACHERS' SELF-EFFICACY BELIEFS AND THEIR IMPACT ON THE TEACHING-LEARNING PROCESS

Mr. Krishnapillai Punniyamoorthy
Postgraduate Institute of Humanities and Social Sciences,
University of Peradeniya,
Peradeniya.
*krishpunni@gmail.com*

Prof. Fareed Mohamed Nawastheen
The Open University of Sri Lanka,
Nawala,
Nugegoda.
*fmnaw@ou.ac.lk*

**Abstract:**

Education is a key indicator of national development, and teachers are its driving force. Through learning, they shape future generations, preparing them to meet the challenges of tomorrow. Three-year diploma programs at Sri Lanka's National Colleges of Education equip aspiring teachers with the knowledge, skills, and values needed for success. By focusing on content knowledge, pedagogical expertise, and strong professional ethics, these programs aim to cultivate self-efficacious teachers who excel in teaching, classroom management, and student interactions. This research paper explores teacher self-efficacy beliefs among trained teachers in the Eastern Province of Sri Lanka, focusing on their utilization of instructional techniques. The study, based on Albert Bandura's Social Cognitive Theory, examines how observational learning, cognitive processes, and behavioral standards influence teachers' confidence in their teaching abilities. A sample of 230 teachers (114 males and 116 females) from National Colleges of Education (NCOEs) participated in the survey, using the Teacher Sense of Efficacy Scale (TSES). Findings reveal a moderate to high level of self-efficacy in utilizing teaching techniques (mean = 5.84, SD = 1.04), with male teachers showing slightly higher self-efficacy than females. Subject taught and training institution type significantly influences self-efficacy, while school type does not. Recommendations include tailored training programs, mentorship, professional development, and promoting positive role models to enhance self-efficacy beliefs, particularly among female teachers, thus improving teaching effectiveness and student outcomes.

***Keywords***: *Classroom Management, Instructional strategies, Self-efficacy beliefs, student engagement, Teacher*

# வகுப்பறைக் கற்றல்-கற்பித்தல் முறைகளில் புதுமைகளைத் துரிதப்படுத்துவதில் ஆசிரியரின் வகிபங்கு

Mr. Kanthasamy Abilash
BT/KK/Akuranai Bharathy Vidyalayam,
Batticaloa.
abiabilash716@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்:**

புதிய சகாப்தத்தின் விரைவான தொழிநுட்ப வளர்ச்சியானது இன்றைய நவீன வகுப்பறைக் கற்றல்-கற்பித்தல் முறைகளில் எதிர்பார்க்கும் இலக்குகள் மற்றும் நோக்கங்களை அடைவதிலும் ஒட்டுமொத்தக் கல்விமுறையை வளப்படுத்துவதிலும் ஆசிரியரின் வகிபங்கு மகத்தானது. பல்வேறு புதுமையான உத்திகளைச் செயற்படுத்துவதன் மூலம் கற்பித்தல்-கற்றல் செயன்முறைகளில் புதிய மாற்றங்களைகளை கொண்டு வர முடியும். கற்பித்தல்-கற்றல் செயன்முறைகளில் நவீன, புதுமையான உத்திகள் நடைமுறைக்கு வரும்போது, கல்வியாளர்களும் மாணவர்களும் தங்கள் பணிகளையும், செயற்பாடுகளையும் சிறப்பாக மேற்கொள்ள முடியும். மறுபுறம், ஒட்டுமொத்தக் கல்வி முறையிலும் முன்னேற்றங்களையும் கொண்டு வர முடியும். பல்வேறு வகையான தொழில்நுட்பங்களின் பயன்பாடு என்பது கற்பித்தல்-கற்றல் செயன்முறைகளின் புதுமைகளில் மிக முக்கியமான வடிவமாக கருதப்படுகின்றது. 'இன்றைய வகுப்பறைக் கற்றல்-கற்பித்தல் முறைகளில் புதுமைகளை துரிதப்படுத்துவதில் ஆசிரியரின் வகிபங்கு' எனும் தலைப்பில் அமைந்த இவ் ஆய்வானது, மட்டக்களப்பு மாவட்டத்தில், கல்குடா வலயத்தின் கோறளைப்பற்று வலயப் பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டது. இவ் ஆய்வானது அளவைநிலை ஆய்வாக அமையும் வகையில் தரமான அணுகுமுறைக்கு உட்படுத்தப்பட்டது. இவ்வலயத்தின் 05 பாடசாலைகள் நோக்க மாதிரி முறையிலும், எழுமாற்று மாதிரி அடிப்படையில் 150 சிரேஷ்ட இடைநிலை ஆசிரியர்களும், 50 மாணவர்களும், 50 பெற்றோர்களும் தெரிவு செய்யப்பட்டனர். இவர்களிடமிருந்து தகவல்களைப் பெறும் வகையில் ஆய்விற்கான தரவுசேகரித்தல் கருவிகளாக வினாக்கொத்து, நேர்காணல், ஆவணங்கள் ஆகியன பயன்படுத்தப்பட்டன. தெரிவு செய்யப்பட்ட அனைத்துப் பாடசாலைகளும் அவதானிப்புக்கு உட்படுத்தப்பட்டன. இவற்றின் மூலமாகப் பெறப்பட்ட தரவுகள் அளவுசார் மற்றும் பண்புசார் பொருத்தமான மென்பொருள் முறைகளினூடாக வகைப்படுத்தல், பகுப்பாய்வு, வியாக்கியானம், கலந்துரையாடல் போன்ற செயற்பாடுகளுக்குள் உள்வாங்கப்பட்டன. பாடசாலைகளில் புதுமையான உத்திகள், அணுகுமுறைகளின் அடிப்படையில் தங்கள் திறன்களையும் மேம்படுத்திக் கொள்ள வேண்டும்.

***திறவுச்சொற்கள்:*** *கல்வி, கற்றல்-கற்பித்தல் செயன்முறைகள், சிரேஷ்ட இடைநிலை, புதுமைகள், நவீன வகுப்பறை*

# பாடசாலை நூலகங்களின் செயற்பாடுகள் சிரேஷ்ட இடைநிலை மாணவர்களின் சுயகற்றலில் ஏற்படுத்தும் தாக்கம்

**(மண்முனை தென் மேற்கு கோட்ட பாடசாலைகளில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் சிரேஷ்ட இடைநிலை மாணவர்களை அடிப்படையாகக் கொண்ட ஓர் அளவை நிலை ஆய்வு)**

Mrs. Shiyani Thevaruban
Department of Education & Child Care,
Faculty of Arts & Culture,
Eastern University, Sri Lanka.
*shiyanishiya93@gmail.com*

Mrs.Thakshaayini Rajandran
Department of Education & Child Care,
Faculty of Arts & Culture,
Eastern University, Sri Lanka.
*thakshaayinir@esn.ac.lk*

**ஆய்வுச் சுருக்கம்:**

‘‘பாடசாலை நூலகங்களின் செயற்பாடுகள் சிரேஷ்ட இடைநிலை மாணவர்களின் சுயகற்றலில் ஏற்படுத்தும் தாக்கம்’’ எனும் தொனிப்பொருளில் அமைந்த இந்த ஆய்வு ஓர் அளவை நிலை ஆய்வாக முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் தற்காலச் சூழலில் மாணவர்கள் வாசிப்பில் ஆர்வம் காட்டாதவர்களாகவும், நூலகங்களை தமது சுயகற்றலுக்குப் பயன்படுத்தாதவர்களாகவும் காணப்படுகின்றார்கள். இதனால் மாணவர்கள் தமது சுயகற்றலுக்கு பாடசாலை நூலகங்களைப் பயன்படுத்துவதும் குறைவாகவே காணப்படுகின்றது. இதன்படி இவ் ஆய்வினை மேற்கொள்வதற்காக மட்டக்களப்பு மேற்கு வலயத்தின் மண்முனை தென் மேற்கு கோட்டத்தில் உள்ள 05 பாடசாலைகள் நோக்க மாதிரியின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இவ் ஆய்விற்கான ஆய்வு மாதிரிகளாக அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், நூலகப் பொறுப்பாளர்கள் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அதிபர்கள் அனைவரும் பாடசாலை தெரிவு செய்யப்பட்டமைக்கு அமைவாக ஆய்வுக்குட்படுவதுடன், 50 ஆசிரியர்களும், 105 மாணவர்களும் எளிய எழுமாற்று மாதிரி அடிப்படையிலும், நூலகப் பொறுப்பாளர்கள் நோக்க மாதிரி அடிப்படையிலும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். ஆய்விற்கான தரவு சேகரித்தல் கருவிகளாக வினாக்கொத்து, நேர்காணல், ஆவணச்சான்றுகள் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன. இவற்றின் மூலமாகப் பெறப்பட்ட அளவுசார் மற்றும் பண்புசார் தரவுகள் பொருத்தமான மென்பொருள் முறைகளின் ஊடாக பகுப்பாய்வு, வியாக்கியானம், கலந்துரையாடல் போன்ற செயற்பாடுகளுக்குள் உள்வாங்கப்படுவதுடன், பகுப்பாய்வின் மூலம் பல்வேறு முடிவுகளும் கண்டறியப்பட்டுள்ளன. இவ் ஆய்வின் முடிவுகளின் பிரகாரம் பாடசாலையில் நூலகங்கள் வினைத்திறனாக செயற்படுவதற்கு போதுமானளவு பௌதிக வளம், மனிதவளம் ஆகியன இல்லாத நிலையும், இதனால் மாணவர்கள் தாமாக நூலகத்தை பயனபடுத்துவதில் காட்டும் அலட்சியப்போக்கு காரணமாகச் சுயகற்றல் செயற்பாடுகள் பாதிப்படைகின்றமை முதலிய பல பிரச்சினைகள் கண்டறியப்பட்டுள்ளன. இதனடிப்படையில் பாடசாலை நூலகத்தை வினைத்திறனாக்குவதன் மூலம் மாணவர்களின் சுயகற்றல் செயற்பாடுகளை முன்னெடுக்கும் வகையில் விதப்புரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

***திறவுச்சொற்கள்***: *அளவைநிலை ஆய்வு, ஆய்வு மாதிரிகள், சிரேஷ்ட இடைநிலை மாணவர்கள் சுயகற்றல், பாடசாலை நூலகங்கள்*

# OPTIMIZING PREVENTIVE MAINTENANCE SCHEDULES FOR BIOMEDICAL EQUIPMENT BY USING THE DATA-DRIVEN APPROACH

Mr. Ragupathyraja Suhashan
Department of Information Technology,
Faculty of Arts & Culture,
Eastern University, Sri Lanka.
suhashan2@gmail.com

Mr. Rishogar Nirmalakumar
Department of Biomedical Engineering Services,
Mervynsons Pvt Ltd,
Colombo.
rishogarr@gmail.com
Mr. Kirushnalini Maguran
Division of Biomedical Engineering Services,
Ministry of Health,
Teaching Hospital Batticaloa.
krishmagsaai@gmail.com

**Abstract:**

This study focuses on optimizing preventive maintenance schedules for biomedical equipment in healthcare facilities. Ensuring the effective maintenance of such equipment is vital for uninterrupted healthcare delivery and patient safety. The proposed method harnesses data from various sources, including equipment usage patterns, historical maintenance records, and real-time sensor data, to enhance maintenance efficiency and minimize equipment downtime.

By incorporating advanced algorithms, the approach enables the prediction of potential faults, allowing healthcare facilities to proactively address issues before they escalate and disrupt operations. Additionally, the implementation of a web-based platform facilitates real-time monitoring, providing timely insights into equipment performance and status. A key aspect of this approach involves establishing a centralized database for maintenance records, enabling healthcare professionals to track equipment performance trends and refine maintenance protocols through analysis of historical data.

The study highlights the effectiveness of an online medical equipment management system in tackling issues related to low equipment performance, defects, and preventive maintenance. By adopting a data-driven strategy, the system optimizes the preventive maintenance schedule, ensuring that maintenance tasks are performed proactively and promptly. The system also supports service providers by accurately predicting the next preventive maintenance cycle and delivering notifications via email to the responsible individuals. This proactive approach minimizes equipment downtime, reduces defects, and enhances overall equipment performance. Leveraging data-driven insights, the online medical equipment management system improves operational efficiency, increases equipment reliability, and ultimately contributes to the delivery of high-quality healthcare services.

***Keywords:*** *Biomedical equipment, Data-driven technique, Management, Preventive Maintenance, Technology*

# கற்றல் கற்பித்தல் செயன்முறையில் பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டத்தின் பங்களிப்பு

Mr. Shivanantham Sritharan
Paddiruppu Zonal Education Office,
Paddiruppu,
Batticalao.
ssritharanzde@gmail.com

Dr. Sabaretnam Athirathan
Faculty of Education,
University of Colombo.
sabaaathi@sse.cmb.ac.lk

**ஆய்வுச் சுருக்கம்:**

பாடசாலை மட்டங்களில் நிகழும் திட்டமிடல் செயற்பாடுகள் பாடசாலைகளின் மேம்பாட்டில் முக்கிய பங்கு வகிக்கின்றது. அந்தவகையில் மட்டக்களப்பு மாவட்டத்தின் பட்டிருப்புக்கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளின் கற்றல் கற்பித்தல் செயன்முறையில் பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டத்தின் பங்களிப்பினை மதிப்பீடு செய்யும் நோக்கத்துடன், இந்த ஆய்வு முன்னெடுக்கப்பட்டது. விவரண அளவீட்டு ஆய்வு வடிவமைப்பைப் பின்பற்றி கலப்பு முறை ஆய்வாக மேற்கொள்ளப்பட்டது. 60 பாடசாலை அதிபர்களும் 37 பகுதித் தலைவர்களும் பாடசாலை முகாமைத்துவக் குழுவைச் சேர்ந்த 37 ஆசிரியர்களும் திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் உட்பட 06 இலங்கை கல்வி நிர்வாகசேவை உத்தியோகத்தர்களும் ஆய்வு மாதிரியாகக் கொள்ளப்பட்டிருந்தனர். ஆய்வுக்கான தரவுகளைச் சேகரிக்க வினாக்கொத்து, நேர்காணல், அவதானிப்பு, மற்றும் ஆவணப் பகுப்பாய்வு என்பன பயன்படுத்தப்பட்டன. SPSS Version மற்றும் Microsoft Excel என்பவற்றைப் பயன்படுத்தி தரவுகள் செயன்முறைப்படுத்தப்பட்டன. முதலில் பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டத்தின் 10 அம்சங்கள் (Parameters) உள்வாங்கப்பட்டு தயாரிக்கப்பட்ட நிலைமை பற்றிய ஆவணப் பகுப்பாய்வு செய்யப்பட்டது. அதன் மூலம் கிடைத்த கூட்டுச் சராசரி நியம விலகல்கள் முறையே 51.17 மற்றும் 15.94 ஆகும். இவற்றுக்கான சோதனை பெறுமானம் 5% நம்பிக்கை மட்டத்தில் பொருண்மையுள்ள தொடர்பு நிரூபிக்கப்பட்மையினால் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படத்தப்படும் பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டங்கள் குறைபாடுடையன என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டது. மேலும், பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டத்துடன் தொடர்புடைய மற்றும் கற்றல் - கற்பித்தல் செய்முறையுடன் தொடர்புடைய 25 காரணிகள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டன. பாடசாலை மட்டத் அபிவிருத்தித்திட்டம் கற்றல்-கற்பித்தல் செயன்முறை (Y) ஆகிய இரண்டு மாறிகளுக்கும் இடையிலான ஸ்பியர்மனின் தர வரிசை இணைவுக் குணகம் 0.1265 அளவில் காணப்பட்டதனால் இரண்டிற்குமிடையில் நேரிணைவு உண்டு என்பது உறுதி செய்யப்பட்டது.

பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டங்கள் கல்வி முறையை மேம்படுத்தவும், மாணவர் கற்றலை மேம்படுத்தவும் ஒரு சக்திவாய்ந்த கருவியாக இருக்கும். மேலும், கற்றல் கற்பித்தல் செயன்முறைக்கு பல வழிகளில் பங்களிக்க முடியும். இருப்பினும் இதில் உள்ள சவால்களை வெற்றிகொள்ள உரிய நடைமுறைகளைப் பின்பற்றாததன் காரணமாக கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டுக்கு பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டமானது போதியளவான பங்களிப்பை வழங்கவில்லை என இவ் ஆய்வு முடிவு செய்கின்றது.

***திறவுச் சொற்கள்:*** *கற்றல் - கற்பித்தல் செயன்முறை, பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டம், பாடசாலை முகாமைத்துவம், நியம விலகல், விவரண அளவீட்டு ஆய்வு*

# Religion & Social Harmony

# சமூகநல்லுறவினை மேம்படுத்துவதில் சமய விழுமியங்களின் வகிபாகம் - இந்து பௌத்த சமயங்களை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஒப்பீட்டாய்வு

Ms. Arumukam Jeyaruby
Department of Comparative Religion and Social Harmony,
Faculty of Arts & Culture,
Eastern University, Sri Lanka.
*Jeyarubyarumukamruby@gmail.com*

Mr. R. Sahaayaseelan
Department of Comparative Religion and Social Harmony,
Faculty of Arts & Culture,
Eastern University, Sri Lanka.
*sahayaseelanr@esn.ac.lk*

**ஆய்வுச் சுருக்கம்:**

சமூக நல்லுறவென்பது வேற்றுமைகளுக்கு மத்தியில் ஒற்றுமையை ஏற்படுத்துகின்ற ஒரு விடயமாகும். சமூகத்தைப் பொறுத்தவரை நல்லுறவுடன் கூடியதான சூழல் அவசியமாகின்றது. அத்தகைய சூழலை ஏற்படுத்துவதற்கு அனைவரும் சமூக நல்லுறவுடன் வாழவேண்டும். இவ்வாறான சமூக நல்லுறவினை மேம்படுத்துவதில் உந்துசக்தியாக அமைந்திருப்பவை சமய விழுமியங்களாகும். சமய விழுமியங்கள் அனைவராலும் இலகுவாகப் பின்பற்றப்படக்கூடியதும் பின்பற்றத் தவறுகின்றதுமான விழுமியங்களாகவே அமைந்துள்ளன. இவ்வாறாகக் காணப்படும் விழுமியங்களை மனிதன் தனது வாழ்க்கையில் கடைபிடித்து ஒழுகுவானாக இருந்தால் சமூக நல்லுறவானது மேம்படும். இந்து பௌத்த சமயங்கள் தத்தம் சமய விழுமியங்கள் ஊடாக சமூக நல்லுறவினை எவ்வாறு மேம்படுத்துகின்றன என்பது தொடர்பில் எத்தகைய ஒற்றுமைப் பாங்கினைக் கொண்டுள்ளன என்பதனைக் கண்டு கொள்வதே இவ் ஆய்வினுடைய நோக்கமாகும். இந்த நோக்கத்தை அடைவதற்காகப் பண்புசார் ஆராய்ச்சி முறை இவ் ஆய்வில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தப் பண்புசார் ஆராய்ச்சியானது ஒரு விபரண ஆய்வாக இருப்பதனால் தரவுகள் இரண்டாம் நிலைத் தரவுகளாகவே உள்ளன. மேலும் இவ்வாய்விற்கு நூல்கள், சஞ்சிகைகள், கட்டுரைகள் முதலியன ஆய்விற்குரிய தரவு சேகரிப்பு முறைகளாக உள்ளதுடன், மூன்றாம் நிலைத் தரவுகளான இணையவழித் தரவு திரட்டல் முறையின் மூலமும் கிடைக்கப்பெற்ற தரவுகளை அடிப்படையாகக் கொண்டு இவ் ஆய்வு அமையப் பெற்றுள்ளது. இந்த ஆராய்ச்சி தரவுகளின் அடிப்படையில் ஒப்பீட்டுரீதியாக இந்த எண்ணக்கரு பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. இவ் ஆய்விலேயே கூறப்பட்டுள்ள விடயங்களாக சமூக நல்லுறவு மற்றும் விழுமியங்கள் என்பதுடன் இந்து மற்றும் பௌத்த சமயங்களில் காணப்படுகின்ற சமய விழுமியங்கள் சமூக நல்லுறவினை மேம்படுத்துவதற்கு வலுச்சேர்ப்பதாக அமையப் பெற்றுள்ளது.

***திறவுச்சொற்கள்:*** *இந்து பௌத்த சமயங்கள், சமய விழுமியங்கள், சமூக நல்லுறவு, பண்புசார் ஆராய்ச்சி முறை, விபரண ஆய்வு*

# இஸ்லாம் பௌத்த சமயங்கள் கூறும் கன்மம் மற்றும் மறுபிறப்புக் கோட்பாடு - அல்குர்ஆனையும் திரிபீடகத்தையும் அடிப்படையாகக் கொண்ட ஓர் ஒப்பீட்டாய்வு

Mr. Kamaraj Pradeevan
Department of Comparative Religion and Social Harmony,
Faculty of Arts & Culture,
Eastern University, Sri Lanka.
*pradeevanpradeevan45@gmail.com*

Mr. Kanesan Mathiseelan
Department of Comparative Religion and Social Harmony,
Faculty of Arts & Culture,
Eastern University, Sri Lanka.
*mathiseelank@esn.ac.lk*

**ஆய்வுச் சுருக்கம்:**

இவ் ஆய்வானது உலகில் அதிகமான மதங்களில் பேசப்படுகின்ற கன்மம் மறுபிறப்பு பற்றிய சிந்தனையினை ஆய்வு செய்வதாக அமைந்துள்ளது. ஆய்வின் விரிவுக்கு அஞ்சி இஸ்லாம், பௌத்த சமயங்கள் கூறும் கன்மம், மறுபிறப்பு சிந்தனையினை எடுத்தாராய்வதாக உள்ளது. அதிலும் குறிப்பாக இஸ்லாம் என்ற வகையில் அல்குர்ஆனையும் பௌத்தம் என்ற வகையில் திரிபிடகத்தையும் இவ் ஆய்வானது அடிப்படையாகக் கொண்டுள்ளது. கன்மம் என்றால் செயல், வினை எனப் பொருள்படுகின்றது. கன்மம் என்பது மனிதன் ஒவ்வொருவரும் செய்கின்ற செயலையும், செயலின் பயனையும் குறிப்பதாக அமைகின்றது. இத்தகைய கன்மம் பற்றிய சிந்தனையானது அனைத்து மதங்களுக்கும் பொதுவான சிந்தனையாக காணப்பட்ட போதிலும் சில வேற்றுமைகளை உள்ளடக்கி இருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. இவ் ஆய்வின் பொருட்டு எடுத்துக் கொள்ளப்பட்ட பௌத்த, இஸ்லாம் சமயங்களில் இக் கன்மம் என்ற சிந்தனை குறித்து பல வேற்றுமை பண்புகள் உள்ள போதிலும் சில ஒற்றுமை போக்குகளும் தென்படுவதை இவ் ஆய்வு எடுத்துக் கூறியுள்ளது. இவ்விரு சமயங்களுக்கும் இடையே உறவு நிலையினை மேம்படுத்தும் நோக்கமாக முன்னெடுக்கப்படுகின்ற இவ் ஆய்வானது இரண்டாம் நிலை தரவுகளாகிய உரைநூல்கள், ஆய்வு நூல்கள், சஞ்சிகைகள், இணையத்தளத் தகவல்கள் ஆகியவற்றை ஆய்வு மூலங்களாக கொண்டுள்ளது. இவ் ஆய்வு உள்ளடக்க பகுப்பாய்வு, ஒப்பீட்டு பகுப்பாய்வு போன்ற முறையியல்களையும் உள்ளடக்கி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

***திறவுச்சொற்கள்:*** *ஆன்மா, கன்மம், சுவர்க்கம், மறுபிறப்பு, நரகம்*

# Philosophy, Values & History

# தென்னிந்தியத் திரைப்படங்கள் சிறுவர்கள் மத்தியில் ஏற்படுத்தும் தாக்கங்கள் பதுளை மாவட்டம் ஊவா பரணகம பிரதேச செயலகப் பிரிவிற்குற்பட்ட ஹியூகோலண்ட் தோட்டம் கிராம சேவகர் பிரிவை அடிப்படையாகக் கொண்ட ஒரு மெய்யியல் ஆய்வு – 2023

Ms. Pushparaj Dhanadharshani
Department of Philosophy & Value Studies,
Faculty of Arts & Culture,
Eastern University, Sri Lanka.
*dharshipushparaj@gmail.com*

Dr. Ratnasabpathy Premkumar
Department of Philosophy & Value Studies,
Faculty of Arts & Culture,
Eastern University, Sri Lanka.
*premkumarr@esn.ac.lk*

**ஆய்வுச் சுருக்கம்:**

தென்னிந்தியத் தமிழ் திரைப்படங்கள் அதிகளவு செல்வாக்கு மிக்க ஊடகமாக உலகில் வளர்ச்சி பெற்றுக் காணப்படுகின்றது. வாழ்க்கை மற்றும் மதிப்பீடுகள் தொடர்பாக மக்களுடைய மனப்பாங்குகளையும் கருத்துக்களையும் தென்னிந்தியத் தமிழ் திரைப்படங்கள் மாற்றி அமைப்பதுடன் நின்றுவிடாது சிறுவர்களின் அறிவு, ஆளுமை, உளவியல், ஒழுக்கம், பண்பாடு, மொழி போன்றவற்றில் பாரிய தாக்கங்களையும் ஏற்படுத்தி வருகின்றன. திரைப்படம் என்னும் மாபெரும் சக்தி அவர்கள் பெற்ற முறையான அங்கிகரீக்கபட்ட சமூகமயமாக்கச் செயன்முறைகளைக் கேள்விக்குறியாக்குவதாக இருக்கின்றது. இவ்வகையில் பதுளை மாவட்டம் ஊவா பரணகம பிரதேச செயலகப் பிரிவிற்குற்பட்ட ஹியூகோலண்ட் தோட்ட கிராம சேவகர் பிரிவில் வாழும் மக்கள் இந்திய வம்சாவழியினராக இருப்பதன் காரணமாகவும் சமூக பொருளாதார ரீதியாக பின்தங்கிய தோட்டப்புற சூழலில் வாழ்கின்றவர்களாக இருப்பதன் காரணமாகவும் இப்பிரதேச சிறுவர்களிடையே தென்னிந்தியத் தமிழ் திரைப்படங்களின் தாக்கம் அதிகளவில் காணப்படுகின்றது. இலங்கையில் பெருமளவில் சிறுவர்கள் தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பினும், பதுளை மாவட்டம் ஊவா பரணகம பிரதேச செயலகப் பிரிவிற்குற்பட்ட ஹியூகோலண்ட் தோட்ட கிராம சேவகர் பிரிவில் தென்னிந்திய தமிழ் திரைப்படங்கள் எவ்வாறான தாக்கங்களை சிறுவர்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளன என்ற எனது இந்த ஆய்வு முதல் முயற்சியாக கருதப்படக்கூடியது. இவ் ஆய்வின் ஆய்வு முறையானது பண்பு மற்றும் அளவுசார் ஆய்வு முறைகளின் கலவையாக விளங்குகின்றது. இவ்வகையில் இந்த ஆய்வில் நோக்க மாதிரி, வசதி மாதிரி மற்றும் மையக்குழு முறை வினாக்கொத்து, நேர்காணல், அவதானம் போன்றன பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ் ஆய்வின் பிரதான நோக்கமாக தென்னிந்தியத் தமிழ்த் திரைப்படங்கள் சிறுவர்கள் மீது ஏற்படுத்தியுள்ள ஒழுக்க, சமூக, பொருளாதார, உளவியல், மொழியியல், உடலியல், கலாசாரப் பாதிப்புக்களை கண்டறிவறிவதாகவும் அதற்கான பரிந்துரைகளை முன்வைப்பதாகவும் அமைகின்றது.

***திறவுச்சொற்கள்:*** *இந்திய வம்சாவழி, ஊவா பரணகம, ஒழுக்கம், சமூகமயமாக்கல், தென்னிந்திய தமிழ் திரைப்படங்கள்*

# இந்து அறிவியலில் சித்தர்களும் இரசவாதமும் : ஒரு மெய்யியல் பார்வை

Mr. Uthayathevan Jeevatharsan
Postgraduate,
Facultuy of Arts & Culture,
Eastern University, Sri Lanka.
u.jeevatharsan861@gmail.com

Mr. Tharaneenthan Kamalachandran
Siddha Medcine Unit,
University of Jaffna.
tharanee94@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்:**

இந்திய ஞானிகள் வரிசையில் சித்தர்களுக்குத் தனி இடம் உண்டு. சித்தர்கள் என்போர் சித்தத்தை சிவமாய்க் கொண்டவர்கள் என்பது பொதுவான கருத்து. சிந்தை தெளிந்து சித்தத்தை வென்றவன் சித்தன் எனவும் சித்தர்கள் யோகத்தின் மூலமும் தியானத்தின் மூலமும் புத்தியைக் கட்டுப்படுத்துபவர்கள் என்றும் கூறப்படுகின்றது. சித்தர்களை ஆன்மிகப் புரட்சியாளர்கள் என்று சொல்வதும் உண்டு. சித்தர்கள் பதினெட்டு பேர் என்கின்றது, பண்டைய நூல்கள். இத்தகைய சித்தர்களின் காலத்தை மிகச் சரியாக வரையறுக்க முடியவில்லை. அகத்தியருக்குப் பின்னர் திருமூலர், திருமூலருக்குப் பின்னர் மற்றையோர் எனச் சித்தர் மரபு அறியப்படுகின்றது. ஆன்மிகம் தழைக்கவும், மக்களின் ஆரோக்கியம் செழிக்கவும் சித்தர்கள் முக்கிய பங்காற்றி இருக்கின்றனர். அவர்கள் தத்துவ நெறியிலும், மருத்துவத் துறையிலும் அநேக நூல்கள் செய்துள்ளனர். மருத்துவத்தோடு யோகம், சோதிடம், மந்திரம், இரசவாதம் போன்ற அரிய அறிவியல் அம்சங்களையும் தந்தவர்கள், சித்தர்கள். சித்தர் மெய்யியலானது தத்துவ ஆராய்ச்சி என்ற நிலையினைத் தாண்டி இந்து சமயத்தின் சமூகப் பண்பாட்டு வாழ்வியலை வளப்படுத்தியுள்ளது. இவ்வாய்வானது, இரசவாதம் என்பதன் பொருள் விளக்கத்தினை வெளிப்படுத்துதல், இரசவாதத்தின் அடிப்படை விடயங்களை எடுத்தியம்புதல், இரசவாத முன்னோடிகள் மற்றும் இரசவாதம் செய்யும் முறைமை அத்தோடு உலோகமும் அதன் கலப்பு முறைகள் போன்றவற்றை வெளிப்படுத்துதல் என்பனவற்றை முக்கிய நோக்கங்களாகக் கொண்டுள்ளது. இவ் ஆய்வுக்கு முதல்நிலைத் தரவுகளாக சித்தர்களின் நூல்களும் இரண்டாம்நிலைத் தரவுகளாக, சித்த மருத்துவம் மற்றும் இரசவாதம் தொடர்பாக வெளிவந்துள்ள நூல்கள், சஞ்சிகைகள் மற்றும் ஆய்வுக்கட்டுரைகள் முதலியனவும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ் ஆய்வானது சித்தர்களின் இரசவாதக்கலையை தெளிவுபடுத்தும் வகையில் விபரண ஆய்வு, வரலாற்று ஆய்வு மற்றும் ஒப்பீட்டாய்வு போன்ற ஆய்வு முறையியல்களினூடாகக் கட்டமைக்கப்பட்டுள்ளது. முடிவாக, சித்தர்களின் மருத்துவ முறைகள் தனித்தன்மை பெற்று விளங்குவதனைப் போன்று அவர்களது அரிய கண்டுபிடிப்பான இரசவாதம் பற்றிய விடயங்கள் இன்றைய அறிவியலாளர்களையும் வியக்கவைப்பதாக அமைந்துள்ளது. சித்தர்கள் செய்த இரசாயன ஆராய்ச்சிகளின் அளவையும் பரிமாணத்தையும் கணக்கிடவே முடியாது. இந்த அற்புதமான காரியத்தை நிகழ்த்திய சித்தர்கள் வாழ்ந்த காலத்தையும் அவர்கள் செய்த ஆராய்ச்சிகளையும் பற்றித் தெளிவான வரலாற்றுச் சான்றுகள் முழுமையான அளவில் கிடைக்காமல் போனமை துரதிஷ்டமே. இருப்பினும், இரசவாதக்கலையின் முன்னோடிகளாகச் சித்தர்களே விளங்கி இரசவாதம் தொடர்பாக பல்வேறு விடயங்களை வெளிப்படுத்தியுள்ளனர் இதனைத் தெளிவுபடுத்துவதாக இவ் ஆய்வு அமைந்துள்ளது. இத்தகைய இரசவாதம் பற்றிய விடயங்கள் பரந்துபட்டது. ஆயினும், அவை தொடர்பான குறிப்பிட்ட அளவிலான விடயங்களே இக்கட்டுரையில் எடுத்தாளப்பட்டுள்ளன.

***திறவுச்சொற்கள்:*** *அறிவியல், இரசவாதக்கலை, உலோகங்கள், சித்தர்கள், சித்தர் மெய்யியல்*

# பட்டினத்தாரின் தத்துவச் சிந்தனைகள்: ஒரு மெய்யியல் பகுப்பாய்வு

Ms. Rasu Ashaniya
Department of Philosophy & Value Studies,
Faculty of Arts & Culture,
Eastern University, Sri Lanka.
rasuashaniya28@gmail.com

Mr. Vellappody Alagaratnam
Department of Philosophy & Value Studies,
Faculty of Arts & Culture,
Eastern University, Sri Lanka.
alagaratnamv@esn.ac.lk

**ஆய்வுச் சுருக்கம்:**

தத்துவம் அல்லது மெய்யியல் என்பது ஒரு செந்நெறிசார் கற்கையாக ஆரம்பகாலத்திலிருந்தே பல்கலைக்கழகங்களில் பயிலப்பட்டு வருகின்றது. இப்பாடப்பரப்பினுள் அதிகமும் மேலைத்தேய மெய்யியல் என்பதே உரியதாகக் காணப்படுகின்றது. இந்திய தத்தவம் எனும்போது சமஸ்கிருத மொழியில் எழுந்த விடயங்களே தத்துவம் என்பதனுள் பொதுவாக ஆராயப்படுகின்றது. ஆனால் தமிழர் தத்துவ மரபொன்று இருப்பது தவறவிடப்படுவது மரபாகிவிட்டது. சங்ககாலம் முதல் இன்றுவரை தத்துவச் சிந்தனைகள் தமிழில் காணப்படுகின்றன. இம்மரபில் சித்தர்கள் தத்துவம் முக்கியமானது. சுயாதீன சிந்தனை மரபு இவர்களுடையது. இதில் பட்டினத்தார் தலையானவர். இவரது தத்துவம் மிகவும் ஆழமானது. இது எத்தகையது என்பதே இவ் ஆய்வின் மையமாகியுள்ளது. பட்டினத்தாரின் பாடல்களில் எத்தகைய மெய்யியல் தனித்துவம் உள்ளது என்பது ஆய்வுப் பிரச்சினையாகும். ஆய்வின் நோக்கமானது பட்டினத்தாரின் தத்துவச் சிந்தனையின் சிறப்பினை ஆராய்வதாக அமைந்துள்ளது. புதிதுகாண் ஆய்வு முறையின் அடிப்படையில் பண்புசார் பகுப்பாய்வு இடம்பெற்றது. இரண்டாம்நிலை தரவுகளினடிப்படையில் இவ்வாய்வு இடம்பெற்றது. இவரது பாடல்களில் மூலமாக இருக்கின்ற பாடல்களை அடிப்படையகக் கொண்டு சிந்தனை பகுப்பாய்வுக்கு உட்படுத்தபட்டது. இதனடிப்படையில் தமிழரது சிந்தனை எவ்வளவு சிறப்பானது என்பது பட்டினத்தாரின் கருத்துக்களூடாக நிறுவப்பபட்டுள்ளது.

***திறவுச்சொற்கள்:*** *இந்திய தத்துவம், சித்தர் தத்துவம், சுயாதீன சிந்தனை, தமிழர் தத்துவம், பட்டினத்தார்*

# இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் வளர்ச்சியில் தலைமைத்துவத்தின் பங்களிப்பு - ஒரு வரலாற்று ஆய்வு

Ms. Vinayagam Vijayashanthi
Department of History,
Faculty of Arts & Culture,
Eastern University, Sri Lanka.
*vijitha4145@gmail.com*

Mr.S. K. Shivahaneshan
Department of History,
Faculty of Arts & Culture,
Eastern University, Sri Lanka.
*shivahaneshank@esn.ac.lk*

**ஆய்வுச் சுருக்கம்:**

சமகாலத்தில் மலையகச் சமூகம் சார்ந்த பல கட்சிகள், அமைப்புக்கள் செயற்பட்டு வருகின்றன. முக்கியமாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மலையக மக்களின் அரசியல், தொழில் சங்க செயற்பாடுகள் கொண்ட ஓர் முதன்மையான நிறுவனமாக செயற்பட்டு வருகின்றது. இவ்வமைப்பு சுமார் 84 வருட கால வரலாற்றுப் பின்னணியைக் கொண்ட அரசியல் கட்சியாகவும் தொழிலாளர் நலன்பேணும் அமைப்பாகவும் காணப்படுகின்றது. தொழிலாளர் காங்கிரஸைப் பொறுத்தவரையில் அதன் நிறுவனத்தலைவர் அமரர் தொண்டமான் இட்டுக் கொடுத்த பலமான அத்திபாரத்தில் கட்டியெழுப்பட்டுள்ளதுடன், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைமைத்துவம் தொண்டமானின் பரம்பரையை அடியொற்றியதாகவே கைமாற்றப்பட்டு வந்துகொண்டிருக்கின்றது.

இந்தியாவின் அனுசரணையோடு, 1939 ஆம் ஆண்டு இலங்கை - இந்திய காங்கிரஸ் தோற்றுவிக்கப்பட்டது. காலப்போக்கில் இந்நிறுவனத்தின் செயற்பாடுகள் ஏற்பட்ட அதிருப்திகள் காரணமாக பிளவுகள் ஏற்பட்டு, மலையக மக்கள் மத்தியில் பல அரசியல், தொழிலாளர் நலன் சார்ந்த அமைப்புக்கள் தோற்றுவிக்கப்பட்டன. அவை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் என்பவையாகும். இலங்கை - இந்திய காங்கிரஸ் தொழிலாளர் நலன்களைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடேசய்யரின் தொழில் சங்க இயக்கம் முன்னோடியாகவிருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது. இவ்வகையில் மலையகச் சமூகத்தின் அரசியல் மற்றும் தொழிலாளர் சார்புடைய அமைப்பான 'இலங்கைத்தொழிலாளர் காங்கிரஸ்' அதன் பரம்பரைத் தலைமைத்துவத்தின் உறுதியில் கட்டியெழுப்பட்டுள்ளது என்பது முக்கிய கருத்தாகும். அரசியல் செயற்பாடுகளில் முக்கிய அமுக்கக் குழுவாகவும் அதேவேளை ஆளும் தரப்பினரோடு ஒத்திசைந்து செயற்படும் கொள்கையையும் கடைப்பிடித்து, மலையக சமூகத்தவரின் கல்வி, வேலை வாய்ப்பு, அடிப்படை தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதில் கூடுதல் கவனம் செலுத்தி வருகின்றது.

***திறவுச்சொற்கள்:*** *இலங்கை - இந்திய காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், தொழிலாளர் பரம்பரை, மலையகம், நடேசைய்யர்*

# Gender & Human Behaviour

# நவீன சமூக ஊடகங்களின் பாவனை கல்வியியற் கல்லூரி மாணவர்களின் நடத்தையில் ஏற்படுத்தும் தாக்கம்

**(மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரியினை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு)**

Mr. Vijayaretnam Vijayaruban
National College of Education,
Thalankudah,
Batticaloa.
v.v.ruban18@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்:**

ஒரு கருத்தை அல்லது தகவலை ஓர் இடத்திலிருந்து இன்னொரு இடத்துக்குப் பரிமாற்றம் செய்ய உதவும் சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதில் இளைஞர்கள் முன்னிலையில் உள்ளதுடன், அவற்றால் ஏற்படும் தாக்கங்கள் அவர்களில் பல பாதக விளைவுகளையும் உண்டுபண்ணுவதைக் காண முடிகின்றது. அவ்வகையில் இவ் ஆய்வானது இளைஞர்களை கல்விப்புலத்துடன் தொடர்புபடுத்தும் நோக்கில் மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரியின் முதலாம் வருட ஆசிரிய பயிலுநர்களை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. சமூக ஊடகங்கள் கல்வியியற் கல்லூரி மாணவர்கள் மத்தியில் எவ்வாறான தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது என்பதே இவ் ஆய்வின் பிரச்சினையாகும். அந்தவகையில் இம் மாணவர்கள் அதிகமாகப் பயன்படுத்தும் சமூக ஊடகங்களைக் கண்டறிதல், அவர்களின் சமூக ஊடகங்கள் நோக்கியதான அணுகுமுறையை மதிப்பிடல், கல்வியியற் கல்லூரி மாணவர்கள் மத்தியில் சமூக ஊடகங்களின் தாக்கங்களை இனங்காணல், சமூக ஊடகங்களைச் சரியான முறையில் பயன்படுத்துவதற்கான ஆலோசனைகள் மற்றும் பரிந்துரைகளை ஆசிரிய பயிலுநர்களுக்கு முன்வைத்தல் என்பனவே இவ் ஆய்வின் நோக்கங்களாகும். இவ் ஆய்வானது அளவுசார், பண்புசார் முறையினூடாக விபரிப்பு ஆய்வு முறையியலைப் பயன்படுத்துகின்றது. முதலாம் நிலைத் தரவுகள் வினாக்கொத்து, கலந்துரையாடல் மற்றும் அவதானம் மூலம் பெறப்பட்டன. வினாக் கொத்துக்கள் தேவையின் பொருட்டு Google Form செயலி மூலமாக தயாரிக்கப்பட்டு மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரியின் அனைத்து பாடத்தொகுதியிலும் காணப்படும் 384 ஆசிரிய பயிலுநர்களில் இருந்து எழுமாறாக தெரிவு செய்யப்பட்ட நபர்களுக்கு அனுப்பப்பட்டது. இரண்டாம் நிலைத் தரவுகள் ஆய்வுகள், நூற்கள், இணைய சஞ்சிகைகள், இணையக் கட்டுரைகள் என்பவற்றில் இருந்து பெறப்பட்டன. பெறப்பட்ட தரவுகள் MX EXCEL மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டன. இதன்படி மாதிரித் தெரிவானது (Krejcie & Morgan Sampling size Chart) இனை அடிப்படையாகக் கொண்டு ஆய்வாளரின் குடித்தொகைக்குப் பொருந்தக் கூடிய மாதிரி அளவான 380 : 191 என்ற அளவுத்தொகை எடுக்கப்பட்டது. இங்கு 2:1 என்ற அளவு பொருத்தமுடையதாக அமைந்தது. இதன்படி ஆண் ஆசிரிய பயிலுநர்களில் இருந்து 88 பேரும், பெண் ஆசிரிய பயிலுநர்களிடமிருந்து 104 பேரும் எளிய எழுமாற்று மாதிரி அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டு அவர்களிடம் இருந்தும் தரவுகள் பெறப்பட்டன. இவ்வாறு பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில், கல்வியியற் கல்லூரி பயிலுநர்களின் நடத்தையில் தொடர்பாடல் திறன், மொழித்திறன், சமூக உறவுகளை இணைத்தல், சமூக இடைவினையை அதிகரித்தல், உதவிப்பரிமாற்றம், உடனுக்குடன் தகவல்களை அறிதல் போன்ற நேரான தாக்கங்களையும், உடல் உள ரீதியான பாதிப்பு, நேர வீண்விரயம், கல்வியில் பின்னடைவு, அதிக செலவு, சமூக கலாசார விழுமியங்களில் சீரழிவு போன்ற எதிர்மறையான தாக்கங்களும் இணங்காணப்பட்டன. இதன் அடிப்படையில் கல்வியியற் கல்லூரி நிருவாக அமைப்பில் இச் சமூக ஊடகங்களின் பாதக நிலைகளை ஆசிரிய மாணவர்களுக்கு எடுத்தியம்பி அதன் மூலம் அவர்களின் நடத்தைகளை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதும் ஆய்வின் முடிவில் பரிந்துரைகளாக முன்வைக்கப்பட்டன.

***திறவுச்சொற்கள்:*** *ஆசிரிய பயிலுநர்கள், கல்வியியற் கல்லூரி, சமூக இடைவினை, நடத்தை, நவீன சமூக ஊடகங்கள்*

# க.பொ.த உயர்தர மாணவர்களின் சுயமதிப்பீடும் கல்வி அடைவு மட்டமும் : யாழ்ப்பாணக் கல்விக் கோட்ட 1AB பாடசாலைகளை மையப்படுத்திய ஓர் உளவியல் ஆய்வு

Ms. Saththiyalingam Vaishnavi
Department of Philosophy,
University of Jaffna,
Jaffna.
vaishuvaishnavi344@gmail.com

Dr. Kanthasami Kajavinthan
Department of Philosophy,
University of Jaffna,
Jaffna.
kajavinthan@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்:**

இவ் ஆய்வானது யாழ்ப்பாணக் கல்விக் கோட்ட 1AB பாடசாலைகளில் கல்வி பயிலும் க.பொ.த உயர்தர மாணவர்களின் சுயமதிப்பீட்டிற்கும் அவர்களின் கல்வி அடைவு மட்டத்திற்கும் இடையிலான தொடர்பை ஆராய்வதுடன், அதில் செல்வாக்கு செலுத்தும் காரணிகளை இனங்கண்டு, அவர்களுக்கு ஆதரவான தலையீடுகளை வழங்குவதை நோக்கமாக கொண்டுள்ளது. இவ் ஆய்விற்காக யாழ்ப்பாண கல்விக் கோட்டத்திற்குட்பட்ட 1AB பாடசாலைகளில் கல்வி பயிலும் 120 க.பொ.த உயர்தர மாணவர்கள் (ஆண் 60, பெண் 60) எளிய எழுமாற்று மாதிரித்தெரிவு முறையினூடாக தெரிவு செய்யப்பட்டு, அவர்களிடமிருந்து றொஸென்பேர்க்கின் சுய மதிப்பீடு வினாக்கொத்து மூலமாகவும், நேர்காணல் மூலமாகவும் தரவுகள் பெறப்பட்டன. அத்துடன் இரண்டாம் நிலைத் தரவுகளான மாணவர் தேர்ச்சி அறிக்கை, ஆய்வுக் கட்டுரைகள், புத்தகங்கள் மற்றும் இணையத்தளங்களில் இருந்தும் தரவுகள் பெறப்பட்டன. இவ் ஆய்வில் மாதிரிகளிடமிருந்து பெற்றுக் கொண்ட தரவுகளை பகுப்பாய்வு செய்வதற்காக அளவுசார் மற்றும் பண்புசார் பகுப்பாய்வு முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. வினாக்கொத்தினூடாக பெறப்பட்ட தரவுகள் அனைத்தும் சமூக விஞ்ஞானத்திற்கான புள்ளி விபர பகுப்பாய்வு (SPSS) மற்றும் Microsoft Excel மென்பொருளின் ஊடாக புள்ளிவிபர ரீதியான தரவுகளாக மாற்றப்பட்டு, அவை அளவுரீதியாக பகுப்பாய்வு செய்யப்பட்டது. மேலும் நேர்காணல், புத்தகங்கள், மற்றும் இணையத்தளங்கள் மூலமாக பெறப்பட்ட தரவுகள் பண்பு ரீதியாக பகுப்பாய்வு செய்யப்பட்டது. ஆகவே இவ் ஆய்வில் விபரண புள்ளிவிபரவியல் ஆய்வு வடிவமைப்புடன் அளவு சார்ந்த மற்றும் பண்பு சார்ந்த இரு பகுப்பாய்வு முறைகளும் கலப்பு முறையில் பயன்படுத்தப்பட்டுள்ளன. இதிலிருந்து தொகுத்தறி முறை மூலம் பின்வரும் முடிவுகள் பெறப்பட்டன. க.பொ.த உயர்தர மாணவர்களின் சுயமதிப்பீட்டிற்கும் அவர்களின் கல்வி அடைவு மட்டத்திற்கும் இடையில் நேர்கணியத் தொடர்பு ($r= 0.641, P< 0.00$) காணப்பட்டது, க.பொ.த உயர்தர மாணவர்களின் பால்நிலைரீதியான வேறுபாட்டிற்கும் அவர்களின் சுயமதிப்பீடு மற்றும் கல்வி அடைவு மட்டத்திற்கும் இடையில் பொருண்மிய வேறுபாடு காணப்படுகின்றது, அதாவது பெண் மாணவர்களைக் காட்டிலும் ஆண் மாணவர்களிடம் உயர் சுய மதிப்பீடு காணப்படுகின்றது எனவும், ஆண் மாணவர்களை காட்டிலும் பெண் மாணவர்களிடம் உயர் கல்வி அடைவுகள் காணப்படுகின்றது எனவும், க.பொ.த உயர்தர மாணவர்களின் சுயமதிப்பீட்டிற்கும் அவர்கள் கற்கும் பாடத்துறைக்குமிடையில் தொடர்பு காணப்படுகின்றது எனவும், க.பொ.த உயர்தர மாணவர்களின் சுய மதிப்பீட்டிற்கும் அவர்கள் கற்கும் தரத்திற்கும் இடையில் வேறுபாடு காணப்பட்டது, க.பொ.த உயர்தர மாணவர்களின் சுய மதிப்பீட்டிற்கும் அவர்களின் பெற்றோர்களின் கல்வி தகைமைக்கும் இடையில் பலவீனமான நேர்கணியத் தொடர்பு ($r= 0.309, P<0.01$) காணப்பட்டது எனவும் கண்டறியப்பட்டது. இவ் ஆய்வு முடிவானது க.பொ.த உயர்தர மாணவர்களின் சுயமதிப்பீடு மற்றும் கல்வி அடைவு மட்டத்தில் செல்வாக்கு செலுத்தும் காரணிகளை அடையாளம் கண்டுள்ளதால் அதனடிப்படையில் மாணவர்களின் சுயமதிப்பீடு மற்றும் கல்வி அடைவை மேம்படுத்தும் நோக்கில் நடைமுறைப்படுத்தக்கூடிய சில பரிந்துரைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன. அவையாவன: மாணவர்களின் சுய மதிப்பீடு மற்றும் கல்வி அடைவை மேம்படுத்தும் வகையிலான புதிய செயற்திட்டங்களை உருவாக்குதல், ஆசிரியர்களுக்கு மாணவர்களின் கற்றல் அடைதலில் சுயமதிப்பீட்டின் முக்கியத்துவத்தை உணர்த்தி மாணவர்களின் சுயமதிப்பீட்டை மேம்படுத்துவதற்காகப் பயன்படுத்தக்கூடிய உத்திகள் மற்றும் நுட்ப முறைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல் மற்றும் மாணவர்களின் ஆர்வங்களுக்கேற்ப கற்றல் சூழலை மாற்றியமைத்தல் போன்ற தலையீட்டு திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக மாணவர்களின் சுயமதிப்பீட்டை மேம்படுத்தலாம்.

***திறவுச்சொற்கள்:*** *க.பொ.த உயர்தர மாணவர்கள், கல்வி அடைவு, கற்றல் செயல்திறன், சுயமதிப்பீடு, றொஸென்பேர்க்*

# MOTHER TONGUE INFLUENCE ON LEARNING ENGLISH AS A SECOND LANGUAGE AMONG SRI LANKAN UNIVERSITY STUDENTS

Mr. Mohamed Musthafa Abdul Rahuman,
Department of English Language Teaching,
Faculty of Arts and Culture,
South Eastern University of Sri Lanka,
*mmarahuman@seu.ac.lk*

Dr. Singanayagam Umashankar,
Department of English Language Teaching,
Faculty of Arts and Culture,
Eastern University of Sri Lanka.
*umashankars@esn.ac.lk*

**Abstract:**

The woord 'mother tongue influence' is viewed from two different angles. One is using the mother tongue (L1) in the second language (L2) for teaching and learning, and the other is applying the concepts of L1 to learning L2. This research focuses only on the different forms of errors found in the writing of L2 owing to the influence of L1. The topic of L1 influence in learning L2 has already been discussed in different contexts, targeting different groups of learners. In addition, the researcher has already completed a small-scale study on a similar topic and found that there are eight types of errors in using English when they write in English as a second language. It is decided to validate the findings of the previous research at a national level and to compare the two national languages of Sri Lanka, focusing on Sinhala-speaking and Tamil-speaking students covering three different faculties of South Eastern University. Quantitative and qualitative methods will be employed in collecting the data for the research. The real situation of learning a second language at a tertiary level and the influence of L1 on L2 learning are considered individually in this research. The study will further investigate the types of errors and identify the most common influenced part of speech among the errors in both languages, and it will remarkably contribute to all who wish to improve the quality of teaching and learning English as a second language, especially those whose mother tongues are Tamil or Sinhala.

***Keywords:*** *Language learners, Mother tongue, Mother tongue influence, Second language, Sinhala*

# GENDER TRIBULATIONS IN MAHESH DATTANI'S ON A MUGGY NIGHT IN MUMBAI

Dr. V. Francis
St Joseph's College (Autonomous),
Tiruchirappalli, Tamil Nadu,
India.
*francis_en1@mail.sjctni.edu*

**Abstract:**

Mahesh Dattani is a multifaceted contemporary Indian English playwright who stormed modern Indian theater with his explosive subjects. He brought to light the hidden and ignored realities, which were often overlooked by the main stream of Indian society. Unlike the other playwrights who always dwell upon the beaten-track man-woman relationship, he boldly ventures to speak for the gender minorities who are looked down upon by the common people. Dattani writes about tabooed themes such as homosexuality, lesbianism, and being gay or transgender. He does not merely write to shock the public but to arouse awareness of the invisible problems faced by sexual minorities—mainly their repressed desires, innermost emotions, loneliness, and harassment. The plays of Mahesh Dattani give a clarion call to the issues related to gender marginals: lesbian, gay, bisexual, transgender, queer, intersex, and asexual. *Dattani's On a Muggy Night in Mumbai* is completely focused on the lives of gays. This paper explores the emotional angst experienced by Prakash (Ed) and his gay partner, Kamlesh. The entire play is muggy in nature—the characters, the place and its surroundings, the sounds, the ambience, and the issue. The play inquires into the ecstasy and agony of the same-sex love confined to gays and lesbians. This paper also examines the typical slang used by gays in their day-to-day conversation and communication.

***Keywords:*** *Bisexual, Gay, Gender, Lesbian, Transgender*

# யுத்த மௌனிப்புக்குப் பின்னரான இலங்கையில் சமயங்களின் இயங்கியல்

Dr. Thiruchelvam Selvamanoharan
Department of Saiva Siddhanta,
University of Jaffna.
tselvan@univ.jfn.ac.lk

**ஆய்வுச் சுருக்கம்:**

சமயம் என்பது அன்பையும் அமைதியையும் சமாதானம் நிறைந்த வாழ்வையும் நல்குவதை அடிப்படையாகக் கொண்டதாகும். ஆனால் இலங்கைச் சூழலில் சிறுபான்மைச் சமயத்தைப் பெரும்பான்மைச் சமயம் காலந்தோறும் ஒடுக்கு முறைக்கு உள்ளாக்கி வருகின்றது. இலங்கையினது தேசியம் என்பது இனம், மொழி, சமயம் என்ற முக்கூட்டின் வழி உருவான 'சிங்கள பௌத்த' தேசியவாதமாகவே அரச அதிகாரத்தினாலும் பெரும்பான்மை இன மக்களாலும் கருதப்பட்டு வருகின்றது. இனமும் மொழியும் தேசிய இனமொன்றின் அடையாளமாக அமைதல் ஆச்சரியமன்று. அங்கு சமயமும் இணைந்து கொள்ளுதல் முக்கியத்துவம் வாய்ந்த விடயமாகின்றது. நவகாலனிய இலங்கையில் 1956 இல் உருவான தனிச்சிங்களச்சட்டம், இலங்கை இலங்கையரசு பௌத்தத்துக்கும், பௌத்த சாசனத்துக்கும் முதன்மையும் பாதுகாப்பும் அளிக்க வேண்டும் என யாப்புச் சீர்திருத்தம், இன விகிதாசார வாக்கெடுப்பு, உயர்தரப் பரீட்சையில் வெட்டுப்புள்ளி முறைமை போன்றன சிறுபான்மை இன மக்களை உபதேசத்தில் சுதேசத்தில் புறந்தள்ளின; ஒடுக்கு முறைக்கு உள்ளாக்கின. இதன்வழி இலங்கையில் மதக்கலவரங்களும், இனக்கலவரங்களும் அதிகம் இடம்பெறத் தலைப்பட்டன. எதிர்ப்பியக்கங்கள் உருவாயின. இவை நாற்பதாண்டு கால உள்நாட்டு யுத்தத்துக்கு அடிப்படையாயிற்று. யுத்த மௌனிப்புக்குப் பின்னரான இலங்கையில் சமயங்களினது 'சமய இயங்கியல்' நிலைகள் எவ்வாறு நிகழ்ந்து வருகின்றது, இலங்கையின் யதார்த்த நிலை என்பவற்றை அறிதல் இந்த ஆய்வின் நோக்கமாகும். சமயங்களுக்கு இடையிலான முறுகல்கள், அவற்றால் சமூகங்களுக்கு இடையே ஏற்படும் தாக்கங்கள், சமய சமூக நல்லிணக்கத்தினால் ஏற்படக்கூடிய மாற்றங்கள் என்பனவற்றை அறிதல் துணை நோக்கமாகும். யுத்தமானது மௌனிக்கச் செய்யப்பட்ட கடந்த 14 ஆண்டுகளில் இலங்கையினுடைய இன, சமூக, அரசியல், பொருளாதாரம், கலை, பண்பாடு உள்ளிட்ட தளங்களில் சமயங்களின் இயங்கியல் - அவற்றின் அரசியல் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது, அது இலங்கையை எத்தளத்துக்கு இட்டுச் சென்றுள்ளது என்பது இங்கு ஆய்வுப் பிரச்சினையாக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. இந்த ஆய்வில் வரலாற்று முறை, விபரண முறை என்பனவற்றோடு ஒப்பீட்டு முறை ஆய்வும் பயன்படுத்தப்பட்டுள்ளது. யுத்தம் மௌனிக்கச் செய்யப்பட்ட பின்னரான இலங்கையின் யதார்த்த நிலையையும் சமயங்களின் இயங்கியலையும் இந்த ஆய்வு வெளிப்படுத்தியுள்ளது.

***திறவுச்சொற்கள்:*** *எதிர்ப்பியக்கம், சமய இயங்கியல், தனிச்சிங்களச்சட்டம், தேசியவாதம், நவகாலனிய இலங்கை*

# PANEL OF REVIEWERS

| | | |
|---|---|---|
| 1. | Prof. V. Gunaretnam | Eastern University, Sri Lanka |
| 2. | Prof. T. Krishnamohan | Eastern University, Sri Lanka |
| 3. | Prof. S. Santhirasegaram | Eastern University, Sri Lanka |
| 4. | Prof. K Rajendram | Eastern University, Sri Lanka |
| 5. | Prof.J.Kennedy | Eastern University, Sri Lanka |
| 6. | Prof.(Mrs)A.Murugathas(Emeritus Professor) | Eastern University, Sri Lanka |
| 7. | Prof.Jeyapraba Suresh | Eastern University, Sri Lanka |
| 8. | Prof.T.Mukunthan | Open University of Sri Lanka |
| 9. | Prof. ALM. Riyal | South Eastern University of Sri Lanka |
| 10. | Prof. SM. Ayoob | South E astern University of Sri Lanka |
| 11. | Prof. MAM. Fowsar | South Eastern University of Sri Lanka |
| 12. | Prof.M.I .M. Kaleel | South Eastern University of Sri Lanka |
| 13. | Prof.F.M.Nawastheen | Open University of Sri Lanka |
| 14. | Prof..A..M..M Navaz | South Eastern University of Sri Lanka |
| 15. | Dr. M. Nadira | Eastern University, Sri Lanka |
| 16. | Dr.V.Kunapalasigam | Eastrn University ,Sri Lanka |
| 17. | Dr. S.Umashankar | Eastern University, Sri Lanka |
| 18. | Dr.Roshini Murugupillai | Eastern University,Sri Lanka |
| 19. | Dr.R. Premkumar | Eastern University, Sri Lanka |
| 20. | Dr. A.Nithlavarnan | University of Jaffna |
| 21. | Dr.Youhasan | Eastern University,Sri Lanka |
| 22. | Dr.Rajini Subramaniyasarma | Open University of Sri Lanka |
| 23. | Dr. M. Riswan | South Eastern University of Sri Lanka |
| 24. | Dr.M.I.F.Kareema | South Eastern University Sri Lanka |
| 25. | Dr.N.Pushparajah | Eastern University,Sri Lanka |
| 26. | Dr.K.Srikarunaakaran | Eastern University,Sri Lanka |
| 27. | Dr. S.Jeganathan | Eastern University, Sri Lanka |
| 28. | Dr.N.Piratheeparajah | University of Jaffna |
| 29. | Dr.Vijitha Paheerathan | Eastern university ,Sri Lanka |
| 30. | Dr.Vanathy Pahirathan | Eastern University, Sri Lanka |
| 31. | Dr.T.Megarajah | Eastern University ,Sri lanka |
| 32. | Dr.M.Somathasan | Eastern University,Sri Lanak |

| | |
|---|---|
| 33. Dr.Arularasi Balakrishnan | University of Peradeniya |
| 34. Mrs. R. V. Francis | Eastern University, Sri Lanka |
| 35. Mr.A.J.Hussain | Eastern University, Sri lanka |
| 36. Mr. P. Sachithanantham | Eastern University, Sri Lanka |
| 37. Mr. R. Sahayaseelan | Eastern University, Sri Lanka |
| 38. Mr. K. Mathiseelan | Eastern University, Sri Lanka |
| 39. Mr. R. Kiruparajah | Eastern University, Sri Lanka |
| 40. Mr. G. Vigneswaran | Eastern University, Sri Lanka |
| 41. Mr. A. Yogarajah | Eastern University, Sri Lanka |
| 42. Mr. V. Alagaratnam | Eastern University, Sri Lanka |
| 43. Mr. A. Kanneraj | Eastern University, Sri Lanka |
| 44. Mrs. T Sachithanantham | Eastern University, Sri Lanka |
| 45. Mrs. V. Selvanayagam | Eastern University, Sri Lanka |
| 46. Mrs. R. Thakshaayini | Eastern University, Sri Lanka |
| 47. Mr. N. Vaman | Eastern University, Sri Lanka |
| 48. Mrs. Vijitha Thivakaran | Eastern University, Sri Lanka |
| 49. Mr.V.Pathmanandakumar | Eastern University, Sri Lanka |
| 50. Mr.K.Gnanaretnam | Open University of Sri Lanka |
| 51. Mr.Jeyaseelan | University of Peradeniya |
| 52. Mr. N. Subaraj | South Eastern University of Sri Lanka |